www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka

Jude

දිනමුරසු වාරමලර්

பக்கம் 20

மே.05–11,1996

ரூபா 11/00

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முர... 151

## மூன்றாம் போரின் முக்கிய திருப்பம்!



## வடபுலப் போரில் சூழும் நெருக்கடி



சினி விசிட்

எழுந்தது மலையகம்

## தமிழக தேர்தல் – ருசிகர காட்சிகள்

சூடு – சுவை – சுவாரசியம் ... தினமுரசு

படிப்பகம்

www.padippakam.com

# முரசம்

## தாங்குமா தமிழகம்?

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.

உள்ளன்பு என்றால் என்ன?
முரசுக்கும்- உங்களுக்குமிடையே
உள்ள பிணைப்பையும்
அதற்கு உதாரணம் சொல்லலாம்!

150 வது முரசுக்கு
எதிர்பாராதளவில்
உங்களிடமிருந்து
வசீகரமான வாழ்த்துக்கள்!

நினைவூட்டாமலேயே
நெஞ்சையள்ளும் விதமாக
வாழ்த்து மடல்கள்
கரம் சேர்ந்தது இன்ப அதிர்ச்சி!

இன்னொரு வியப்பும் உண்டு.
முதலாவது முரசு தொடக்கம்
149வது முரசுவரை
பத்திரமாய் சேர்த்துவைத்தவர்களில்
பலருக்கு ஒரேவிதமான சிந்தனை.

149 முரசுகளுக்கும் மத்தியில்
தங்கள் செல்லக் குழந்தைகளை
அமர்த்தி வைத்து படம்பிடித்து
அனுப்பியிருக்கிறார்கள்.

அதில் என்ன வியப்பென்றால்,
வெவ்வேறு ஊரிலிருக்கும்
முரசு வாசகர்களுக்கு
ஒரே விதமான சிந்தனை
எப்படி வந்தது என்பதுதான்!

ஒரே ஒரு வருத்தம்
சகல புகைப்படங்களையும்
வெளியிட இடப்பற்றாக்குறை;
மூன்று புகைப்படங்களை மட்டும்
வண்ணக்கலரில் வெளியிட்டுள்ளோம்.
ஏனையோருக்கு
முரசின் இதயத்தில் இடம்!

உங்கள் நேசங்களுக்கு
முரசு என்றென்றும்
உண்மை-நேர்மை-வெளிப்படைத்தன்மை
என்னும் தனித்துவங்களால்
விசுவாசமாயிருக்கும்!

■ ■

தேர்தல்-
இந்தியாவில் என்றாலும்
நம் கவனத்தையும் வெகுவாக
கவர்ந்து கொண்டிருக்கிறது!

குறிப்பாகவும்-சிறப்பாகவும்
தமிழக தேர்தல் முடிவுகள்
எப்படி அமையப்போகிறதோ

என்று எல்லோருமே
எதிர்பாத்திருக்கிறோமல்லவா.

தேர்தல்களம்
தூரத்தில் இருப்பதால்
கணிப்புக்களை துல்லியமாக
கூறுவதில் கஷ்டமுண்டு!

கடந்த ஐந்தாண்டுகளாக
செல்வி ஜெயலலிதாவின் ஆட்சி
சகிக்க முடியாதளவுக்கு சென்றது
உண்மையிலும் உண்மை!

கடந்துவந்த பாதையை
மறப்பவராகிவிட்டார் ஜெயலலிதா.
கிடைத்த வாய்ப்பை
அவர் சரியாகப் பயன்படுத்தியிருந்தால்
அவருக்கு நெருக்கடி என்பது
கிட்டவும் நெருங்கியிராது!

ரஜினியை அரசியலில்
ஒரு சக்தியாக உருவாக்கியதும்
ஜெயலலிதாவின்
ஆணவப் போக்குத்தான்!

தமிழ் நாட்டில்
முதல்வராக யார் வரவேண்டும்?
என்பதைவிட
யார் வரக்கூடாது?
என்ற கேள்வி உருவாகியதற்கு
ஜெயலலிதாவின்
ஆடம்பர அதிரடி அரசியலே
முழு முதல் காரணமாகியுள்ளது!

"நல்ல நண்பர்கள் கிடைப்பவர்கள்
பாக்கியசாலிகள்" என்றார் கவியரசு.
ஜெயலலிதாவுக்கு சசிகலா
கிடைத்தது அபாக்கியம்!
ஜெயலலிதாவை
நல்ல சந்திகளிடமிருந்து
பிரித்துவைத்த சாதனை
சசிகலாவையே சேரும்!

தப்பித்தவறி
ஜெயலலிதா மறுபடி வந்தால்
சசிகலா உபயத்திலும்
வெற்றிப் போதையிலும்
விபரீதம் பல விளையும்.
தமிழ்நாடு தாங்காது!

எதிர்க்கட்சிகளின் போட்டியால்
சிதறும் வாக்குகளை
மறுபடி அரியாசனம் ஏற
மலைபோல நம்பியிருக்கிறார் ஜெயா!

மொழியால் ஒன்றுபட்டவர்கள்
என்ற வகையில்
தமிழ நாட்டில்
நல்லது நடக்க வாழ்த்துவோம்!

■ ■

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை என்றென்றும் அன்புடன்
ஆசிரியர்

## எஜமான்களே செவிசாயுங்கள்

வேலை கொள்வோரை நாம் எஜமானர்கள் என்றழைக்கிறோம். எஜமானர்கள் என்றால் ஏதோ மேலான வகுப்பினர் என்று எண்ணுகிறோம். வேலைக்காரர்களை அடிமை போல நடத்துகின்றனர். ஆனால்-

எஜமானர்களுக்கும் வேலைக்காரர்களைப் பொறுத்தமட்டில் சில ஆன்மீகக் கடமைகள் உள்ளன. ஆம் அப்போஸ்தராகிய பவுல் எபேசியருக்கு எழுதிய நிருபத்தை வாசித்தால் உண்மை விளங்கும். ஆறாம் அதிகாரம் 9ஆம் வசனம் "எஜமான்களே, அப்படியே நீங்களும் வேலைக்காரர்களுக்கு செய்ய வேண்டியவைகளைச் செய்து; அவர்களுக்கும் உங்களுக்கும் அவர்களுக்கும் எஜமானவர் பரலோகத்தில் இருக்கிறார் என்றும், அவரிடத்தில் ஏற்றத் தாழ்வு இல்லை என்றும் அறிந்து கடுஞ்சொற்களை விட்டுவிடுங்கள்."

எல்லாருக்கும் மேலாக ஒரு எஜமானன் பரலோகத்தில் உள்ளான்; அவரிடம் தாழ்ந்தவன் உயர்ந்தவன் என்ற தன்மையே கிடையாது; எனவே நாம் ஏன் வித்தியாசம் காட்ட வேண்டும் ஏன்? இறைவனின் சாயலிலேதானே மனிதன் படைக்கப்பட்டான்!

"ஏழையும் எளிமையுமான கூலிக்காரனை ஒழுக்காதிரு. அவன் வேலை செய்த நாளில் தானே, பொழுது போகும் முன்னே, அவன் கூலியை அவனுக்குக் கொடுக்க வேண்டும். அவன் ஏழையும், அதின் மேல் ஆவலுள்ளவனுமாய் இருக்கிறான்"- (உபா 24:14-15) கூலியை கொடுக்காவிட்டால் என்ன நடைபெறும்? பதில் சொல்லப்படுகிறது. ஆம்-

"அதைக் கொடுக்காவிட்டால் அவன் உன்னைக் குறித்துக் கர்த்தரை நோக்கி முறையிடுவான். அது உனக்குப் பாவமாய் இருக்கும்" (உபா:24-15) எனவே, எஜமானர்களே சிந்தியுங்கள்.

-ஏ.பி.வி.கோமஸ்-

## ஆன்மீகம்



## நற்சிந்தனைகள்

முஹம்மத் (ஸல்) அவர்கள் அருளியதாக ஹஜ்ரத் அபுதர் (ரலி) அவர்கள் அறிவிப்பதாவது:

1. அல்லாஹ்வுக்குப் பயந்து வாழ வேண்டும் என்று உங்களுக்கு நான் உபதேசிக்கின்றேன். நிச்சயமாக அதுதான் எல்லாச் செயல்களுக்கும் அடிப்படையாக இருக்கின்றது.
2. குர்ஆன் ஓதுவதையும் அல்லாஹ்வை திக்ரு செய்வதையும் கடைப்பிடித்து வருவீராக! அது வானுலகில் உம்மைப்பற்றி நினைவு கூறப்படுவதற்கும் பூமியில் உனக்கு ஒளி கிடைப்பதற்கும் காரணமாகும்.
3. அதிகமான நேரம் மௌனமாக இருப்பீராக! நன்மையானவற்றைத் தவிர வேறு எதனையும் பேச வேண்டாம். இது ஷைத்தானை விரட்டி, தீனுடைய வேலைகள் செய்வதற்கு உதவியாக இருக்கும்.
4. அதிகமாக சிரிக்காதீர் அதனால் இதயம் இறந்துவிடும் முகத்தின் ஒளிபோய்விடும்.
5. ஜிஹாது செய்து வருவீராக! இது என்னுடைய உம்மத்தினரின் துறவறமாகும்.
6. மிஸ்கீன்களிடம் அன்பு கொண்டு அவர்களிடம் அதிகமாக உட்கார்ந்திருப்பீராக!
7. உலக விசயத்தில் உம்மை விடத் தாழ்ந்த நிலையிலிருப்பவர்களை கவனிப்பீராக! உம்மை விட உயர்ந்த நிலையிலிருப்பவர்களைக் கவனிக்க வேண்டாம். உம்மைவிட உயர்ந்தவர்களைக் கவனிப்பது அல்லாஹ் உமக்கு அருளியுள்ள பாக்கியங்களை மதிப்பிழக்கச் செய்வதாகும்.
8. உறவினர்கள் உம்மை வெறுத்தாலும் அவர்களுடன் நீர் சேர்ந்து வாழ்வீராக!
9. கசப்பாக இருந்தாலும் சரி சத்தியத்தைக் கூற பயப்படாதீர்.
10. அல்லாஹ்வுடைய விசயத்தில் எவருடைய பழிப்பையும் பொருட்படுத்தாதீர்.

கே.பீ.எஸ். ஆயிஷா, துந்துவை.

## கவிதைப் போட்டி இல.148

### பரிசுக்குரிய கவிதை

************************



### யார்?

திசையெங்கும் இருட்டை
பூசியது யாரோ?
தெருவெங்கும் சாவை
விதைத்தவர்கள் எவரோ?
நம் தலைவிதியை தெருவில்
வீசியது யாரோ?

ச.பாலச்சந்திரன், முள்ளியவளை, முல்லைத்தீவு.

### மறைவிடம்

"தொடர்ந்து வரும் குண்டுகளும்
ஷெல் வெடியின் அதிர்வுகளும்
உடலை நாசம் செய்திடாமல்
ஒளிந்திருக்கேன் மறைவிடத்தில்"

முஸ்தபா-சித்திறெசீதியா, ஏறாவூர்-06

### பறிக்காதீர்

பூக்களைப் பறித்து
போருக்கு அர்ச்சனை.
பூவொன்று
இங்கே ஒளிந்திருக்கிறது.
தயவு செய்து பறிக்காதீர்!

அ.பிரபாகரன்,
மட்டு/பெரியபோரதீவு.

### தஞ்சம்

துள்ளித்திரியுமிந்த,
துடிப்பான வயதிலே.
ஓயாத சிந்தனையில்,
ஒடுங்கி இருப்பதென்ன?
வெடியோசை கேட்டு,
விரைந்தோடி வந்தோ?

பூ.இதயரெத்தினம்,
ஆரையம்பதி-03

### புத்தாண்டு

கப்பலில்
பாடசாலை துணியும்
யுத்த தளபாடமும்
வருகிறதாம்.
ம்.........
பார்ப்போம்.

சுபாவரன், கண்டி.

### காத்திருப்பு...

கடல் நீர் வற்றும் என்று
காத்திருக்கும் பையன்

செல்வி.எஸ்.வதனி,
வெள்ளவத்தை.

### புதுமொழி

தீராத போராலே உன்னை..
பாடசாலைக்கு போகாதே
என்றாளோ உன் அன்னை!!!

தேன்மொழி, கொழும்பு.

### உழவன் மகன்

தரணியில் தகப்பன்,
உழவு செய்ய;
பரணில் தனயன்,
உளவு பார்க்கிறான் வானத்தை!

எஸ்.ராஜ்கமல், திஹாரிய.

### விளங்கவில்லையா?

ஏட்டிலும் இல்லை. பேச்சிலும் இல்லை
உண்மைச் சங்கதி!- சொந்த
வீட்டிலும் இல்லை, நாட்டிலும் இல்லை
எமக்கு நிம்மதி!
வீதிக்கு வந்தேன் விடிவைத் தேடி
விடியுமா? கதை முடியுமா?
இறைவா! யாருக்கும்
விளங்கவில்லையே நம்கதி!

பஹார்தீன், மடவளை.

### பாரதி எங்கே?

"ஓடிவிளையாடு பாப்பா
நீ-ஓய்ந்திருத்தலாகாது பாப்பா"
சொன்னபாரதி -
தேடப்படுகிறார்.
எங்கே ஓடுவது?
வழியெல்லாம் பொறி வெடிகள்
வானமெங்கும் ஷெல் மழைகள்.

ஹஜேந்தினி மகேந்திரன், மட்டக்களப்பு.

## கவிதைப் போட்டி இல-151



**கவனியுங்கள்** எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல் தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பவேண்டிய கடைசித் திகதி 11.05.1996.

-முகவரி-
கவிதைப் போட்டி இல.151,
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல-1772,
கொழும்பு.

### ஜாக்கிரதை!

யுத்தப் பேய்
சுதந்திரமாய் வாழுமட்டும்
வயது பேதமில்லா
பிணம் குவியும்!
சிறு அரும்பே!
ஜாக்கிரதை!

செல்வி. முத்துலெட்சுமி,
வட்டவளை.

### இலட்சியம்

நான்,
சதமடிக்கும் அரவிந்தாய்..
பந்தெறியும் முரளியாய்..
பாய்ந்தோடும்,
அஸாருதீனாயாயுமாவேனோ?
அழியுமிந்த மண்ணிலே?

ஏ.எல்.ஏ.சிப்லி, காத்தான்குடி-05.

### ஏக்கமதில் இதயம்

ஒருபிடி சோற்றுக்காக
ஓடிவந்து நான் இங்கிருப்பேன்.
ஓயாத போரினால் ஒழிந்த
என் தாய் எங்கிருப்பாள்?

தெ.லோஜனா, கொழும்பு-15.

---

**தி**த்திக்கும் தினமுரசில் ரசிகனது படைப்புக்கள் யாவும் வியக்க வைப்பதுடன் விறுவிறுப்பாகவும் உள்ளது. திகில் கதை மன்னன் ராஜேந்திர குமாரின் "நீ! நீயா?" படு சூப்பராக உள்ளது. படைப்புக்களுக்கு நன்றி. இன்னும் பல படைப்புகளை புகுத்தி முரசு வளம் பெற வாழ்த்துகிறேன்.

அன்பு வாசகன் மு. சரவணன், டெமேரியா, பசறை.

ஈழமணித் திருநாட்டிலேயே, பத்திரிகை உலகிலேயே, அரசியலில் வெளிப்படைத்தன்மை, போட்டிகளில் நேர்மை, செய்திகளில் கண்ணியம் சத்தியம் போற்றும் தினமுரசே!

போட்டிக்கூப்பன் பிரசுரிக்கும் பகுதியை மட்டும் மாற்றி விடாதே. சினிமாப் பகுதி வெட்டப்படுவதில் ஆட்சேபனையில்லை. அதேபோல் தொடர்க் கதைகளையும் தனித்தனியவே பிரசுரிக்க முயலுங்கள். 'தாய்' கதை ஒரு பக்கம் அடுத்த பக்கம் 'நீயா' இது பெரிய இக்கட்டாகும். கதைகள் சேகரிப்போருக்கு இது நெருக்கடியாகும். எனவே இனிமேல் இது போன்ற சிரமங்களை எம் போன்ற வாசகர்களுக்காக தவிர்ப்பீர்களா?

கம்மல்துறை பாத்தி மாபர்மிலா, கொச்சிக்கடை.

அழகுத் தினமுரசே!

உன் தேகத்தின் பாகங்களாம் காதிலை பூ கந்தசாமி, அதிரடி அய்யாத்துரை எக்ஸ்ரே ரிப்போர்ட், மனித வெடி குண்டு சுப்பர்ப்பா!

அதுவும் நீ! நீயா! திகில் தொடர் அடுத்து என்ன என்ன என்று தவிக்க வைக்கிறது. ஏப்.07-13,1996 இதழில் நீ கொண்டிருந்த வம்பரங்கம் "ரணதுங்காவுக்கு வலை" நடைமுறையை தோல் உரித்திருந்தது. உன்னில் இன்னும் பல புதுமைகளை எதிர்பார்க்கிறேன்.

எஸ். மாலன்பன், வவுனியா.

வளர்முரசே நீ தரும் தொடர்கள் அனைத்தும் என் சிந்தையை தொட்டுச் செல்கின்றன. ரசிகனின் இலக்கிய நயமோ என் ரசனையை தூண்டுகின்றது. பாப்பா முரசு அறிவுக்கு விருந்து படைக்கிறது முரண்பாடுகள், மரணங்கள சிறுகதைகள் சூப்பர். எங்கே ஹலோ டாக்டரை காணவில்லை?

வ. பிர்தௌஸ், கிண்ணியா-03.

திகில் கதை மன்னன் ராஜேந்திர குமாரின் நீ! நீயா? தொடர் கதை மிகவும் விறுவிறுப்பாகப் போகின்றது. அத்தோடு கார்லோஸின் சாகசங்கள் மின்னல் வேகத்தில் போகின்றது. ராஜேந்திரகுமாருக்கும் எனதன்பின் ரசிகனுக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

என்.ரீ.அமீனுதீன், அக்கரைப்பற்று-06.

## வாசக(ர்)சாலை

புத்தாண்டை முன்னிட்டு, முன்னட்டை தந்த "கவிதை வரிகள்" இனிமை பாடின!"சின்ன வரிகள் சிறந்த கருக்கள்" தந்து சிறப்பித்த "தேன் முரசுக்கு" எங்கள் பாராட்டுக்கள்.

உள்ளம் அள்ளும் அற்புதமான தொடரில் "கார்லோஸ்" கலக்குகிறான். "நாயக"த்தனத்திலும் +"வில்ல"த்தனத்திலும் "தூள்" பரத்துகிறான்! தொடர்தரும் "ரசிகனுக்கு" கைகுலுக்கு! "காதலியின் பிரிவு" தரும் இன்ப சோகத்தைப் போல; "முரசின் ஒரு வாரப்பிரிவு" நமக்கு!.....

வாஹிட், ஏ.குத்தூஸ்.

போச்சு! போச்சு எல்லாமே போச்சு!

நடுப்பக்க கிளு கிளுப்பை பார்த்ததிலிருந்து இதயத்துடிப்பே போச்சு. கிரிக்கெட் செய்திகளின் ஆக்கிரமிப்பு, சிந்தியாவின் முத்தான பதில்களுக்கு வந்துவிடுமோ பாதிப்பு.

ஜே.எம். கியாஸ், மியாத், நஜீம், சகீத்,அக்ரம்,
கிண்ணியா-04.

அன்புள்ள ஆசிரியருக்கு,

தினமுரசு வாரமலரை ஆர்வத்துடன் படித்து வருகிறேன். அதில் வெளியாகும் இராஜதந்திரியின் கட்டுரைகள் மிகவும் யதார்த்தமானவையாகவும், பொருள் பொதிந்தவையாகவும் உள்ளன. ஆசிரியர் தலையங்கம் சுருக்கமாகவும், ஆணித்தரமாகவும் இருக்கின்றன.

வ. சின்னரத்தினம்,
தெஹ்ரான், சவுதி அரேபியா.

இராஜதந்திரியார் விடுதலைப் புலிகள் தொடர்பான விமர்சனங்களை தவிர்ப்பதுபோல தெரிகிறது. தமிழில் எழுதும் பல்வேறு விமர்சகர்கள்போல இராஜதந்திரியாரும் மாறிவிட வேண்டாம். தவறுகளை விமர்சித்தல் என்பது குறிப்பிட்டவர்களுக்கு எதிரானது என்ற கருதுகோள் நிலவுதல் உண்மையே. அதற்காக விமர்சகர்கள் பின்நிற்கலாமா? பின்னர் முரசுக்கும் வித்தியாசம் இல்லாமல் போய்விடுமே.

எம்.சந்திரமோகன், வவுனியா.

கார்லோஸ் ஒரு போராளியாக அறிமுகமாகி, வில்லனாக மாறிக் கொண்டிருக்கிறான். 'கார்லோஸ் நீயுமா?' என்று கேட்கலாம் போல் இருக்கிறது.

எஸ்.என்.ரிஸ்மினா,
காத்தான்குடி.




மடல் அனுப்பியவர்களில் இடம் உள்ளவரை பெயர் பதிவு செய்யப்பட முடிந்தவர்கள்:

- ★ ஏ.சி.எம்.மஸ்ஹீர், பலாங்கொடை.
- ★ முஹம்மது லாபீர், சாய்ந்தமருது.
- ★ என்.எம்.மியாத், பெரியாற்றுமுனை-07.
- ★ டி.சத்தியசீலன், பொதுஷர.
- ★ செல்வி ஏ.கே.ஏ.நிஷா, கம்பிரிகஸ்வெவ.
- ★ ஜெ.யேசுதாசன், அப்புத்தளை.
- ★ என்.சசி, தெமட்டகொட.
- ★ ரி.சந்திரன்,நேரியகுளம்.
- ★ நபீலா நஸ்புள்ளா, கிண்ணியா-06.
- ★ எஸ்எம்.ஏ.சுஹைல், அ/நிக்கவெவ.
- ★ வி.வாணி, கல்முனை.
- ★ செ.ஜீவா, டிம்புல.
- ★ பருசியா கலீல், ஹேறப்பொள.
- ★ ஏ.ஜெ.இப்திகார் பானு, கந்தளாய்-1
- ★ புஸ்பா ஜெயகாந்தன், மட்/நாவற்குடா.
- ★ ஜாபீர், அட்டாளச்சேனை-02.
- ★ ஐ.றியாஸ், ஓட்டமாவடி.
- ★ செல்வி சித்ரா முருகையா, அவிசாவளை.
- ★ ஜே.எம்.சிப்பால், நிக்கவெவ.
- ★ செல்வி.கே.தமயந்தி, நாவற்குடா.
- ★ ஏ.வேல்முத்து, உடப்பு.
- ★ எம்.எச்.எம்.ஹுஷைன், மூதூர்.
- ★ செல்வி.சி.யுவராணி, பிட்டகந்த.
- ★ க.யோகேஸ்வரன், கஹகல்லையூர்.
- ★ கை.சாஹிரா, கிண்ணியா-05.
- ★ ஆர்.தம்பித்துரை, பதுளை.
- ★ சி.புஸ்பராஜ், இறக்குவானை.
- ★ கே.வின்சன்ட், சத்துருக்கொண்டான்.
- ★ ஏ.தயாளன், மொன்றியல்-கனடா.
- ★ வி.நகிமா, குவைட்.
- ★ கோவி-முத்து, வெல்லம்பிட்டி.



படிப்பகம்

www.padippakam.com

# சர்வதேச மத்தியஸ்தம்! நிபந்தனையற்ற போர் நிறுத்தம்!

# புலிகளது சர்வதேச தலைமையகம் கோரிக்கை!

## தமிழ் கட்சிகளும் சர்வதேச மத்தியஸ்தத்துக்கு ஆதரவு!

**"சர்வதேச மத்தியஸ்தத்துடன் இனப்பிரச்சனைக்கு தீர்வு காண்பதற்கு உகந்த சூழல் உருவாக்கப்படவேண்டும்." இவ்வாறு இலண்டனில் உள்ள புலிகளின் சர்வதேச செயலகப் பொறுப்பாளர் அன்டன் ராஜா தெரிவித்துள்ளார். சர்வதேச மத்தியஸ்தம், நிபந்தனையற்ற போர் நிறுத்தம்-இரண்டையும் வலியுறுத்தி வெளிநாடுகளில் உள்ள புலிகளின் கிளைகள் இராஜதந்திர முயற்சிகளை மேற்கொண்டுள்ளன.**

சூரியக்கதிர் 2 நடவடிக்கையின் பின்னர் இலண்டனிலுள்ள புலிகளது சர்வதேச செயலகப் பொறுப்பாளர் அன்டன் ராஜா பின்வருமாறு தெரிவித்துள்ளார்:

"சர்வதேச சமூகம் தலையிட்டு இலங்கை அரசின் இராணுவ நடவடிக்கைகளை தடுத்து நிறுத்த முன்வரவேண்டும். இராணுவ நடவடிக்கைகள் தொடர்வது மக்களின் அவலத்திற்கும், அழிவுகளுக்குமே வழி வகுக்கும்.

சர்வதேச மத்தியஸ்தம் மூலமான தீர்வு ஏற்படக்கூடிய உகந்த சூழல் தோற்றுவிக்கப்பட வேண்டும்.

இராணுவ அழுத்தங்கள் மூலமாக அரைகுறைத் தீர்வுகளைத் திணிக்க முற்பட்டால் விடுதலைப் புலிகள் அதனை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்." என்று அவர் தெரிவித்தார்.

தற்போதைய இராணுவ நடவடிக்கைகள் மேலும் தொடராமல் சர்வதேச அழுத்தங்களை ஏற்படுத்த வேண்டும் என்பதில் புலிகளது வெளிநாட்டுக் கிளைகள் முக்கிய கவனம் செலுத்துகின்றன.

விடுதலைப் புலிகள் உத்தியோக பூர்வமாக போர் நிறுத்தக் கோரிக்கை விடுத்தால், பலவீனமாக கருதப்படும் என்பதால், வெளிநாடுகளில் உள்ள தமிழர் அமைப்புக்கள் மூலமாக அங்குள்ள அரசாங்கங்களுக்கு கோரிக்கைகள் முன்வைக்கப்படுகின்றன.

யாழ்-மறை மாவட்ட ஆயர் தோமஸ் சௌந்தரநாயகமும், போர் நிறுத்தம் ஒன்றை கோரியிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

### யாழ் நிலவரம்

யாழ்-குடாநாட்டில் மினி பஸ்களிலும், கார்களிலும், ஸைக்கிள்களிலும் தமது உடமைகளை ஏற்றிக்கொண்டு மக்கள் தமது வீடுகளுக்குத் திரும்புகின்றனர்.

யாழ் நகரில் மோட்டார் சைக்கிள்கள், கார்கள் போன்றவையும் ஓடித்திரிகின்றன.

கடந்த 5 வருட காலத்தில் பட்ட துன்பங்களைவிட, கடந்த ஐந்தரை மாதங்களில் இடம் பெயர்ந்து அனுபவித்த துயரமே அதிகம் என்று மக்கள் தெரிவிக்கின்றனராம். அதனால்தான் தமது சொந்தப் பகுதிகளுக்கு திரும்புவதற்கு கணிசமானளவு மக்கள் முன்வந்தனர்.

கிளாலிப் போக்குவரத்துப் பாதை தற்போது படையினரின் கட்டுப்பாட்டில் இருக்கிறது.

எனினும், தற்போது யாழ் குடாநாட்டில் உள்ள மக்கள் இங்கிருந்து வேறு பகுதிகளுக்கு போக்குவரத்து செய்வதுதான் பிரச்சனையாகியுள்ளது.

ஆனையிறவுப் பாதை அல்லது பூநகரிப் பாதை திறக்கப்பட்டாலும் கூட மறுபுறத்தில் உள்ள புலிகள் அனுமதிக்காவிட்டால் மக்கள் போக்குவரத்தில் ஈடுபடமுடியாது.

கிளிநொச்சி, வன்னி நிலப்பரப்புக்களில் புலிகள் நிலை கொண்டிருப்பதால் யாழ் குடாநாட்டில் இருந்து தரைவழியாக வவுனியாவுக்கு மக்கள் வருவதை புலிகள் அனுமதித்தால்தான் பயணம் நடக்கும்.

அதனால் கடல்வழியாக கப்பல் போக்குவரத்து வசதிகளை அரசாங்கம் செய்து கொடுக்கலாம் என்றும் நம்பப்படுகிறது.

### தமிழ் கட்சிகளின் நிலை

இனப்பிரச்சனைக்கு சர்வதேச மத்தியஸ்தத்துடன் தீர்வு காணப்படவேண்டும் என்று ஐந்து தமிழ் கட்சிகள் மத்தியில் ஒத்த கருத்து ஏற்பட்டுள்ளது.

புளொட், ஈ.பி.ஆர்.எல்.எஃப்., ரெலோ, ஈரோஸ், ஈ.பி.டி.பி. ஆகிய ஐந்து தமிழ் கட்சிகளும் சர்வதேச மத்தியஸ்தம் தொடர்பான ஒருமித்த முடிவில் இருக்கின்றன.

அரசு-புலிகள்-எதிர்க்கட்சி ஆகியன மூன்று தரப்புக்கும் அழுத்தம் கொடுக்கக் கூடிய மூன்றாவது சக்தி ஒன்று தலையிட்டால்தான் சகல தரப்பாரும் உடன்படக் கூடிய தீர்வு ஏற்படும் என்று அக்கட்சிகளின் வட்டாரங்கள் கூறியுள்ளன.

## 7000 பேர் யாழ் செல்ல விருப்பம்!

வவுனியா அரசாங்க அதிபர் காரியாலயத்திற்கு இதுவரை 7 ஆயிரம் பேர் வரையான யாழ்ப்பாண மக்கள் யாழ் தீபகற்பம் செல்வதற்கு விண்ணப்பித்துள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் அண்மைக்கால இராணுவ நடவடிக்கையையடுத்து யாழ் குடாநாட்டிலிருந்து இடம்பெயர்ந்து வவுனியாவில் அரச கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்குள் வந்து குடியேறியோராவர்.

இதைவேளை வவுனியாவிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் சமீப காலமாக காணிகளின் விலை மற்றும் வீட்டு வாடகைக் கூலிகள் அதிகரித்திருக்கக் காணப்பட்டிருந்தன.

உச்சப்பட்சமாக பேர்ச் ஒன்றின் விலை ரூபா ஐம்பதினாயிரத்திற்கும் குறையாமல் விற்கப்பட்டது. தற்போது யாழ் குடாநாடு அரச படையினரின் வசம் சென்றதையடுத்து, இடம்பெயர்ந்தோர் மீண்டும் தமது இல்லங்களுக்குச் செல்லவிருப்பதால், வவுனியா காணிகளின் விலையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் உள்ளூர் வாசிகள் சிலர் நிலங்களை வாங்குவதற்கு ஆர்வங் காட்டுகின்றார்கள் என்றும் எமது நிருபர் தெரிவிக்கின்றார்.

## இ.தொ.காவின் நம்பிக்கையில்லாப் பிரேரணை!

### தமிழ் கட்சிகள்-முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவில்லை

பொது நிருவாக உள்ளூராட்சி பெருந்தோட்டத்துறை பாராளுமன்ற விவகார அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்காவுக்கு எதிராக இ.தொ.கா. நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டுவரப்போவதாக அறிவித்திருந்தது.

ஐக்கிய தேசியக் கட்சியினதும், தமிழ் கட்சிகளினதும் ஆதரவை இ.தொ.கா. கோரியிருந்தது.

நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டுவரப்பட்டால் பாராளுமன்றத்தில் உள்ள தமிழ் கட்சிகள் அதனை ஆதரிக்கப் போவதில்லை என்பது திட்டவட்டமாக தெரிய வந்துள்ளது.

தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈ.பி.டி.பி, புளொட், மலையக மக்கள் முன்னணி, மற்றும் முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய கட்சிகள் நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவு வழங்கப் போவதில்லை என்று முரசுக்கு தெரிய வந்துள்ளது.

"இ.தொ.கா. தலைவர் தொண்டமான் அரசாங்கத்தில் அமைச்சராக இருக்கிறார். இ.தொ.கா. தலைவரான தொண்டமான் அரசாங்கத்தில் ஓர் அங்கமாக இருந்து கொண்டிருக்கும்போது, அவரது கட்சி கொண்டுவரும் நம்பிக்கையில்லாப் பிரேரணை பொருத்தமாகப் படவில்லை. எனவே இதில் நாமும் மூக்கை நுழைக்க விரும்பவில்லை" என்று தமிழ் கட்சி முக்கியஸ்தர் ஒருவர் முரசுக்குத் தெரிவித்தார்.

ஐ.தே.கட்சியின் நிலைப்பாடு மதில் மேல் பூனைபோல இருக்கிறது. இ.தொ.காவும் அரசாங்கமும் பிரச்சனைப்படுவதையும் அக் கட்சி விரும்புகிறது. அதேநேரம் இ.தொ.கா. தனது முடிவை இடைநடுவில் கைவிடக்கூடும் என்றும் ஐ.தே. கட்சி சந்தேகப்படுகிறது.

## கஷ்டப்பிரதேச அலவன்ஸ் எங்கே?

### மன்னாரில் அரச ஊழியர்கள் கண்டனம்!

(மன்னார் நிருபர்)

பயங்கரவாதப் பிரதேசங்களில் கடமை புரியும் அரச ஊழியர்களுக்கு வழங்கப்பட்டு வரும் கஷ்டப் பிரதேச அலவன்ஸ் திட்டத்தில் மன்னார்ப் பகுதி முற்றாகப் புறக்கணிக்கப்பட்டுள்ளமை குறித்து மன்னார் மாவட்ட, அரச, அரச கூட்டுத்தாபன ஊழியர் தொழிற்சங்கங்களின் ஒன்றியம் கடும் ஆட்சேபணை தெரிவித்துள்ளது.

மேற்படி அமைப்பின் அங்குரார்ப்பண வைபவம் அண்மையில் மன்னாரில் நடைபெற்றது. இங்குள்ள அனைத்து தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகளும் இதில் கலந்து கொண்டனர்.

மன்னார் மாவட்டத்திலுள்ள சகல தொழிற்சங்கங்களும் ஒன்றிணைந்து உருவாக்கப்பட்ட அமைப்பாக மேற்படி ஒன்றியம் விளங்குகிறது.

பின்னர் நடைபெற்ற கூட்டத்தில் பல முக்கியமான தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. விசேஷமாக கஷ்டப்பிரதேச அலவன்ஸ் பற்றி நீண்ட நேரம் விவாதிக்கப்பட்டது.

இவ்வாறே அரச ஊழியர்களுக்கான நஷ்டஈடு வழங்குவதிலும் இம் மாவட்டம் புறக்கணிக்கப்பட்டுள்ளதால் இது தொடர்பாக மேற்கொள்ள வேண்டிய நடிவடிக்கைகள் குறித்தும் இங்கு ஆராயப்பட்டது.

## புலிகளின் கைவசம்!

(ஏறாவூர் நிருபர்)

மட்டக்களப்பு-அம்பிளாந்துறையில் பயணிகள் சேவையிலீடுபட்ட இயந்திரப் படகொன்றையும், சேவையிலீடுபட்ட பஸ் ஒன்றையும் புலிகள் கடந்த வாரம் கடத்திச் சென்றுள்ளனர். இது போல் வந்தாறுமூலையில் வைத்துச் சமீப நாட்களாகப் புலிகள் பறித்துச் சென்ற அநேக வாகனங்களில் கூட்டுறவுச் சங்கமொன்றுக்குச் சொந்தமான சிறிய பஸ் ஒன்றை மாத்திரம் புலிகள் திருப்பி ஒப்படைத்துள்ளனர். ஏனைய வாகனங்கள் புலிகள் இன்னமும் தம்வசமே வைத்துள்ளனர். அண்மையில் தினமுரசில் புலிகள் சகல வாகனங்களையும் ஒப்படைத்துள்ளனர் என்று வெளியான செய்தி தவறானதாகும்.

## பாணும் பச்சை மிளகாயும் பகலுணவு!

### ஆசிரியர்களும் மாணவர்களும் நெருக்கடிக்குள்!

(ஏறாவூர் நிருபர்)

மட்டக்களப்-பதுளை வீதி, படுவான் கரை, வாகரை, கதிரவெளிப்பகுதிப் பாடசாலைகளில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களும், அங்குள்ள மாணவர்களும் பெரும் நெருக்கடி நிலையில் திண்டாடுகிறார்கள்.

சமீப மாதங்களாக பதுளைவீதி, படுவான் கரை, வாகரைப் பகுதிக்கான போக்குவரத்துச் சேவைகள் ஸ்தம்பித்துள்ளன. பதுளை வீதிக்கான போக்கு வரத்துச்சேவை, படைத்தரப்பின் அனுமதியுடன் உறுகாமம் வரை இடம்பெற்று வந்தது. எனினும் புலிகள் அண்மையில் பதுளை வீதியில் சில தாக்குதல்களை மேற்கொண்டதையடுத்து போக்குவரத்து முற்றாகவே நிறுத்தப்பட்டுள்ளது. கல், மண், விறகு ஏற்றிச் செல்லும் லொறி, உழவு இயந்திரம், மாட்டு வண்டி, துவிச்சக்கர வண்டிகளில்தான் பதுளைவீதி, படுவான் கரை, வாகரைப் பகுதிப்பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்கள் மட்டக்களப்பிலிருந்தும், ஏனைய நகர்ப்புறங்களிலிருந்தும் சென்று வருகிறார்கள்.

நீண்ட சோதனைச் சாவடிகளில் அதிக நேரம் காத்திருந்து படையிர் அனுமதித்தவுடன் நடந்து செல்ல பல மணிநேரம் எடுக்கிறது. மட்டக்களப்பிலிருந்தும் நகர்ப்பகுதிகளிலிருந்தும் அதிகாலையிலேயே செல்ல வேண்டியிருப்பதால் காலை உணவு, பகலுணவு என்பன கிடைப்பதில்லை. மாலை வீடு திரும்ப 5 மணிக்கு மேலாகிறது. பள்ளிக்கூடங்களைச் சுற்றியுள்ள பகுதிகளில் பாணும், வெங்காயம் அல்லது பச்சை மிளகாயுடன் பகலுணவு முடிகிறது என்று கூறுகிறார்கள் ஆசிரியர்கள். 20 கிலோ மீற்றர் வரையான தூரத்தை சில ஆசிரியர்கள் சைக்கிளில் ஓடி முடிக்கிறார்கள்.

பரீட்சைப் பாடத்திட்டங்களை முழுமையாக முடிக்க இயலாது ஆசிரியர்கள் தடுமாறுகின்றனர். பரீட்சை எழுதமுடியாது மாணவர்கள் திண்டாடுகின்றனர்.

## கூட்டுறவு சங்கங்களுக்கு 2 கோடி ரூபா நிதி நெருக்கடி

### மாவட்டச் செயலகத்திலிருந்து நிதி கிடைக்கவில்லை

(ஏறாவூர் நிருபர்)

உணவு முத்திரைக்கும் மற்றும் நிவாரண முத்திரைக்கும் உணவுப் பொருட்கள் வழங்கியதற்காக ஏறாவூர் தெற்கு, ஏறாவூர் வடக்கு மேற்குப் ப.நோ.கூ.சங்கங்களுக்கு 1 கோடி 14 இலட்ச ரூபாவும், வாழைச்சேனை கூ.சங்கத்திற்கு 98 இலட்ச ரூபாவும் மாவட்டச் செயலகத்தினால் வழங்கப்பட வேண்டியுள்ளது. எனினும் பல மாதங்களாக இப் பணம் கொடுக்கப்படாதுள்ளதால் கூட்டுறவுச் சங்கங்கள் பெரும் நிதி நெருக்கடியை எதிர் நோக்கியுள்ளன. வங்கிகள் கூட தமக்கு இப் பணத்தை ஈடு செய்யும் வகையில் கடன் தர முடியாத நிலையிலிருப்பதாக கூட்டுறவுச் சங்க வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதனால் தொடர்ந்து உணவு முத்திரைப் பொருட்களையும், அகதி நிவாரணப் பொருட்களையும் மீனவர், மற்றும் விவசாயிகளுக்கான நிவாரணப் பொருட்களையும். வழங்க முடியாத நிலையில் கூட்டுறவுச் சங்கங்கள் ஒரு புறம் கைவிரிக்கின்றன. இல்லாத இயலாத வறிய மக்கள் பல நெருக்கடிகளுக்கு மத்தியில் உணவுப் பொருட்களின்றி மறுபுறம் தத்தளிக்கிறார்கள்.

## ரஜினிமீது மனோரமா பாய்ச்சல்

தமிழக தேர்தல் பிரசாரத்தின்போது ரஜினிகாந்த்தை நேரடியாக தாக்கிப்பேசும் ஒரே ஒருவர் மனோரமாதான். ஏனையோர் ரஜினிமீது தனிப்பட்டரீதியான விமர்சனங்களை தவிர்த்து வருகின்றனர். ஜெயலலிதாவும் ரஜினியை காரசாரமாக விமர்சிப்பதை தவிர்த்துள்ளார்.

ஜெயலலிதாவுக்கு ஆதரவாக பிரசாரம் செய்யும் மனோரமா ரஜினிமீது குற்றம் சாட்டி பேசியிருப்பதாவது:

"மொட்டையடிச்சது கூட தெரியாம மயக்கத்தில் இருந்திருக்கிறார் உங்கள் தலைவர். ('மயக்கமா கலக்கமா?' பாடலைப் பாடுகிறார்) - நான் கேக்குறேன், உங்க தலைவர் தமிழ் நாட்டுக்கு என்ன செய்திருக்கிறார்? ஒரே ஒரு கல்யாண மண்டபம் கட்டியிருக்கிறார். அதிலும் உங்களை மாதிரி சாதாரண ஆளுங்க கல்யாணம் செய்ய முடியாது. ஏன்னா அதனோட வாடகை 25 ஆயிரம் ரூபாய்.

காமராஜர், அண்ணா, இந்திரா வழி வந்தவங்க எல்லாம் இன்னைக்கு இவர்தான் எங்களின் வழிகாட்டி என்று சொல்றாங்க. என்ன ஒரு கேவலமான பிழைப்பு?" இவ்வாறு மனோரமா பேசியிருக்கிறார்.

## வாக்களிப்பில் பெண்கள் முன்னணியில்!

### அ.தி.மு.க.வினர் தரப்பில் மகிழ்ச்சி

தமிழ் நாட்டில் நடைபெற்ற வாக்குப் பதிவில் பெண்களின் எண்ணிக்கை பலபகுதிகளில் அதிகளவில் காணப்பட்டது.

அதனையடுத்து ஜெயலலிதா தலைமையிலான அ.தி.மு.க. வினர் வெற்றி குறித்த நம்பிக்கையில் காணப்படுகின்றனர்.

ஜெயலலிதா பிரசாரம் செய்த தொகுதிகளில் பெண்களே பெருமளவில் திரண்டிருந்தனர். அதனால் பெண்களின் வாக்குகள் தமது அணியை வெற்றிக்கு இட்டுச் செல்லும் என்று அ.தி.மு.க.வினர் நம்பிக்கை கொண்டுள்ளனர்.

ஜெயலலிதாவுக்கு எதிராக ரஜினி, கருணாநிதி, மூப்பனார் போன்ற பலர் அணிவகுத்து நிற்பதால், பெண்களின் அனுதாபம் ஜெயலலிதாவுக்கு சாதகமாக இருந்தது என்று தேர்தல் களச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஜெயலலிதா போட்டியிடும் பர்கூர் தொகுதியில் அவரது வெற்றி வாய்ப்பு உறுதியாகிவிட்டது.

தமிழகத் தேர்தலில் போட்டியிடும் தலைவர்களில் கருணாநிதி, ஜெயலலிதா, அன்பழகன், பரிதி இளம்வழுதி, நாஞ்சில் மனோகரன், திருநாவுக்கரசு, சாத்தூர் ராமச்சந்திரன் போன்றவர்களது வெற்றி வாய்ப்பு தொடர்பான சந்தேகங்களுக்கு இடமில்லை என்று தகவல்கள் கூறுகின்றன.

## அதிகரித்துள்ள எரிபொருள் பதுக்கல் வியாபாரம்!

### கட்டணங்கள் திடீர் உயர்வு!

(ஏறாவூர் நிருபர்)

கடந்த ஒரு மாத்திற்கு மேலாக மட்டக்களப்பில் எரிபொருளுக்குப் பலத்த தட்டுப்பாடு நிலவி வருகிறது. மக்கள் எரிபொருளைத்தேடி தினமும் இடத்துக்கிடம் அலைகிறார்கள். இதேவேளை போதியளவு எரிபொருளை பதுக்கல் வியாபாரிகளிடமிருந்து அதிகரித்த விலையில் பெறக்கூடியதாகவுள்ளது. ஒரு லீட்டர் டீசலுக்குப் பதுக்கல் வியாபாரிகள் பழைய விலையிலிருந்து 4/= ரூபாவை உயர்த்தியிருப்பதாக தனியார் வாகனக்காரர்கள் தெரிவிக்கிறார்க்ள். சந்தர்ப்பத்தை நழுவ விடாத போக்குவரத்திலீடுபடும் தனியார் வாகனச் சொந்தக்காரர்கள் பஸ் கட்டணத்தை 2/= ரூபாவால் அதிகரித்துள்ளனர். இது ஏன் அதிகரிப்பு என்றால் "சத்தம் போடக்கூடாது, விருப்பமென்றால் வாகனத்தில் ஏறலாம்" என்று எச்சரிக்கின்றனர். இ.போ.ச.யினர் ஒரு சில பழைய பஸ்களையே சேவையில் விட்டுள்ளதால் மணிக்கணக்கில் பயணத்திற்காகக் காத்திருக்க வேண்டியிருப்பதோடல்லாமல் பயணம் தடைப்பட்டும் போகிறது.

ஒரு போத்தல் மண்ணெண்ணெய் 20/= ரூபா வரைகூட அதிகரித்திருந்தது. டீசல், பெற்றோல், மண்ணெண்ணெய், மெழுகுதிரி, டோர்ச் பற்றரி என்பனவற்றை வெளிச்சந்தையில் வாங்கமுடியாதுள்ளது. எனினும் இவற்றை பதுக்கல் வியாபாரிகளிடம் தாராளமாக வாங்கலாம். சிறுபோக விதைப்பு வேளையில் இந்த எரிபொருள் தட்டுப்பாடு இம்முறையும் ஏற்பட்டுள்ளது.

மட்டக்களப்புக்கான புகையிரதச் சேவைக்குத் தொடர்ந்து புலிகளின் அச்சுறுத்தல் இருப்பதே இந்த எரிபொருள் நெருக்கடிக்குக் காரணமென்று தெரிவிக்கப்படுகிறது.

புலிகளால் தொடர்ந்து பல மின்மாற்றிகள் தகர்க்கப்பட்டுவருவதால் பல பகுதிகள் இருளில் மூழ்கியுள்ளன. கடந்த வாரம் களுவாஞ்சிக்குடி, நாவலடி, புது முகத்துவாரம் ஆகிய பகுதிகளிலிருந்த 3 மின்மாற்றிகள் தகர்க்கப்பட்டன.

## சுவிஸில் பறந்த புலிக்கொடி

சுவிற்ஸர்லாந்தில் உள்ள புலிகள் இயக்கப் பொறுப்பாளர் முரளி உட்பட புலிகள் இயக்க உறுப்பினர்கள் கைதுசெய்து தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

அவர்களை விடுதலை செய்யுமாறு கோரி சுவிற்ஸர்லாந்தில் ஊர்வலம் ஒன்று நடத்தப்பட்டது.

புலிகள் இயக்கத்தின் பாரிஸ் பிரதிநிதி லோறன்ஸ் திலகரும் ஊர்வலத்தில் கலந்து கொண்டார். ஊர்வலத்தையடுத்து நடைபெற்ற கூட்டத்தில் புலிக்கொடியை ஏற்றி வைத்து உரையாற்றினார்.

26.04.96 அன்று நடைபெற்ற அந்த ஊர்வலத்திலும், கூட்டத்திலும், புலிகள் இயக்கத்தை குற்றவியல் அமைப்பாக சித்தரித்துக் காட்டுவதை நிறுத்துமாறு சுவிஸ் அரசுக்கு கோரிக்கை விடப்பட்டது.

'தமிழீழ பாதுகாப்பு நிதி'யும் கூட்டத்தில் வைத்து திரட்டப்பட்டது.

இச் செய்தி எழுதப்படும்வரை சுவிஸில் தடுத்துவைக்கப்பட்டுள்ள புலிகள் இயக்க உறுப்பினர்கள் விடுதலை செய்யப்படவில்லை.



படிப்பகம்

www.padippakam.com

# பதிப்பக திணைக்களத்தில் குளறுபடி!

## மறுக்கப்படும் கொடுப்பனவுகள்

வடக்கு கிழக்கு மாகாண பதிப்பகத் திணைக்களத்தில் நிர்வாகத் திறனின்மை காரணமாக ஊழியர்களுக்கு சம்பளவிடயத்தில் குளறுபடி நடப்பதாகத் தெரிய வருகின்றது.

சிற்றூழியர்கள் ஆறுபேர் இதனால் பாதிப்படைந்துள்ளனர். இவர்களுக்கு ஏனைய திணைக்கள ஊழியர்கள் போல் சம்பளம் வழங்கப்படுவதில்லை. நிரந்தர ஊழியர்களான இவர்களுக்கு புதிய சம்பள விகிதங்களுக்கேற்ப சம்பளம் வழங்கப்படுவதில்லை என்பதோடு வருடா வருடம் இடம்பெறும் சம்பள ஏற்றங்களும் வழங்கப்படவில்லை.

வளர்ந்துவரும் வாழ்க்கைச் செலவைச் சமாளிக்க முடியாத நிலையில் தங்களுக்கு நியாயமாகச் சேர வேண்டிய கொடுப்பனவுகளை வழங்கும்படி இவ்வூழியர்கள் கேட்கும் போதெல்லாம் திணைக்களம் நட்டத்தில் இயங்குவதால் எவ்வாறு சம்பளம் தரமுடியும் எனக் கேட்கப்படுகின்றதாம்.

'நட்டத்தில் இயங்குவதற்கு நிர்வாகம்தான் பொறுப்பு எடுக்க வேண்டும். அதுவுமல்லாமல் ஒரு திணைக்களம் எவ்வாறு இத்தகைய பதிலைக் கூடிமுடியும்?' என்று ஊழியர்கள் கொதித்துப் போயுள்ளார்கள்.

இத்திணைக்களத்தில் கணக்காளர் இல்லை, நிர்வாக உத்தியோகத்தர் இல்லை, எழுது விளைஞர் இல்லை, எனவே இவர்களுக்கான சம்பளக் கொடுப்பனவும் இல்லை. இந்த நிலையில் வருமானமும் இல்லையென்றால்...

ஒருபானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம்.

# 450 இலட்சத்தில் அபிவிருத்தி

(காத்தான்குடி நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள 8 பாடசாலைகள் சுமார் 450 இலட்சம் ரூபாய் செலவில் அபிவிருத்தி செய்யப்படவுள்ளதாக பிரதி, தபால் தொலைத்தொடர்புகள் அமைச்சர் அல்ஹாஜ் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் தெரிவித்தார்.

காத்தான்குடி மத்திய கல்லூரிக்கு 3 இலட்சம் ரூபாய் பெறுமதியான மரத்தளபாடங்களை அன்பளிப்புச் செய்த அமைச்சர், அங்கு உரைநிகழ்த்திய போதே இத் தகவலைத் தெரிவித்தார்.

# நீர்வழங்கல் சபையில் மொழி வரட்சி

(திருமலை நிருபர்)

திருக்கோணமலையில் நிலவும் கடும் வரட்சி காரணமாகப் பல இடங்களில் நீர்த் தட்டுப்பாடு நிலவுகிறது. நீர் அமுத்தக்குறைவால் உயரமான சில நகர்ப்பகுதிகளுக்குள் குழாய் நீர் விநியோகம் முற்றாகத் தடைப்பட்டுள்ளது.

உவர்மலையின் சில பகுதிகள் வாரக் கணக்கில் நீர் விநியோகம் இன்றிக் காய்ந்து போய்க் கிடக்கின்றன. சகல தேவைகளுக்கும் குழாய் நீரையே நம்பி இருக்கும் இவர்கள் குடிக்கக் கூட நீர் இன்றி அலையும் பரிதாப நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள்.

இவ்வாறே அலஸ்தோட்ட முகாம்களில் வாழும் மக்களும் நீர் விநியோகம் தடைப்பட்ட நிலையில் கஷ்டப்படுகிறார்கள். "தண்ணீர் பவுசர் ஒன்று ஓடித்திரிவதாகக் கேள்வி; அதனை இங்கே காணோம்." என்கிறார்கள், நீர் விநியோகம் அற்றுப்போன பகுதி வாழ் மக்கள்.

இதேவேளை நீர்வழங்கல் சபைக்கு மொழிவரட்சியும் ஏற்பட்டுள்ளதாக அதன் ஊழியர்கள் முரசு நிருபரிடம் கூறினர். தமிழ் அதிகாரிகளே தமிழ் ஊழியர்களுக்குச் சிங்களத்தில் கடிதங்களையும், அறிவுறுத்தல்களையும் அனுப்பத் தொடங்கியுள்ளனராம். இதனால் யாருக்கு லாபம் எனக் கேட்கிறார்கள் ஊழியர்கள்.

# கல்முனையில் கிளை திறக்க கோரிக்கை

(நிந்தவூர் நிருபர்)

அம்பாறை மாவட்டத்தின் கரையோரப் பிரதேச தமிழ், முஸ்லிம் மக்களின் நலன்கருதி இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் கிளை ஒன்று கல்முனையில் திறந்து வைக்கப்படவேண்டுமென கோரப்படுகின்றது.

கல்முனையில் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனக்கிளை ஒன்று 1981 ம் ஆண்டு திறந்து வைக்கப்பட்டதெனினும் 1984ம் ஆண்டு இக்கிளை திடீரென மூடப்பட்டது.

எனினும் இதுவரை இக்கிளையை மீண்டும் திறப்பதற்கு கூட்டுத்தாபனம் முன்வராமையால் கரையோரப்பிரதேச தமிழ், முஸ்லிம் மக்கள் காப்புறுதி தொடர்பான தமது தேவைகளுக்குப் பல்வேறு அசௌகரியங்கள், சிரமங்களுக்கு மத்தியில் அம்பாறையிலுள்ள இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனக் கிளையையே நாடவேண்டியுள்ளது.

இந்தமாவட்டத்தின் கரையோரப் பிரதேசத்தில் கூடுதலான காப்புறுதி செய்ய வேண்டிய வாகனங்கள், வர்த்தக நிலையங்கள் இருப்பதுடன், ஆயுள் மற்றும் காப்புறுதிகள் செய்த பொது மக்களும் அதிகம் பேர் உள்ளனர்.

எனவே மேலும் தாமதம் காட்டாது கல்முனையில், சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளத்தக்க கிளை ஒன்றைத்திறந்து வைப்பதற்கு இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் முன்வரவேண்டுமெனப் பொது மக்கள் கோருகின்றனர்.

# தூள் கிளப்பும் வடிசாராய வியாபாரம்

(நிந்தவூர் நிருபர்)

மீளக்குடியமர்த்தப்பட்ட தமிழ் மக்கள் வாழும் வளத்தாப்பிட்டி, மல்வத்தை கிராமங்களில் சட்டவிரோதமான வடிசாராய விற்பனை அமோகமாக நடைபெற்று வருவதாகப் புகார் தெரிவிக்கப்படுகின்றது.

இச்சட்டவிரோத விற்பனையைத் தடுத்து நிறுத்துவதற்கு மதுவரித்திணைக்கள அதிகாரிகள் முன்வரவில்லையென்றும், அவர்களது "மறைமுக" ஆதரவுடனேயே இந்த விற்பனை நடைபெற்று வருவதாகவும் கூறப்படுகின்றது.

மல்வத்தை, வளத்தாப்பிட்டிக் கிராமங்களில் வடிசாராய விற்பனை தாராளமாக நடைபெறுவதால், பலர் கண்பார்வைக்குறைவுக்கு உள்ளாகியிருப்பதுடன், இதனை அருந்துவதால் அடிக்கடி சண்டை சச்சரவுகளும் மூண்டு பெரும் பாதிப்புகள் ஏற்படுகின்றன.

# எட்டாயிரம் மக்கள் அவதி

(திருமலை நிருபர்)

ஈச்சிலம்பற்று- வெருகல் பிரதேசச் செயலாளர் பிரிவு வாழ் மக்கள் சுகாதார வசதிகள் மறுக்கப்பட்ட நிலையில் கடந்த ஆறு ஆண்டுகளாகக் கஷ்டப்பட்டு வருகின்றனர்.

சுமார் எட்டாயிரம் மக்களைக் கொண்ட பதினொரு கிராமங்களுக்குமாக இருந்து வந்த ஈச்சிலம்பற்று வைத்தியசாலை, 90 ஜூன் கலவரத்துடன் மூடப்பட்டதைத் தொடர்ந்து இந்த நிலைமை தோன்றியுள்ளது.

இம்மக்களது பரிதாபநிலையை அனுசரித்து செஞ்சிலுவைச் சங்கம் வாரத்தில் இரண்டு நாட்கள் மருந்து வழங்கி வருகிறதெனினும் மக்களின் தேவைகளோடு ஒப்பிடும்போது யானைப் பசிக்கு சோளப் பொரி போன்றதாகவே அமைந்துள்ளது.

திடீர் சுகயீனங்களுக்கும் கடுமையான நோய்களுக்கும் சிகிச்சை பெறவேண்டுமானால் போக்குவரத்து வசதிகளற்ற பாதைகளூடாக ஐந்து மைலுக்கும் கூடுதலான பிரயாணம் செய்தே அலிஒலுவ என்ற கிராம மருந்தகத்துக்குச் செல்ல வேண்டியிருப்பதால் பல நோயாளிகள் இடை வழியிலேயே இறந்தும் விடுகிறார்கள்.

சுகாதார சேவைகள் திணைக்களம் மீண்டும் ஈச்சிலம்பற்று வைத்திய நிலையத்தைத் திறக்க நடிவடிக்கை எடுக்காதா என இப்பகுதி மக்கள் ஏங்குகிறார்கள்.




## மின்சார வேக மலையாள மாந்திரீக சக்தி

ஆத்மாக்களின் எண்ணங்கள் எண்ணியபடி நிறைவேறினால் மாத்திரமே ஆத்ம திருப்தி அடைகிறார்கள். கேட்டவருக்கு கேட்டவரம் தரும் ஸ்ரீ துர்கா தேவியின் அற்புத அருள் கொண்ட உலக மாந்திரிக சக்கரவர்த்தி திரு.பீ.கே.சாமி அவர்களை அணுகினால் கோரிக்கை கொடுக்கும் அன்பர்களுக்கு இத்தனையாம் திகதி இத்தனை மணிக்கு காங்கள் வேலை பூர்த்தியென சான்றிதழ் வழங்கப்படும் அரசாங்கத்தினால் பதிவு செய்யப்பட்டதும் வரையறுக்கப்பட்ட தனியார் லிமிட்டட் கம்பனி இது ஒன்றேயாகும். எத்தனை யெத்தனையோ வெளிநாட்டவருக்கும் உள்நாட்டவருக்கும் எம்மால் வெற்றிபெற்ற சான்றிதழ்கள் ஆயிரக்கணக்கில் உண்டு. சான்றிதழ்களை நேரில் பார்வையிடலாம். எம்மாதமும் 20 முதல் மாத கடைசிவரை கொழும்பு ஸ்ரீதுர்கை தேவஸ்தானத்திலும் இதர நாட்களில் நுவரெலியா ஸ்ரீ துர்கை தேவஸ்தானத்திலும் திரு. சாமி அவர்களை சந்திக்கலாம். உள்நாட்டவர் நேரில் சந்திக்க ஆரம்ப அனுமதி கட்டணம். ரூ.250 வெளிநாட்டவர்கள் பிரச்சினைகளை கூறி பிறந்த திகதி மாதம் வருடம் இவைகளை குறிப்பிட்டு அனுப்பி ஆரம்ப கட்டணமாக ரூ.1000 அனுப்பினால் அவர்கள் வேலைக்குரிய கட்டணமும் எண்ணங்கள் பூர்த்தியாகும் திகதியும் கொண்ட கார்டும் அனுப்பப்படும்.

33 வருட அனுபவம் ... Dr.பீ.கே.சாமி (J.D.G.A.N)JP
பீ.கே.சாமி அசோசியேட் பிரைவேட் லிமிட்டெட்
இல.162 மே பீல்ட் ரோட்,
கொட்டாஞ் சேனை வீதி,
கொழும்பு-13

கொழும்பு தொலைபேசி இல - 013-42463-342464-344831-344832
- FAX-00941342464
நுவரெலியா தொலைபேசி இல - 052-2508-3093-3570-3336
- FAX-0094523093


# நுவரெலியாவில் தேர்தல் நடத்தும் ரூபவாஹினி

ரூபவாகினித் தொலைக்காட்சியின் ஏப்ரல் 4ம் திகதி மாலைச் செய்தியைக் கேட்டவர்களுக்கு அதிர்ச்சி.

"இன்னும் சில தினங்களில் நுவரெலியாவில் தேர்தல்கள் நடைபெறவுள்ளன" என்று மாலை தமிழ்ச் செய்தியில் வெகு சிரத்தையாக செய்தி வாசிக்கப்பட்டது. அதன் பின்னர் நுவரெலியாவில் வசந்த காலம் ஆரம்பம் என்று செய்தி தொடர்ந்தது.

என்ன குழப்பமாக இருக்கிறதா? இந்தியா என்பதை நுவரெலியா என்று தவறுதலாக வாசித்து விட்டார் செய்தி வாசிப்பாளர். (நுவரெலியாவில் வசந்தகாலம் என்று வாசித்தது சரி)

ரூபவாகினித் தமிழ் செய்தி வாசிப்பில் இப்படிப் பல கோளாறுகள் தொடர்ந்து இடம் பெற்று வருகின்றன.

ரூபவாகினியில் தமிழ் நிகழ்ச்சிகளுக்கு நேரம் போதாது என்ற குறை ஒரு புறமிருக்க, நிகழ்ச்சிகளின் தரம் வெகு வேகமாக தேய்ந்து வருகிறது. அதனை யார் கவனிப்பது?!

விளம்பரப் பகுதி

## பிறந்த தின வாழ்த்து



திருக்கோணமலை திருக்கடலூரைச் சேர்ந்த அசோக்குமார் விஜயா தம்பதியின் அதிஷ்டப் புதல்வி அர்த்தனா தனது முதலாவது பிறந்த தினத்தை நோர்வேயில் தனது இல்லத்தில் 01.05.1996 இல் வெகு விமரிசையாகக் கொண்டாடினார். இவரை அப்பா, அம்மா, லண்டன் நாகேந்திரன் சித்தப்பா, பிரதிபன் அத்தான், குமார் சித்தப்பா, திருக்கடலூர்ப் பெரியப்பாமார், பெரியம்மாமார், மாமாமார், பாபு அத்தான், அக்காமார், அண்ணாமார், அத்தான்மார், மச்சாள்மார் மற்றும் உறவினர்கள் யாவரும் ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் அருள் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

தகவல்
சகுந்தலா அத்தை, காந்தி அத்தை, பாபு அத்தான்.


## சுவிட்சர்லாந்தில் ஹோட்டல் முகாமைத்துவ பயிற்சிக்கு மாணவர்கள் தேவை

### 1996 ஆம் ஆண்டுக்கான மாணவர் அனுமதி

இலங்கைப் பிரஜைகளிடமிருந்து பின்வரும் பாடநெறிகளுக்காக சுவிட்சர்லாந்திலுள்ள ஹோட்டல் முகாமைத்துவ பயிற்சி நிலையத்தினால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

(1) உணவு மற்றும் விடுதிகள் சிற்றுண்டிச்சாலைகளுக்கான முகாமைத்துவம். (1 வருடம்)
CERTIFICATE IN FOOD & BEVERAGE MANAGEMENT (1YEAR COURSE)
(2) அறைகளைக் கொண்ட கட்டிட பிரிவுகளுக்கான முகாமைத்துவம். (1 வருடம்)
CERTIFICATE IN ROOMS DIVISION MANAGEMENT (1YEAR COURSE)
(3) ஹோட்டலை வழிநடத்துவதற்கான முகாமைத்துவம். (2வருடம்)
DIPLOMA IN HOTEL OPERATIONAL MANAGEMENT (2YEAR COURSE)
(4) உயர்முகாமைத்துவத்திற்கான, உல்லாச பிரயாணத்திற்கான முகாமைத்துவ டிப்ளோமா. (3 வருடம்)
HIGHER DIPLOMA IN HOTEL MANAGEMENT & TOURISM (3YEAR COURSE)

**தகைமைகள்:** க.பொ.த (சா.த) மற்றும் அதற்கும் மேற்பட்ட தராதரம்–17 வயதுக்கு மேற்பட்டிருப்பதோடு ஆங்கில மொழியில் நல்ல தேர்ச்சி இருக்கவேண்டும்.

ஒவ்வொரு கல்வியாண்டும் ஐந்து மாத வகுப்பறைக் கல்வியும் ஏழுமாத நடைமுறைப்பயிற்சியும் உள்ளடக்கப்பட்டதாக இருக்கும்.

நடைமுறை பயிற்சிக்காலத்தின் போது மாதாந்தம் எஸ்.எப்.ஆர். 2,000 முதல் 2,500 வரை படியாக வழங்கப்படும். ஆண்டுக்கு எஸ்.எப்.ஆர். 10,000 வரை (இலங்கை நாணயப்படி சுமார் ரூபா. 4,70,000 சேமிக்கலாம்.

சுவிஸ் ஹோட்டல் முகாமைத்துவ பாடசாலையின் இலங்கைப் பிரதிநிதியை மாணவர்களும் பெற்றோரும் 1996 மே மாதம் 5 ஆம் திகதியிலிருந்து சந்தித்து சுவிட்சர்லாந்தில் ஹோட்டல் முகாமைத்துவ கற்கை பற்றிய மேல் விவரங்களையும் தேவையான விண்ணப்பப்படிவங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

**முக்கிய குறிப்பு:** சுவிட்சர்லாந்து ஹோட்டல் முகாமைத்துவ பயிற்சி நிலையத்திலுள்ள இலங்கைப் பிரதிநிதியால் அனுராதபுரம், வவுனியா, மற்றும் அதனைச் சூழவுள்ள பிரதேசங்களிலிருந்து விருப்பமுள்ள விண்ணப்பதாரிகளிடமிருந்து 1996 மே, மாதம் 11,12 திகதி முதல் 8.30 தொடக்கம் 4.00 மணிவரை உல்லாச விடுதி சபை, ஜெயந்தி மாவத்தை (சிங்கக் கம்பத்திற்கு அருகாமை), அனுராதபுரத்தில் நேர்முக கலந்துரையாடல் மூலம் விண்ணப்பங்கள் கோரப்படவுள்ளன. எனவே சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள். நற்சான்றிதழ்களுடன் நேரில் வரவும்.

**தளுவத்த அண்ட் ஜெப்பே அசோசியேட்ஸ்**
**LG 15, பீப்பிள்ஸ் பாக் சொப்பிங் கொம்பிளெக்ஸ்**
**கொழும்பு-11.**
**தொ.பே. 320139**
(குணசிங்கபுர தனியார் பஸ் நிலையத்திற்கு அருகில் உள்ள கட்டிடம்)




## காண்டம்


முனிவர் அருளிய ஏடுகளில்
அமைந்த காண்டம் எனும்
நாடி ஜோதிடத்தில்
உங்கள் பலன்களை
**ரிஷி. S. மணி**
மூலம் அறிய வாருங்கள்
சந்திரன்
144 2/1, காலி வீதி
வெள்ளவத்தை
கொழும்பு 6
T.P : 586218, 078-63611
Fax : 503030





சகலவிதமான
வாத்தியக் கருவிகளையும்
உதிரிப்பாகங்களையும்
மொத்தமாகவும்
சில்லறையாகவும்
பெற்றுக் கொள்ளவும்
அவற்றை
உத்தரவாதத்துடன்
திருத்திக் கொள்ளவும்
நாடுங்கள்





**SAI SANGEETHA**
L. G .123. PEOPLES PARK. COLOMBO 11.
TEL: 445102 FAX: 440925


## பிறந்த நாள் வாழ்த்து



கல்பிட்டியை சேர்ந்த நாஸிக் ஜெஸ்மியா தம்பதிகளின் செல்வப் புதல்வன் முஹமட் மின்ஹாஜ் தனது (08.04.96) இரண்டாவது பிறந்த நாளை தனது இல்லத்தில் சிறப்பாக கொண்டாடினார். இவரை வாப்பா, உம்மா, உம்மம்மா, அப்பா, சபீனஸ் சாச்சி, நஸ்லியா சாச்சி, சவுதியில் இருக்கும் இலியாஸ் மாமா, கொட்டாரா முல்லையில் இருக்கும் உசைனீன் பெரியப்பா, நிஸ்லியா பெரியம்மா, இபாஸ் நானா, பானு ராத்தா, கல்பிட்டி மலாய் வீதியை சேர்ந்த பூட்டிம்மா, உம்மம்மா குடும்பத்தினரும் திகழியை சேர்ந்த பூட்டி அப்பா குடும்பத்தினரும் தற்ஹாக வெவயை சேர்ந்த வாப்பும்மா குடும்பத்தினரும் மின்ஹாஜ் நகை மாளிகை ஊழியர்களும் இவரை அல்லாவின் அருள் பெற்று வாழ்க என வாழ்த்துகிறார்கள்.



படிப்பகம்

www.padippakam.com

# நீண்டகால யுத்தம்

**எக்ஸ்ரே ரிப்போர்ட்**
— நாரதா —

சூரியக்கதிர் 1- புலிகள் மக்களை படையினரின் கட்டுப்பாட்டுக்குள் வரக்கூடியதாக கருதப்பட்ட பகுதிகளில் இருந்து வெளியேறுமாறு சொன்னார்கள்.

வெளியேறிய மக்களில் இராணுவ நடவடிக்கையின் அச்சம் -காரணமாக சென்றவர்களும் உண்டு. புலிகளின் வற்புறுத்தல் காரணமாக வெளியேறியவர்களும் உண்டு. அதுதான் உண்மை.

சூரியக்கதிர் 2 ஐ விட, முன்னைய சூரியக்கதிர் 1 உக்கிரமானது.

குறிப்பிட்டளவான மக்களின் இழப்பை எதிர்பார்த்து, அது தவிர்க்க முடியாதது என்ற எண்ணத்தோடு படைத்தரப்பு மேற்கொண்ட நடவடிக்கைதான் சூரியக்கதிர் 1.

மக்கள் வெளியேறியது மூலமே பெருமளவான இழப்புக்கள் தவிர்க்கப்பட்டன என்பதும் மறுக்க முடியாத உண்மை.

சூரியக்கதிர் 1 நடவடிக்கையின்போது புலிகளின் பதிலடி எப்படியிருக்கும் என்று படைத்தரப்புக்குத் தெரியாது.

புலிகளின் வியூகத்திற்குள் சிக்கிவிடக்கூடாது என்று நினைத்து தமது சக்தியனைத்தையும் திரட்டி படைத்தரப்பு பாய்ச்சல் நடத்தியது.

புலிகள்தான் குறி; இடையிலே மாட்டிக்கொள்ளும் மக்கள் பற்றியெல்லாம் நிதானித்துக் கவனிக்க முடியாத வேகத்தில் சூரியக்கதிர் 1 மேற்கொள்ளப்பட்டது.

கனரக ஆயுதங்கள், ஆட்டிலறிகள், டாங்கிகள் சகிதம் முன்னேறிய படைத்தரப்பும், பொழிந்த ஷெல்மாரிகளும் யாழ்ப்பாணத்தையே கிடுகிடுக்க வைத்தன.

எனவே-உயிர் தப்பிக்கொள்ளுவதற்காக வெளியேறிய மக்களும் கணிசமான ளவு இருந்தனர்.

புலிகள் வற்புறுத்தியதால் மட்டும்தான் சகல மக்களும் வெளியேறினார்கள் என்று சொல்வதற்கு இடமில்லை.

ஆனால், மக்களின் இடம் பெயர்வை அரசாங்கத்திற்கு எதிரான அரசியல் ரீதியான எதிர்ப்பாக புலிகள் கூறியதுதான் தவறாகிவிட்டது.

இராணுவரீதியில் தமக்கு ஏற்பட்ட பின்னடைவை மக்களின் இடம் பெயர்வு மூலமாக ஈடுசெய்ய புலிகள் முற்பட்டார்கள்.

அதனால்தான், அரசாங்கத்திற்கு அரசியல் ரீதியான தோல்வியைக் கொடுத்து விட்டோம் என்று புலிகள் பிரசாரம் செய்தனர்.

படைத்தரப்பின் அடுத்த கட்ட நடவடிக்கையின்போது மற்றொரு இடம் பெயர்வு சாத்தியம்தானா? என்பதை புலிகள் கணிப்பிடத் தவறிவிட்டார்கள்.

அது சாத்தியமில்லை என்பது ஓரளவு தெரிந்திருந்தும்கூட, 'படையினர் நிலை கொண்டுள்ளவரை மக்கள் திரும்பிச் செல்ல மாட்டார்கள்' என்று புலிகள் உறுதியாகத் தெரிவித்ததுதான் தற்போது அரசாங்கத்திற்கு சாதகமாகிவிட்டது.

தற்போது யாழ்ப்பாணத்திற்குள் தமது சொந்த இடங்களுக்கு பெருவாரியான மக்கள் திரும்பிக் கொண்டிருக்கிறார்கள்.

மக்கள் தமது சொந்த இடங்களுக்கு திரும்புவதை புலிகளுக்கு எதிரான அரசியல் நடவடிக்கையாக அரசாங்கம் பிரசாரம் செய்து வருகிறது.

சூரியக்கதிர் 1 நடவடிக்கையில் மக்கள் இல்லாத பகுதிகளில் நிலைகொண்டிருந்தமை அரசாங்கத்திற்கு சங்கடமான விஷயம்தான்.

எனவே-மற்றொரு நடவடிக்கை மூலமாக தமது கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் மக்களைக் கொண்டுவர அரசாங்கம் முயன்றே தீரும் என்பது எதிர்பார்க்கப் பட்டதுதான்.

புலிகளும் அதனை எதிர்பார்த்தனர். 'மக்களைப் பிடிப்பதே அரசின் திட்டம்' என்றும் கூறிவந்தனர்.

மீண்டும் ஒரு இடம்பெயர்வு மூலம் படையினருக்கு ஏமாற்றம் கொடுக்கலாம் என்றே புலிகள் நினைத்தனர்.

போராட்டத்தில் மக்களின் சகிப்புத் தன்மை, துன்ப துயரங்களைத் தாங்கும் சக்தி என்பவை தொடர்பாக புலிகளிடம் சரியான கணிப்பு இருக்கவில்லை.

யாழ்ப்பாணத்தில் இருந்து சூரியக்கதிர்1 நடவடிக்கையின்போது வெளியேறி ஓடிய மக்கள் உடல்-உளரீதியாக களைத்துப் போயிருந்தனர்.

மீண்டும் தமது சொந்தப் பகுதிகளுக்கு திரும்பிச் செல்வது ஒரு கனவாகிவிடுமோ என்று விரக்தியுற்றிருந்தனர்.

இருக்க இடமில்லை. உறவினர் வீடுகளிலும், தெரிந்தவர் வீடுகளிலும் இட நெருக்கடி மத்தியில் எத்தனை காலம் ஒட்டியிருக்க முடியும்?

பிள்ளைகளின் கல்வி, சுகாதாரம், மனநிலை என்பவையெல்லாம் பாதிக்கப்பட்டுக் கொண்டிருந்த நிலையில் வாழ்க்கை நரகமாக மாறிக் கொண்டிருந்தது.

பத்தாயிரம் பேரும், ஆட்டிலறி ஆயுதங்களும் இருந்தால்தான் யாழ்ப்பாணத்தை மீட்க முடியும் என்று புலிகளும் கூறினார்கள்.

அப்படியானால் இன்னும் எத்தனை காலம்தான் காத்திருப்பது? என்ற கேள்விக்கு யாரும் விடை சொல்ல முடியவில்லை.

அதனால்தான் யாழ் குடாநாட்டில் வடமராட்சி, தென்மராட்சி பகுதிகளில் இருந்த மக்கள் ஒரு முடிவுக்கு வந்தார்கள்.

"இதற்கு மேலும் இனி ஓட முடியாது. வாழ்வோ, சாவோ இங்கேயே நின்று எதிர்கொள்வோம்." என்பதுதான் அந்த முடிவு.

வடமராட்சி, தென்மராட்சி மக்களை புலிகள் இடம்பெயர்ந்து வன்னிக்கு வருமாறு கூறினார்கள். களைத்துப் போன மக்கள் புலிகள்மீதே சீறத் தொடங்க, புலிகள் கட்டாயப்படுத்தாமல் திரும்பிவிட்டனர்.

ஆனால், மக்கள் இடம்பெயர மறுத்தமை புலிகளுக்கு எதிரான போக்கை பிரதிபலிப்பதாகச் சொல்ல முடியாது.

இப்போது தமது சொந்தப் பகுதிகளுக்கு திரும்பிச் சென்று கொண்டிருக்கும் மக்கள் எல்லோரும் புலிகளுக்கு எதிரானவர்களுமல்ல.

அதுமட்டுமல்ல, எதிர்காலத்தில் யாழ்ப்பாணத்தில் புலிகளுக்கும், படையினருக்கும் இடையே மோதல்கள் ஏற்படலாம். அவ்வாறு மோதல்கள் ஏற்பட்டால் தாம் பாதிக்கப்படலாம்.

புலிகள்மீதான ஆத்திரம் தம்மீதானதாக மாறலாம் என்பதையெல்லாம் உணர்ந்தும்கூட தமது வீடுகளுக்கு செல்லவே மக்கள் விரும்புகின்றனர்.

அதன் காரணம், மக்கள் தமது சொந்த இடங்களில் வாழ்ந்து கொண்டு வருவதை எதிர்கொள்ளும் மனத்திடமும் கொண்டிருப்பதுதான்.

எனவே-மக்கள் தமது சொந்த இடங்களுக்கு திரும்புவதை மட்டுமே வைத்துக் கொண்டு, புலிகளை நிராகரித்து விட்டார்கள் என்றோ, அரசியல் அபிலாசைகளையெல்லாம் துறந்துவிட்டார்கள் என்றோ அர்த்தம் கொள்ள முடியாது.

ஆனால், யாழ் குடாநாட்டு போர் முனையில் புலிகள் தமது உத்திகளில் ஒன்றாக மக்களது இடம்பெயர்வை பாவிக்க நினைத்ததுதான் தவறாகி விட்டது.

படையினர் நிலை கொண்டுள்ள பகுதிகளில் தன்மானமுள்ள மக்கள் வாழமாட்டார்கள் என்று புலிகள் தொடர்ந்தும் கூறினால், யாழ்குடாநாட்டு மக்களில் சரிபாதிக்கும் மேலான மக்களின் அதிருப்தியை சம்பாதிப்பதாகிவிடும்.

யுத்தம் இரண்டு வகைப்படும். ஒன்று- குறுங்கால யுத்தம். இரண்டாவது; நீண்டகால யுத்தம்.

போரில் ஈடுபடும் தரப்புக்களது பலம், பலவீனம் என்பவற்றைப் பொறுத்தே யுத்தம் குறுகிய காலத்தில் முடிவுக்கு வருமா, அல்லது நீண்டகாலம் இழுக்குமா என்பதை தீர்மானிக்க முடியும்.

வடக்கு-கிழக்கு போரில் படைத்தரப்பு மரபு வழிச் சமரில் வெற்றிகளைப் பெறக்குடிய இராணுவ பலத்தைக் கொண்டுள்ளது.

யாழ்-குடாநாட்டை தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்தபோது புலிகளும் நிரந்தர இராணுவம் ஒன்றை கொண்ட அமைப்பாகவும், பாரிய தளப்பிரதேசம், ஆட்சி நிர்வாகம் என்பவற்றை கொண்ட அமைப்பாகவும் இருந்தனர்.

சூரியக்கதிர் 1 இன் பின்னர் நிலமை மாறிவிட்டது.

யாழ்ப்பாணத்தை புலிகள் மீண்டும் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவது குறுகிய காலத்தில் சாத்தியமானதல்ல.

> **மூன்றாம் கட்ட ஈழப்போர் முக்கிய திருப்பங்கள்**
>
> **முதல் கட்டம்**
> யாழ் குடாநாடு புலிகளின் தளம். படைத்தரப்புதற்காப்புக்கட்டத்தில் இருந்தது. புலிகள் தாக்குதல் யுத்தம்.
>
> **இரண்டாம் கட்டம்**
> படைத்தரப்பு தாக்குதல் யுத்தம். புலிகள் தற்காப்பு யுத்தம். யாழ்ப்பாணம் படையினர் வசம். மக்கள் இடம்பெயர்வு. புலிகளது தளம் வன்னியில்.
>
> **மூன்றாவது கட்டம்**
> யாழ்-குடாநாடு படையினர் வசமானது. மக்கள் சொந்தப் பகுதிகளுக்கு திரும்புகின்றார்கள். புலிகள் கெரில்லா குழுக்களாக யாழ் குடாநாட்டில் மாறுகிறார்கள். புலிகளது முன்னைய தளப்பிர தேசத்தில் இப்போது அரச நிர்வாகம்.

கிழக்கிலும் தமது கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளை நிரந்தரமாக தக்கவைத்துக் கொள்ளும் இராணுவபலம் புலிகளிடம் இல்லை.

எனவே-அடிக்கடி தமது தளப்பிரதேசங்களை புலிகள் மாற்றிக்கொண்டிருக்க வேண்டும். எனவே-தாக்குதல்-தற்காப்பு-தாக்குதல் என்று போர் முறைகள் மாறிக் கொண்டே இருக்கும்.

ஆக, யுத்தம் நீண்ட காலம் இழுபடக் கூடிய தன்மையை பெற்றுள்ளது.

அதற்கேற்பவே புலிகள் தமது உத்திகளை வகுத்துக்கொள்ள வேண்டும்.

ஆனால், புலிகளின் சில நடவடிக்கைகள் குறுங்கால யுத்தத்தில் மேற்கொள்ளப்படும் உத்திகளைப் போல இருக்கின்றன.

பெருந்தொகையான மக்களை சொந்தப் பகுதிகளுக்கு செல்லாமல் தடுத்து வைத்திருப்பது நிண்டகால யுத்தத்தில் சாத்தியமானதல்ல.

மக்களின் விரக்தி, எதிர்ப்பு, அதிருப்தி என்பவற்றை சம்பாதிக்கவே அது வழி வகுக்கும்.

நீண்டகால காத்திருப்பு புலிகள் மீதான நம்பிக்கையீனத்தையும் மக்களிடம் ஏற்படுத்தவே செய்யும். விளைவு-புலிகளால் மக்களை கட்டுப்படுத்த முடியாமல் போகும்.

சரியான ஒரு இயக்கம்கூட தவறான முடிவால் மக்கள்மீதுள்ள பிடியை இழந்து விடலாம்.

தற்போது வடமராட்சி, தென்மராட்சி பகுதியில் அகதிகளாக இருந்த மக்கள் தமது சொந்தப் பகுதிகளுக்கு திரும்புகின்றனர்.

மக்கள் படையினர் இருக்கும் பகுதிகளுக்கு செல்லமாட்டார்கள் என்று புலிகள் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் பிரசாரம் செய்தமையால், மக்கள் திரும்பும் நடவடிக்கை புலிகள், மக்கள் மீதுள்ள பிடியை இழந்து விட்டதுபோல் ஆகிவிட்டது.

நீண்டகால யுத்தத்தில் மக்கள் அகதிகளாவதும், மீண்டும் சொந்தப் பகுதிகளுக்கு திரும்புவதும் இயல்பானதுதான். அதனை தமக்குச் சார்பான நடவடிக்கையாகவோ, எதிரான நடிவடிக்கையாகவோ போரில் ஈடுபடும் தரப்புக்கள் சித்தரிக்க முற்படுவது தான் தவறு.



சூரியக்கதிர் 1 இல் வெளியேறிய தமிழர்கள் அரசுக்கு எதிரானவர்கள் என்றார்கள் புலிகள்.

சூரியக்கதிர் 2 இல் உள்ளே வரும் தமிழர்களெல்லாம் புலிகளுக்கு எதிரானவர்கள் என்கிறது அரசாங்கம். இரண்டு தரப்புமே தவறு செய்கிறது.

யுத்தத்தின் வெற்றி தோல்வி என்பது மக்கள் இடம்பெயர்ந்து செல்வது மூலமோ, அல்லது சொந்தப் பகுதிகளுக்கு திரும்புவது மூலமோ தீர்மானிக்கப்படுவதில்லை.

இரண்டு வழியில்தான் யுத்தம் முடிவுக்கு வரலாம்.

ஒன்று- யுத்தத்திற்கு காரணமான பிரச்சனையைத் தீர்ப்பது.

இரண்டு- யுத்தத்தில் ஈடுபடும் இரு தரப்புக்களில் ஒன்று முழுமையாக தோல்வி காண்பது.

முதல் வழியைவிட இரண்டாவது வழி கஷ்டமானது.

புலிகள்-படையினர் ஆகிய இரு தரப்பினருமே வெற்றி தோல்விகளை மாறிமாறி சந்தித்துக் கொண்டிருக்கின்றனர்.

யாழ்-குடாநாடு தற்போது படையினரின் கட்டுப்பாட்டில் வந்திருக்கலாம்.

ஆனால், அங்கு எதிர்காலத்தில் பரவலான கெரில்லாத் தாக்குதல்களை புலிகள் நடத்துவதற்கான சாதகங்களும் இல்லாமல் இல்லை.

யாழ்-குடாநாட்டு பூகோள அமைப்பு, புலிகள் ஊடுருவித் தாக்குதல் நடத்தவும் மிக வசதியாக அமைந்துள்ளது.

மக்கள் சொந்தப் பகுதிகளுக்கு திரும்புவது ஊடுருவல் நடவடிக்கைகளுக்கும் ஏற்றதாகவே இருக்கும். எனவே-யாழ்குடாநாட்டில் தற்பேர்து ஏற்பட்டுள்ள மாற்றம் என்ன?

சூரியக்கதிர் 1, சூரியக்கதிர் 2, ஆகியவற்றுக்கு முன்னர் யாழ்குடாநாட்டில் இரண்டு இராணுவங்கள் இருந்தன.

ஒன்று- யாழ்-குடாநாட்டை கட்டுப்பாட்டில் வைத்திருந்த புலிகளது படைவரிசை.

இரண்டு-யாழ்-குடாநாட்டில் இருந்த முகாம்களில் நிலைகொண்டிருந்த அரசின் படையணிகள்.

தற்போது யாழ்குடாநாட்டில் புலிகள் நடமாடும் கெரில்லா குழுக்களாக மாறியுள்ளார்.

எனவே-அரசாங்கத்தின் இராணுவமும், அதற்கெதிரான கெரில்லா அணியினரும்தான் யாழ் குடாநாட்டில் உள்ளனர்.

இராணுவரீதியில் புலிகளுக்கு இது பலத்த பின்னடைவுதான்.

ஆனால், தாக்குதல் திறன் பெரியளவில் பாதிக்கப்பட்டிருப்பதாகக் கூறமுடியாது.

அதேசமயம், புலிகள் தமது பலத்தை பெருக்கிக் கொள்வதற்குரிய எதிர்கால வாய்ப்புக்கள் மூன்று காரணங்களைச் சார்ந்துள்ளன.

1. இனப்பிரச்சனைக்கு நிரந்தரமான- நேர்மையான தீர்வு காணப்படுவதில் ஏற்படும் பின்னடைவுகள்.

2. புலிகளின் கெரில்லாத் தாக்குதல்களுக்கு பதிலடியாக படைத்தரப்பு மேற்கொள்ளும் நடவடிக்கைகளின் தன்மை.

3. வெளியுலக ஆதரவு.

வெளியுலக ஆதரவை பொறுத்தவரை புலிகளுக்கு சாதகமான போக்கு வெகுவாகக் குறைந்துள்ளது.

அரசியல் தீர்வுத் திட்டம் என்று துருப்புச்சீட்டு அரசுக்கு நன்கு கைகொடுக்கிறது.

அதுதவிர, புலிகளின் வெளிநாட்டுக் கிளைகள் சிலவற்றில் பொறுப்பாக இருப்பவர்களது நடவடிக்கைகளும் நெருக்கடிகளை தோற்றுவித்துள்ளன.

சுவிற்ஸர்லாந்தில் சமீபத்தில் புலிகளது கிளைப் பொறுப்பாளர் கைது செய்யப்பட்டதும் அவ்வாறுதான்.

வெளிநாடுகளில் புலிகளது ஆதரவாளர்களை இரண்டு வகையாகப் பிரிக்கலாம்.

புலிகளது செயற்பாடுகள் மீது நம்பிக்கை கொண்டு உணர்வுபூர்வமாக ஆதரிப்பவர்கள்- அவர்கள் முதலாவது பிரிவு.

புலிகளின் ஆதரவாளர்கள் என்று கூறுவது மூலமாக தமக்கொரு கௌரவம் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பில் இருப்பவர்கள் இரண்டாவது வகை.

இந்த இரண்டாவது வகையினர்தான் பிரச்சனைகளை உருவாக்குகிறார்கள். புலிகளுக்காக பிரச்சனைப்படுவதாகக் கூறிக் கொண்டு தமக்கு அனைவரும் பயப்படக்கூடிய நிலையை உருவாக்குகிறார்கள்.

இத்தனைக்கும் இவர்களில் பலர் புலிகள் இயக்கத்தில் இருந்து சொல்லாமல் கொள்ளாமல் விலகித் தப்பிச் சென்றவர்கள் என்பதுதான் வேடிக்கை.

இவர்களது நடவடிக்கைகள் புலிகள் இயக்க செயற்பாடுகள்மீது கனடா, சுவிஸ் போன்ற நாடுகளில் தடைகள் ஏற்பட வழிவகுத்துள்ளன.

இதுதவிர, இந்தியத் தேர்தலில், தமிழக தேர்தல் களத்தில் புலிகள் பற்றிப் பேசுவதே பிரச்சனைக்குரிய விஷயம் போல கருதப்பட்டுள்ளதையும் கவனிக்க வேண்டும்.

புலிகளுக்கு யார் உதவி செய்வது என்பதில் ஒரு காலத்தில் போட்டியிருந்தது.

இம்முறை நிலமை நேர் எதிர். புலிகளுக்கு உதவி செய்யவில்லை என்று நிரூபிப்பதில்தான் தி.மு.கவும், அ.தி.மு.க.வும் போட்டி போட்டுக்கொண்டுள்ளன.

ஆக, இராணுவரீதியான அணுகுமுறைகள், தாக்குதல் பலத்தை வெளிப்படுத்தல் மூலமாக மட்டுமே வெளியுலகில் செல்வாக்குத் திரளும் என்று புலிகள் நம்பிக் கொண்டிருக்க முடியாது.

இவற்றை உணர்ந்து தமது அடுத்த கட்ட நகர்வை அரசியல், இராணுவ தளங்களில் புலிகள் எவ்வாறு மேற்கொள்ளப் போகிறார்கள்? அதனைப் பொறுத்தே எதிர்காலம் தீர்மானிக்கப் படும்.

## அதிரடி அய்யாத்துரை



முதலில் கேட்டபோது மறுத்துப் போட்டு கடைசி நேரத்திலை கிளாலியைத் தாண்டிப்போக விரும்பினவை மீது ரெண்டு எழுத்தார் புகைச்சல் காட்டிப் போட்டினம். பொருட்களையெல்லாம் ஏற்ற முடியாது. ஒரு பையுடன் படகில் ஏறுவதெண்டால் ஏறலாம் எண்டு சொல்லிப் போட்டினமாம்.

அயலகத் தேர்தலில் இம்முறை இலங்கைத் தமிழர் பற்றிய பேச்சையே காணேல்லை. ரெண்டு எழுத்தாரை பலமாக ஆதரிப்பதாகச் சொன்ன கோபாலசாமியார்கூட பிரசாரத்திலை அதைப்பற்றி பேசவேயில்லை. ரெண்டு எழுத்தாரோடு தொடர்பு எண்டு காட்டினால் தொல்லை எண்டு நினைக்கிறார்கள். அரசியல்வாதிகள் எங்கும் ஒரு மாதிரித்தானாக்கும்.

பதவிக்கு வந்தா இலங்கைத் தமிழர் விடயத்தில் தமிழகத்தில் உள்ள கெடுபிடிகளைக் குறைப்பேன் என்று கலைஞர் நெருங்கிய ஆட்களிடம் தனிப்பட்டரீதியில் சொல்லியிருக்கிறாராம். கல்லூரிகளில் படிக்க அனுமதி மறுப்பு போன்ற விடயங்களில் தளர்வுகள் இருக்குமாம்.

தமிழ் கட்சிகள் ஐந்தும் இணைந்து போர் நிறுத்தம் கேட்டது அதிகார தரப்பில் முகச் சுளிப்பை ஏற்படுத்தியிருக்குதாம். ரெண்டு எழுத்தார் பலம் சரிந்தால் தீர்வுப் பொதியின் கனமும் குறையும் எண்டு தமிழ் கட்சிகளும் நினைப்பதை அறிய முடிகிறது. தமிழ் கட்சிகளுக்கு தங்கள் பலம் பலவீனம் தெரிந்திருப்பது வரவேற்கப்படவேண்டிய விஷயம்தான்.

மலையக தனித்துவத் தலைவர் அயலகத்தில் இருந்துகொண்டு காய் நகர்த்துகிறார். அதிகார தரப்பு வெறுத்துப் போய் இருக்குதாம். நம்பிக்கையில்லாத இடத்தில் பதவி வகித்துக் கொண்டு இருக்கலாமோ? எண்டு கேட்கினமாம் அதிகார தரப்பு பிரமுகர்கள். உள் மோதலை ரசித்துப் பார்த்துக்கொண்டிருக்குது பச்சைக் கட்சி. ஊர் ரெண்டு பட்டால் கொண்டாட்டம்தானே!

சந்திரமான சேகரர் இடைநடுவில் வாபஸ் வாங்கிக்கொண்டது சரியில்லைப் பாருங்கோ. ஆரம்பத்தில் இருந்தே வேலை நிறுத்த விவகாரத்திலை அவருக்கு உடன்பாடில்லையாம். அப்படியிருந்தால் சேராமல் விட்டிருக்கலாம். இணைந்து எடுக்கும் முடிவுகளில் இடை வழியில் முறிப்பது சரியில்லைத்தானே! ஒரு முடிவு எடுத்தால் இறுதி வரை நிக்க வேணும். இல்லையெண்டால் முதலிலேயே ஒதுங்கிவிட வேணும். என்ன, நான் சொல்லுறது?!

யாழ்ப்பாணத்தில் ரெண்டு எழுத்தார் இருக்கும்வரை தீவிர ஆதரவாளர்களாக இருந்த சிலர் கச்சிதமாக கரணம் அடிச்சிருக்கினமாம். தெரிந்த சிங்களம், ஆங்கிலம் எல்லாம் கலந்து புதிய நட்பை கிடு கிடுவென்று வளர்க்கினமாம்.

"எங்கு போவது எண்டாலும் போங்கோ. வன்னிக்கு போறதெண்டாலும் போங்கோ. நீங்கள் முன்னாலை போங்கோ, நாங்கள் பின்னாலை வருவோம்' எண்டு பச்சை உடைத் தரப்பார் சொல்லுகினமாம். சனத்தோடு பவ்வியமாக நடக்க வேணும் எண்டு மேலதிகாரிகள் கடும் உத்தரவும் போட்டிருக்கினமாம்.

நேரம் காலம் தெரியாமல் வான் பறவை சத்தம் போட்டு தலைநகரை கதிகலங்க வைச்சுப்போட்டுது. அதைக் கண்டுபிடிச்சு சொல்ல எவ்வளவு நேரம்? அதற்குள்ளாக எத்தனை வதந்திகள் தெரியுமோ? இப்ப எங்கு வெடிச்சத்தம் கேட்டாலும் மக்கள் முதலில் முற்றுகையிடுவது பள்ளிக்கூடங்களைத்தான். அடிக்கடி விடுமுறைவிட்டு பயத்தை நியாயப்படுத்தினது யார் குற்றம்? பரவிய வதந்திகளில் ஒன்று, குப்பைத் தொட்டியில்தான் வெடிச்சது எண்டும் பரவியது. இப்ப குப்பைத் தொட்டியும் துஷ்டரும் ஒன்றுதான். இரண்டையும் கண்டால் தூரவிலக வேணும்.

தற்போதைய நிலையில் சண்டையை தற்காலிகமாக ஓயவைக்க ரெண்டு எழுத்தாரும் விரும்புகினமாம். சற்றலைற் போன் மூலமாக சர்வதேச கிளைகளுக்கு தகவல் பறந்திருக்குதாம். நேரடியாகக் கேட்காமல் வேறு அமைப்புக்கள் மூலமாக சண்டை நிறுத்தத்தை கேட்குமாறு கூறப்பட்டுள்ளதாம்.

அனுபவித்து ரசிக்கக்கூடிய விஷயங்களில் கவிதையும் ஒன்று. அழகான அறுவரிக் கவிதை ஒன்று.

"சுதந்திரம் என்பது
இன்னும்
பூமாலையாகத்தான்!
நாம்தான்
குரங்குகளாய்
மாறிப்போனோம்!"

(வன்மி)



படிப்பகம்

www.padippakam.com

76

# சூளைமேட்டில் துப்பாக்கிச் சூடு



## இரண்டாகிய இயக்கம்

### உள்பிரச்சனைகள்

1986 இன் இறுதிப் பகுதியில் ஈ.பி.ஆர்.எல்.எஃப். அமைப்புக்குள் உள் பிரச்சனைகள் தீவிரமடைந்திருந்தன.

ரெலோ, புளொட் இயக்கங்கள் மீது புலிகள் தடைவிதித்திருந்தனர்.

புலிகள் அமைப்பினரோடு முரண்பட்ட கருத்துக் கொண்டவர்கள் மத்தியில் தமது குரல்வளைகளும் நசுக்கப்படலாம்; மாற்றுக் கருத்துகளுக்கு இடமில்லாத சூழல் தோன்றலாம் என்ற அச்சம் பரவலாக ஏற்பட்டது.

விஜிதரன் கடத்தப்பட்டது; பல்கலைக் கழக மாணவர்களது பாத யாத்திரைமீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டமை, விஜிதரன் கடத்தலுக்கு எதிராக குரல் கொடுத்த மாணவர்கள் மிரட்டப்பட்டமை போன்ற நடவடிக்கைகள் அந்த அச்சத்தை நியாயப் படுத்தின.

அதனால், புலிகள் அமைப்பினருக்கு சமமான இன்னொரு இயக்கம் இருந்தாக வேண்டும். அப்படியானால்தான், ஒரு இயக்கம் வைப்பதுதான் சட்டம் என்ற நிலை ஏற்படாது என்பது இயக்கங்களை சாராத, ஆனால் போராட்டத்திற்கு ஆதரவாக இருந்த புத்திஜீவிகளது கருத்தாக இருந்தது.

ஜனநாயகத்தோடு இணைந்திருக்கும் போராட்டமே எமக்குத் தேவை. தனி ஒரு இயக்கம் இருந்தால் ஜனநாயக மறுப்புச் சூழல் தோன்றலாம் என்று அவர்கள் கருதினார்கள்.

அவ்வாறு கருதியவர்கள் புலிகளுக்கு சமமான அமைப்பாக ஈ.பி.ஆர்.எல்.எஃப். மீது நம்பிக்கை கொண்டிருந்தனர்.

ஆனால், ஈ.பி.ஆர்.எல்.எஃப். அமைப்பு உள் பிரச்சனைகளுக்குள் சிக்கியிருந்தது.

**அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை**

இயக்கத்திற்குள் இரகசிய உட்கொலைகள், உள் பிரச்சனைகளை ஆயுதத்தால் தீர்க்க முயலாத தன்மை போன்றவை இல்லாத ஒரே ஒரு அமைப்பாக ஈ.பி.ஆர்.எல்.எஃப். தான் இருந்தது.

ஆனால், 1986 இன் இறுதிப்பகுதியில் ஈ.பி.ஆர்.எல்.எஃப். அமைப்புக்குள்ளும் உள் பிரச்சனைகளை ஆயுத முனையில் தீர்க்கும் நிலை தோன்றியது.

### கடத்தல்

பத்மநாபாவின் உத்தரவுப்படி ரமேஷ் கடத்தப்பட்டார். ரமேஷ் வெளியே இருக்கும் வரை பத்மநாபா அணியினரின் முடிவுகளை யாழ்ப்பாணத்தில் நடைமுறைப் படுத்த முடியாமல் இருந்தன.

டக்ளஸ் தேவானந்தா அப்போது தமிழ் நாட்டில் இருந்தமையால், யாழ்ப்பாணத்தில் அவரது அணியைச் சேர்ந்த ரமேஷை அகற்றிவிட்டால் போதும்; இயக்க பிரச்சனையை தீர்த்துவிடலாம் என்பதுதான் பத்மநாபாவின் திட்டமாக இருந்தது.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். அமைப்பில் எவருமே தமது இயக்கத்திற்குள் அப்படி ஒரு சம்பவம் நடக்கும் என்று நினைத்திருக்கவில்லை.

அவ்வாறான திட்டம் பத்மநாபாவுக்கு இருப்பதாக தெரிந்திருந்தாலோ, அப்படியும் நடக்கக்கூடும் என்று ஊகித்திருந்தாலோ டக்ளஸ் தேவானந்தா அணியினர் முந்திக் கொண்டிருப்பார்கள்.

ரமேஷ் கடத்தப்பட்டதை அடுத்து யாழ்ப்பாணத்தில் கண்டன ஊர்வலம் நடத்தப் பட்டது. சிறுப்பிட்டியில் இருந்து புறப்பட்ட ஊர்வலம் யாழ்ப்பாணம் அத்தியடியில் உள்ள ஈ.பி.ஆர்.எல்.எஃப். அலுவலகம் வரை சென்றது.

அதே நேரத்தில் ஈ.பி.ஆர்.எல்.எஃப். இராணுவப் பிரிவு உறுப்பினர்கள் தமது ஆயுதங்களை யாழ்-பல்கலைக்கழகத்தில் வைத்து மக்கள் முன் ஒப்படைத்துவிட்டு ஒதுங்கப் போவதாக அறிவித்தனர்.

ரமேஷ் விடுவிக்கப்படுவார் என்று ஈ.பி.ஆர்.எல்.எஃப். மத்திய குழு சார்பாக சேகர் உறுதியளித்து, அந்த முயற்சியை நிறுத்தச் செய்தார்.

ஈ.பி.ஆர்.எல்.எஃப் யாழ் மாவட்ட இராணுவப் பொறுப்பாளராக கபூர் என்னும் பாலசுப்பிரமணியத்தை பத்மநாபா நியமித்தார்.

ரமேஷ் கடத்தப்பட்டதுக்குப் பதிலாக கபூரை கடத்துவதற்கு யாழ்பாண மாவட்ட மக்கள் விடுதலைப் படை உறுப்பினர்கள் திட்டமிட்டனர்.

பிரச்சனையின் தீவிரத்தை உணர்ந்து ரமேஷ் விடுதலை செய்யப்பட்டார்.

### கொலைத்திட்டம்

கடத்தல் நடவடிக்கைக்கு பதிலடியாக பத்மநாபாவின் அணியைச் சேர்ந்த மூன்று முக்கியஸ்தர்களைத் தீர்த்துக்கட்ட திட்டமிடப் பட்டது.

யாழ் மாவட்ட ஈ.பி.ஆர்.எல்.எஃப். தளபதியாக பத்மநாபாவால் நியமிக்கப்பட்ட கபூரை மானிப்பாயில் வைத்து தீர்த்துக்கட்டும் பொறுப்பு இப்ராகிம் என்றழைக்கப்படும் சிவகாந்தனிடம் ஒப்படைக்கப்பட்டது.

மக்கள் விடுதலைப்படை உளவுப் பிரிவுக்கு இப்ராகிம்தான் பொறுப்பாளராக இருந்தார்.

கபூரின் முகாமில் இருந்த உளவுப் பிரிவு ஆள் மூலமாக கபூரின் நடவடிக்கைகள் தொடர்பான விபரங்கள் பெறப்பட்டன.

உரும்பிராயில் இருந்த ஈ.பி.ஆர்.எல். எஃப். அலுவலகத்திற்கு இரவோடு இரவாக குண்டு வீசுவதற்காக அலுவலகம் அருகே இருந்த வீடொன்றில் கைக்குண்டுகளையும் கொண்டு சென்று வைத்திருந்தனர்.

தான் திரும்பிவரும் வரையும் பதில் நடவடிக்கை எதிலும் ஈடுபடவேண்டாம் என்று தமிழ் நாட்டிலிருந்து தகவல் அனுப்பினார் டக்ளஸ் தேவானந்தா.

தமது இயக்கத்திற்குள்ளும் ஆயுத மோதலுக்கு உரிய சூழல் உருவாகிவிட்டதை உணர்ந்த ஈ.பி.ஆர்.எல்.எஃப். உறுப்பினர்கள் பலர் ஒதுங்கத் தொடங்கினார்கள்.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தின் பிரசார பீரங்கி என்று சொல்லப்பட்ட டேவிற்சன் இயக்கத்தை விட்டு விலகிச் சென்றார்.

யாழ்-மாவட்ட ஈ.பி.ஆர்.எல்.எஃப். நடவடிக்கைகளுக்கு வழிகாட்டும் பொறுப்பை சுரேஸ் பிரேமச்சந்திரன் ஏற்றிருந்தார்.

டக்ளஸ் தேவானந்தா அணியினரிடமிருந்து யாழ் மாவட்ட தலைமைத்துவம் பத்மநாபா அணியினரின் கைக்குச் சென்றது.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். அமைப்புக்குள் ஏற்பட்டுக்கொண்டிருந்த பிரச்சனைகளை புலிகள் அமைப்பினர் உற்றுக் கவனித்துக் கொண்டிருந்தனர்.

### சூளைமேட்டு பிரச்சனை

1986 நவம்பர் மாதம் தீபாவளி தினத்தன்று தமிழ் நாட்டில் சென்னை-சூளைமேட்டில் ஒரு பிரச்சனை ஏற்பட்டது.

சூளைமேட்டில்தான் டக்ளஸ் தேவானந்தா தனது பாதுகாவலர்களுடன் தங்கியிருந்தார்.

தீபாவளி தினத்தன்று காலையில் அருகிலுள்ள தேநீர் கடைக்குச் சென்றனர் டக்ளஸ் தேவானந்தாவின் பாதுகாவலர்கள்.

தீபாவளியை முன்னிட்டு போதையில் நின்ற சிலர், அவர்களை உரசிக் கொண்டு சென்றனர். தாமே உரசிவிட்டு, "ஏனடா நம்மீது மோதினீர்கள்? சிலோன்காரன் எண்டால் திமிரு வருமாடா?" என்றனர்.

வாய்த் தர்க்கம் கைகலப்பில் முடிந்தது. அதனையடுத்து டக்ளஸ் தேவானந்தாவின் பாதுகாவலர்கள் தங்கியிருந்த வீட்டை நோக்கி அரிவாள்கள், கத்தி, பொல்லுகள் சகிதம் ஒரு கும்பல் வந்தது.

**அரசியல் தொடர்**
**அற்புதன் எழுதுவது**

"சிலோன்காரன் எல்லாம் வெளியேவா" என்று கூச்சலிட்டபடி கற்களை வீசினார்கள்.

அப்போது டக்ளஸ் தேவானந்தா வீட்டில் இருக்கவில்லை. கோடம்பாக்கத்தில் இருந்த அலுவலகத்தில் இருந்தார்.

சூளைமேட்டில் ஏற்பட்ட பிரச்சனை தொடர்பாக அவருக்கு தொலைபேசியில் தகவல் சொல்லப்பட்டது.

உடனடியாகப் புறப்பட்டு அவர் சூளைமேட்டுக்கு வருவதற்கிடையில் பிரச்சனை பெரிதாகிவிட்டது.

வீட்டுக் கூரைமீது ஏறிய சிலர் கூரையை உடைத்து உள்ளே மண்ணெண்ணெய் ஊற்றினார்கள். "வீட்டோடு சேர்த்து எல்லோரையும் கொளுத்துங்கடா" என்று கும்பலில் ஒருவர் கூச்சல் போட்டார்.

இனியும் வீட்டுக்குள் இருந்தால் உயிர் தப்ப முடியாது என்று ஈ.பி.ஆர்.எல்.எஃப். உறுப்பினர்கள் வெளியே வந்தனர்.

வானத்தை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

கும்பலில் பலர் போதையில் இருந்தமையால் துப்பாக்கிப் பிரயோகம் செய்த பின்னரும் அவர்களுக்கு விபரீதம் புரியவில்லை.

### சூடு விழுந்தது

கும்பலில் ஒருவர் காட் போர்ட் மட்டையை மார்புக்கு கவசமாகப் பிடித்தபடி "எங்கே சுடுங்கடா பார்க்கலாம்" என்று ஓடி வந்தார்.

அந்த நேரம் பார்த்து டக்ளஸ் தேவானந்தா மோட்டார் சைக்கிளில் வந்து இறங்க, கும்பல் அவரைச் சூழ்ந்து கொண்டது.

கும்பலில் இருந்து அவரை மீட்க ஓடி வந்த பாதுகாவலர்களில் ஒருவரது துப்பாக்கியை கும்பலில் இருந்த ஒருவர் பறிக்க முற்பட, வெடி தீர்ந்தது. பறிக்க முற்பட்டவர் சுருண்டு வீழ்ந்தார்.

டக்ளஸ் தேவானந்தாவும், அவரது பாதுகாவலர்களும் அருகிலுள்ள வீடொன்றின் மொட்டை மாடியில் சென்று நின்று கொண்டனர்.

பொலிஸ் அதிகாரி ஸ்ரீபால் தலைமையில் பொலிசார் வந்தனர். "மொட்டை மாடிக்கு வரவேண்டாம். வந்தால் சுடுவோம்" என்றனர் டக்ளஸ் தேவானந்தாவின் பாதுகாவலர்கள்.

"பொலிஸ் அதிகாரி தேவாரம் வந்தால் அவரிடம் ஆயுதங்களை ஒப்படைக்கலாம்" என்றார் டக்ளஸ் தேவானந்தா.

பின்னர் தேவாரம் வந்தார். தனியாக மொட்டை மாடிக்கு சென்று டக்ளஸ் தேவானந்தாவுடன் பேசினார். அவரிடம் ஆயுதங்களை ஒப்படைத்தனர்.

டக்ளஸ் தேவானந்தாவும் அவருடன் இருந்த பாதுகாவலர்களும் கைதுசெய்யப் பட்டனர்.

அதனையடுத்து பத்மநாபா ஓர் அறிக்கையை விடுத்தார்.

"டக்ளஸ் தேவானந்தாவும், அவரோடு இருந்தவர்களும் கட்சியைவிட்டு நீக்கப் பட்டுள்ளனர்" என்று அறிவித்தார்.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். உறுப்பினர்கள் மத்தியில் அதற்கு எதிர்ப்பு ஏற்பட்டது.

பத்மநாபா சொன்னார்: "தமிழக மக்களிடம் அதிருப்தி ஏற்படாமல் இருக்கத்தான் அப்படி அறிவித்தோம். அவர் வெளியே வந்த பின்னர் இயக்கத்தில்தான் இருப்பார்."

### புலிகளின் முடிவு

இதேவேளை, சூளைமேட்டு சம்பவம் பத்மநாபா அணியினரின் தூண்டுதலால் நடைபெற்றது என்று டக்ளஸ் தேவானந்தா அணியினர் சொல்லத் தொடங்கினார்கள்.

யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியான 'சற்றர்டே ரிவீயூ' (SATURDAY REVIEW) பத்திரிகையில் "சூளைமேட்டு சம்பவத்தின் சூத்திரதாரிகள் யார்?" என்ற தலைப்பில் கட்டுரை வெளியானது. அது ரமேஷால் எழுதப்பட்டு கவிஞர் சேரனால் வெளியிடப்பட்டது.

'டக்ளஸ் தேவானந்தாவை விடுதலை செய்' என்று யாழ்ப்பாணத்தில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன. துண்டுப் பிரசுரங்களும் வெளியிடப்பட்டன.

அதனை பத்மநாபா அணியினர் சில பகுதிகளில் கிழித்தனர்.

கிழித்துக் கொண்டிருந்த ஒருவர் டக்ளஸ் தேவானந்தா அணியினரால் தாக்கப்பட்டார்.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். உள் மோதல் வெளியேயும் தெரியத் தொடங்கியது.

அந்த நேரத்தில் தான் புலிகள் முடிவு செய்தார்கள்.

"ஈ.பி.ஆர்.எல்.எஃப்பையும் தடை செய்ய இதுதான் நேரம்."

(தொடர்ந்து வரும்)

# இ.தொ.கா- கல் ஒன்று மாங்காய் இரண்டு

## எய்தவன் இருக்க அம்புக்கு வசை

மலையகத் தோட்டத் தொழிலாளர்களது வேலை நிறுத்தப் போராட்டம் தனியார்துறையினருக்கு அதிர்ச்சி வைத்தியம்தான்.

போராட்டத்தின் குறி தனியார் துறை என்று சொல்லப்பட்டாலும், அதன் தாக்கம் அரசாங்கத்தையும் நேரடியாகப் பாதிக்கவே செய்கிறது.

போராட்டம் ஆரம்பிக்க முன்னரே 'இது அரசாங்கத்திற்கு எதிரானதல்ல' என்று தொழிற்சங்கங்கள் அறிக்கை விட்டன.

அந்த அறிக்கை அவசியமற்றது. தனியார் துறையிடம் தோட்டங்களை கை மாற்றிக்கொடுத்தது அரசாங்கம் தான்.

அப்படிக் கொடுக்கும்போது, தொழிலாளர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டால் அரசாங்கம் தலையிட்டு நீதி கிடைக்கச் செய்யும் என்று உத்தரவாதங்கள் வழங்கப்பட்டன.

கடந்தகால அரசாங்கம் வழங்கிய உத்தரவாதம்தானே என்று தற்போதைய அரசாங்கம் தப்பிக்கொள்ள முடியாது.

தோட்டத்துறையை தனியார்மயப் படுத்தல் என்ற கொள்கையை புதிய அரசாங்கமும் கைவிடவில்லை.

ஆதலால், தனியார் துறையினர் வழங்குவதற்கு ஒப்புக்கொண்ட சம்பள உயர்வையாவது வழங்கச் செய்ய அரசாங்கம் முழுமுயற்சியும் எடுத்திருக்க வேண்டும்.

தொழிலாளர்களது கோரிக்கைகள் தொடர்பாக ஆரம்பத்திலிருந்தே அரசாங்க மட்டத்திலும் ஒரு அலட்சியப் போக்கு காணப்பட்டது.

இ.தொ.கா. தலைவர் தொண்டமானை ஜனாதிபதி அழைத்துப் பேசினார். உடன்பாடு காணமுடியவில்லை.

போதிய முன்னறிவித்தல். கால



ஆறுமுகம் தொண்டமான்

அவகாசம் என்பவை இருந்தும்கூட வேலை நிறுத்தப்போராட்டத்தை சந்திக்காமலேயே தீர்வு காணும் வாய்ப்பை அரசாங்கமும் கை நழுவவிட்டிருந்தது.

'எத்தனை நாள் பட்டினி கிடப்பார்கள்' என்று தனியார் துறையினர் திமிர்த்தனமாக பேசியதுதான் பெரிய கொடுமை.

தொழிற்சங்கங்கள் மிரட்டிப்பார்க்கின்றன என்றுதான் முதலில் நினைத்தார்கள்.

அந்த நினைப்புக்கு மாறாக தொழிலாளர்கள் ஒன்றுதிரண்டு வேலை நிறுத்தத்தில் குதித்தபோது, மலையக தோட்டத்துறையே ஸ்தம்பித்துப்போனது.

இந்தப் போராட்டம் தனக்கெதிரானது அல்ல என்று அரசாங்கம் காட்டிக்கொள்ளப் பார்த்தது.

ஆளும் அணியின் தொழிற்சங்கங்கள் கூட வேலை நிறுத்தத்திற்கு ஆதரவாகச் செயற்பட்டதும் அதனால்தான்.

"நாங்களும் உங்களோடுதான்" என்று ஆளும் சட்சி காட்டிக்கொண்டிருக்க, அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க வாயைத்திறந்து காரியத்தைக் கெடுத்து விட்டார்.

"கொடுப்பதை வாங்குவதே புத்திசாலித் தனம்" என்று அமைச்சர் சொன்னது, தனியார் துறையின் பக்கமே அரசாங்கம் அனுதாபம் காட்டுவதை வெளிப்படுத்தியிருக்கிறது.

அமைச்சரின் கூற்றை அவரது தனிப்பட்ட கருத்தாக நினைக்க முடியாது. அப்படி இருந்தால் அரசாங்கமோ, அல்லது ஆளும் அணியோ மறுப்புத் தெரிவித்திருக்க வேண்டும்.

எனவே-அமைச்சரின் கூற்றை அவருக்கு எதிரான தனிப்பட்ட விவகாரம் போல அணுகுவது சரியல்ல.

தோட்டத்துறை தொழிலாளர்களது வேலை நிறுத்தப் போராட்டத்தில் அமைச்சரின் கருத்துக்கள்தான் அரசாங்கத்தின் கருத்துமாக இருக்கிறது.

இந்நிலையில் அமைச்சரை மட்டும் குறிவைத்து தாக்குவதால், இலாபம் அரசாங்கத்திற்குத்தான்.

அரசாங்கம் சரியான நிலைப்பாட்டில் இருக்கிறது; ஒரு அமைச்சர் மட்டும் தவறான நிலைப்பாட்டில் இருக்கிறார் என்பது போலாகிவிடும்.

ஆனால், இ.தொ.கா. சார்பாக அமைச்சர்மீது கொண்டுவரப்படும் நம்பிக்கையில்லாத் தீர்மானம், 'எய்தவன் இருக்க அம்பை நோகும் கதை'தான்.

இ.தொ.காவுக்கு வேறு வழியில்லை. அமைச்சராக தொண்டமானும் ஆளும் தரப்பில் இருக்கிறார். ஒட்டு மொத்தமாக அரசாங்கத்தின்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்தால் அது கேலிக் கூத்தாகிவிடும்.

அரசாங்கத்தில் இருந்துகொண்டே காய் நகர்த்துவதுதான் தொண்டாவின் சாணக்கியம்.

இ.தொ.காவின் திட்டம் கச்சிதமாக இருக்கிறது. அரசாங்கத்தில் இருந்து கொண்டே, வேலை நிறுத்த போராட்டத்தின் பயனை தனது அரசியலுக்கும் பயன்படுத்திக் கொள்ளப்போகிறது.

வேலை நிறுத்தப் போராட்டம் தொழிற்சங்கங்களின் கூட்டு முயற்சிதான். ஆனால் முக்கியமான பாத்திரம் இ.தொ.காவுக்கு இருக்கிறது.

தனது பாத்திரத்துக்கு மேலும் மெருகூட்டி அரசியல்ரீதியாக அதன் பலனை அறுவடை செய்யத்தான் அமைச்சர்மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை.

நம்பிக்கையில்லாப் பிரேரணை விடயம் பெரும் சர்ச்சையை உருவாக்குமானால், வேலை நிறுத்தப் போராட்டத்திலும், தொழிலாளர்களது கோரிக்கைகளுக்காகவும் இ.தொ.கா. தான் உறுதியாக நின்றது என்பதற்கு விளம்பரம் கிடைக்கலாம்.

இ.தொ.கா. ஒரு கல்லில் இரண்டு மாங்காய் அடிக்கிறது. தொழிலாளர்களது நலனுக்காக-அரசாங்கத்தில் இருந்தபடியே போராடும் அமைப்பு என்ற பெயரும் நிலைக்கும்.

இ.தொ.காவின் கோரிக்கைகளுக்கு மதிப்பளிக்கத் தவறினால், அரசுக்கு தலைவலி ஏற்படுத்த அதனால் முடியும் என்று அரசதரப்பு மத்தியில் ஒரு எண்ணத்தையும் ஏற்படுத்த முடியும்.

வேலை நிறுத்த போராட்டம் வெற்றி பெற்றாலும், தோல்வியடைந்தாலும் தொழிலாளர்களது அனுதாபத்தை தன் பக்கம் திருப்பிக் கொண்டது இ.தொ.கா.

தனது பேரன் ஆறுமுகம் தொண்டமானுக்கும் ஒரு பரீட்சை வைத்துப்பார்த்திருக்கிறார் தொண்டா.

தொண்டா தமிழ்நாட்டில் இருந்தபடி வழங்கும் உத்தரவுகளுக்கு ஏற்ப ஆறுமுகம் தொண்டமான் களத்தில் நின்று செயற்படுகிறார்.

தொண்டாவின் பின்னர் தன்னால் தலைமை ஏற்க முடியும் என்று ஆறுமுகம் தொண்டமான் நிரூபித்துக் காட்டவும் ஒரு வாய்ப்புக் கிடைத்திருக்கிறது.

ஆக, வேலை நிறுத்தப் போராட்டத்தால் அமோக அரசியல லாபம் இ.தொ.காவுக்குத்தான்.



படிப்பகம்

www.padippakam.com

அலசுவது-இராஜதந்திரி



ஒப்பரேஷன் சூரியக்கதிர்-2

# சூரியக்கதிர் 2

சித்திரைப் புத்தாண்டையடுத்து வடக்கே ஆரம்பிக்கப்பட்ட இந்த இராணுவ நடிவடிக்கை ஒரு யுத்தம் என்பதைவிட இடம்பெயர்ந்த மக்களை மீளவும் அவர்களது இருப்பிடங்களை நோக்கி வரச் செய்வதாகவே விளங்கியிருந்தது.

கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் முதல் டிசம்பர் மாதம்வரை 'ஒப்பரேஷன் சூரியக்கதிர்' வடக்கே இடம்பெற்றிருந்தது. இந்த இராணுவ நடவடிக்கையின் போது இராணுவம் பலாலித்தளத்திலிருந்து யாழ் நகரை நோக்கி நகர ஆரம்பித்ததும், யாழ்ப்பாண மக்கள் தம்மைப்பாதுகாத்துக்கொள்ள தென்மராட்சி, வடமராட்சி ஆகிய இடங்களை நோக்கி இடம் பெயர்ந்தனர்.

இலங்கை இராணுவத்தினால் வடக்கே மேற்கொள்ளப்பட்ட ஒரு பெரும் இராணுவ நடிவடிக்கையே ஒப்பரேஷன் சூரியக்கதிர்.

என்றுமில்லாதவாறு பெருமளவு ஆளணிகள், மற்றும் யுத்தத் தளபாடங்களுடன் பலாலியிலிருந்து இராணுவம் யாழ்நகர் நோக்கி நகர்ந்திருந்தது.

யாழ்குடாநாட்டு மக்களைப் பொறுத்தவரை, 1987ம் ஆண்டு இந்திய இராணுவத்தின் வருகையையடுத்து, இலங்கை இராணுவத்துக்கும் யாழ்ப்பாண மக்களுக்குமிடையிலான தூரம் அதிகரித்திருந்தது.

1987ம் ஆண்டுக்கு முன்னர் ஆங்காங்கே இராணுவம் நடமாடியதுடன், வடமராட்சி ஒப்பரேஷன், அல்லது ஒப்பரேசன் லிபரேஷன் (Operation Liberation) என்ற பெயரில் பெரும் இராணுவ நடவடிக்கை ஒன்றும் வடக்கே இலங்கைப் படையினரால் ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

இந்த ஒப்பரேஷனையடுத்து வடக்கு-கிழக்கு அரசியல் நிலபரத்தில் ஏற்பட்ட மாற்றங்கள், இந்தியப்படையின் வருகை, இலங்கை அரசுக்கும் எல்.ரி.ரி.ஈ.யினருக்குமிடையிலான உறவு, பின்னர் அந்த உறவில் ஏற்பட்ட பிளவு போன்ற பல்வேறு காரணிகள், யாழ்குடாநாட்டை ஒருபெரும் சுழற்சிக்குட்படுத்தியிருந்தது.

இந்தச் சுழற்சியில் சிக்கி பல்வேறு கஷ்ட நஷ்டங்களுக்கும் உள்ளாகி, அவற்றின் உச்சக்கட்ட நிலையையே ஒப்பரேஷன் சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கையின்போது யாழ் குடாநாட்டு மக்கள் எட்டியிருந்தனர்.

வடக்கே வலிகாமப் பகுதியிலிருந்து இலட்சக்கணக்கான மக்கள் தென்மராட்சி, வடமராட்சிப் பிரதேசங்கள் நோக்கி இடம்பெயர்ந்தனர்.

ஆனால் நான்கு மாதங்களின் பின்னர் கடந்த வாரங்களில் மேற்கொள்ளப்பட்ட ஒப்பரேஷன் சூரியக் கதிர்-2 இராணுவ நடிவடிக்கையைத் தொடர்ந்து இலட்சக்கணக்கானவர்கள் மீண்டும் வலிகாமம் திரும்பியுள்ளனர் என்று வடக்கே இருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இராணுவத் தகவல் பிரிவின் தொலைக்காட்சிப்படங்கள்கூட சாரை சாரையாக மக்கள் மீண்டும் தமது இருப்பிடங்களை நோக்கிச் செல்வதைக் காட்டி நிற்கின்றன.

இவ்வாறு தமது இருப்பிடங்களை நோக்கி வரும் மக்கள் மத்தியில் இராணுவத்தினர் நின்று பானங்களை வழங்கி, கையசைத்து தமது நல்லெண்ணத்தை வெளியிட்டு வருவதையும் காணமுடிகின்றது.

சூரியக்கதிர்-2 இராணுவ நடவடிக்கையையடுத்து பல விடயங்கள் கவனத்திலெடுக்கப்பட வேண்டியவையாகவே இருக்கின்றன.

கடந்த ஒருதசாப்த காலத்துக்கும் மேலாக தாம் அனுபவித்து வந்த கஷ்டங்களிலிருந்தும் எப்படியாவது விடுபடவேண்டுமென்று யாழ்குடாநாட்டு மக்கள் உறுதி பூண்டிருப்பதை அவதானிக்க முடிகின்றது.

இராமன் ஆண்டாலென்ன இராவணன் ஆண்டாலென்ன தாம் ஒரு நிம்மதியான வாழ்க்கையை நடத்த வேண்டுமென்ற ஆவேசம் அவர்களிடம் தோன்றியிருப்பதையும் காணமுடிகின்றது.

எங்கிருந்தாலும், எத்தகைய சூழலில் இருந்தாலும் மரணபயம் ஏற்பட வேண்டுமானால், அது எப்படியும் ஏற்பட்டே தீரும் என்று உணர்ந்தவர்களாக யாழ்குடாநாட்டு மக்கள் மீண்டும் தமது இருப்பிடங்களை நோக்கித் திரும்பியிருந்தனர்.

இதன்மூலம் "நிலவுக்குப் பயந்து பரதேசம்போக முடியாது" என்ற மன வைராக்கியத்துடன் சாரை சாரையாக யாழ் மக்கள் தமது இருப்பிடங்களை நோக்கித் திரும்புவதையே காணமுடிகின்றது.

யாழ்ப்பாண மக்களைப்போல கொடுமையான மரண பயத்தை எதிர்கொண்டவர்கள் தென்னாசியப் பிராந்தியத்தில் இருக்க முடியாது.

தலைசிதறி, அங்கங்கள் உருக்குலைந்து, மலை மலையாகச் சடலங்கள் குவிந்த காட்சிகள்;

மின்னலெனப் பறந்து வந்த ஷெல் வெடி வேட்டுக்களும், விமானக்குண்டுகளும் உயிர்களைமட்டுமல்ல, எண்ணிலடங்காத உடமைகளைக்கூட துவம்சமாக்கிய நிகழ்வுகள்;

உணவின்றி, மருந்தின்றி விழிகள் பிதுங்க இறுதி மூச்சைவிட்ட அப்பாவி உயிர்கள்.

இவ்வாறு மரணத்துள் வாழ்ந்து, மரத்துப் போனவர்களாக-இனி இழப்பதற்கே எதுவுமில்லை என்ற விரக்தியுடனேயே யாழ்ப்பாண மக்கள் இருந்துவந்தனர்.

இந்நிலையில் அவர்கள் மீளவும் தமது இருப்பிடங்களுக்குத் திரும்புகிறார்கள் என்பதன் அர்த்தம்-அமைதியான வாழ்க்கை அவர்களது கண்களில் தெரிகின்றதென்பதல்ல;

எங்கிருந்தாலும் ஒரே கெடுபிடி, ஒரே அவலம், எனவே தத்தமது சொந்த இடங்களில், வீடு வாசல்களில் இருந்து தமது வாழ்க்கையைப் போக்குவோம் என்ற மனநிலையுடனேயே அவர்கள் மீண்டும் வீடுதிரும்புகின்றனர்.

இந்நிலையில் மீளவும் வீடு, வாசல்களுக்குத் திரும்பிய மக்கள் நிரந்தர அமைதியுடன், கௌரவமாக வாழ்வதற்கு

**நிலவுக்குப் பயந்து பரதேசம் போக முடியாது என்ற நிலையில் யாழ்ப்பாண மக்கள்!**

நிறையவே பணிகள் இடம் பெறவேண்டியிருக்கின்றன.

கடந்த ஆண்டு அக்டோபரில் இடம் பெற்ற சூரியக்கதிர் ஒப்பரேஷன், மற்றும் கடந்த வாரங்களில் இடம்பெற்ற சூரியக்கதிர்-2 ஒப்பரேஷன் ஆகிய இரண்டிலும் ஆயுதப்படையினர் இரு விடயங்களைச் சாதித்துள்ளனர்.

சூரியக்கதிர்-1, இராணுவ ஒப்பரேஷன்-முழு அளவில் எல்.ரி.ரி.ஈ.யினருக்கெதிராக யாழ் குடாநாட்டில் மேற்கொள்ளப்பட்டது.

அப்போது எல்.ரி.ரி.ஈ.யினரது பிடியிலிருந்து யாழ்ப்பாண நகரையும், வலிகாமப் பிரதேசத்தையும் முழு அளவில் மீட்க வேண்டுமென்பதே ஆயுதப்படையினரின் குறியாக இருந்தது.

யாழ்ப்பாண நகரை-தாம் எதிர் பார்த்ததைப் போலவே படையினர் தம்வசப்படுத்தினர். இருந்தபோதிலும் அங்கு மக்களை அவர்களால் காணமுடியவில்லை.

தற்போது சூரியக்கதிர்-2 இராணுவ நடவடிக்கை-வடமராட்சி, தென்மராட்சிப் பகுதிக்கு இடம் பெயர்ந்த மக்களை மீளவும் அவர்களது சொந்த இருப்பிடங்களுக்கு வரத்தூண்டுவதையே பிரதான நோக்கமாகக் கொண்டிருந்தது.

இந்த நடவடிக்கையிலும் படையினர் எதிர்பார்த்த வெற்றி கிடைத்திருப்பதையே அவதானிக்க முடிகின்றது.

சூரியக்கதிர்-2 இராணுவ நடவடிக்கையையடுத்து பத்திரிகையாளர் மகாநாட்டை நடத்திய பாதுகாப்பமைச்சர் ஜெனரல் அநுருத்த ரத்வத்த, தாம் எதிர்பார்த்ததைவிட ஏராளமான மக்கள் தமது சொந்த இருப்பிடங்களுக்குத் திரும்பியுள்ளார்கள் என்று குறிப்பிட்டிருந்தார்.

எனவே கடந்த 17 வருடகால வடக்கு-கிழக்கு யுத்தம் அவ்வப்போது பெற்றுவந்த திருப்பங்கள், மாற்றங்களின் வரிசையில் ஒரு புதிய திருப்பத்தை சூரியக்கதிர்-2 இராணுவ நடவடிக்கை ஏற்படுத்தியுள்ளது.

இத்திருப்பம் ஒரு நல்ல மாறுதலை நோக்கியதாக இருக்குமா? அல்லது மீண்டும் நிலைமைகளை மோசமாக்கி விடுமா? என்பதற்கு காலம்தான் பதில் கூறவேண்டும்.

இராணுவ ரீதியாகவே தம்மைப் பெரிதும் கட்டி. எழுப்பிய எல்.ரி.ரி.ஈ.யினர், ஒரு பேரலை போன்று முடுக்கிவிடப்பட்ட அரசின் இராணுவ நடிவடிக்கைகளில் தாம் அடியுண்டு போய்விடக்கூடாது என்பதனாலேயே வன்னிக் காடுகளுக்குள் தற்போது புகுந்துள்ளனர்.



கடந்த 17 வருடகால நெருக்கடியில் எல்.ரி.ரி.ஈ.யினரின் இராணுவ ரீதியிலான பங்களிப்பே அதிகளவானதாக இருந்ததே தவிர, அரசியல் பங்களிப்பு எவ்விதத்திலும் குறிப்பிடத்தக்கதாக அமையவில்லை.

இந்நிலையில்-அவர்களது இராணுவ நிலைப்பாட்டுக்குப் பெரும் சவால்கள் எழுந்துள்ள தற்போதைய சூழ்நிலையில்-அரசியல் ரீதியான பங்களிப்பில் அவர்கள் ஆர்வங்காட்ட வேண்டியது அவசியமானதாகின்றது.

வடக்கு-கிழக்குப் பிரச்சனை அடிப்படையில் அரசியல் சார்ந்தது. ஆனால் அதனை ஒரு முழு அளவிலான யுத்த நிலைக்கு இட்டுச் சென்றவர்கள்-காலத்துக்குக் காலம் ஆட்சிக்கு வந்த பேரினவாத ஆட்சியாளர்களே என்பதை எவரும் மறுக்க முடியாது.

தாம் முன்வைத்த உரிமைகளை சாத்வீக ரீதியாக வலியுறுத்தி காலிமுகத்திடலில் சத்தியாக்கிரம் இருந்த தமிழ்த் தலைவர்கள் மீது என்று வன்முறைத் தாக்குதல் நடத்தப்பட்டதோ, அன்று முதல் தமிழர்களின் கோரிக்கைகளைப் புறந்தள்ளுவதில் வன்முறையாளர்களும் ஆட்சியாளர்களுடன் கை கோர்த்தே வந்துள்ளார்கள்.

இன்றைய இராணுவ நடிவடிக்கைகள் வெற்றியளித்திருக்கலாம்: எல்.ரி.ரி.ஈ.யினரும் இராணுவ ரீதியாகப் பின் வாங்கியிருக்கலாம்: ஆனால் தமிழ் மக்களின் அரசியல் கோரிக்கைகள் மழுங்கடிக்கப்பட்டுவிட்டதாகவோ அல்லது பின்வாங்கப்பட்டு விட்டதாகவோ எவரும் சொல்லமுடியாது.

மறுபுறத்தே, இன்றைய அரசின் இராணுவ வெற்றிகளுக்குப் பல்வேறு காரணங்களும் இருக்கவே செய்கின்றன.

கடந்த காலங்களில் இராணுவத்தில் நிலவிய தலைமை பெரிதும் சர்ச்சைக்குட்பட்டிருந்தது.

போட்டா போட்டிகளும் குத்து வெட்டுக்களும் இராணுவத்துக்குள் மலிந்து கிடந்தன. தளபதிகள் மற்றும் சிரேஷ்ட அதிகாரிகள் ஆகியோர்மீது குற்றச்சாட்டுக்கள் பல காணப்பட்டன.

ஆனால் தற்போது இராணுவம் ஒரு நல்ல ஒருங்கிணைப்புக்குள்ளாகியிருப்பதையும், சிறந்த தளபதிகளின் வழிகாட்டல்கள் இருப்பதையுமே காணமுடிகின்றது.

இந்நிலையில் அரசாங்கமும் கோடி கோடியாகப் பணத்தைக் கொட்டி இராணுவ பலத்தைக் கட்டி எழுப்பிவருகின்றது.

எனவே எல்.ரி.ரி.ஈ.யினர் புதிய யுக்திகளைக் கையாண்டு இராணுவ நெருக்கடிகளைக் கொடுப்பதற்கு எத்தனிக்கலாம். இருந்தபோதிலும் அரசியல் பின்னணியற்ற அணுகு முறையென்பது ஆரோக்கியமான வெற்றிகளைப்பெற உதவமாட்டா.

அரசியல் ரீதியாகத் தம்மைப் பலப்படுத்தி, சர்வதேச அரங்கில் தம்மை திடமாக வலுப்படுத்த வேண்டியவர்களாக எல்.ரி.ரி.ஈ.யினர் இருக்கின்றனர்.

அதேவேளை ஏனைய தமிழ் அரசியல் கட்சிகளும் உறுதியாக-வேறுபாடுகளைக் களைந்து-தெளிவான அரசியல் வரையறைகளை வகுக்க வேண்டியுள்ளது.

வடக்கு-கிழக்குப் பிரச்னை என்பது தற்போது ஒரு பெரும் சூதாட்டம் போன்றதாகவே இருக்கின்றது.

இத்தகைய நிலை நீடிப்பது எவருக்குமே எவ்வித நன்மையையும் கொண்டுவரப்போவதில்லை.

இதுவரை காலமும் வடக்கு-கிழக்குப் பிரச்னையில் எண்ணிலடங்காத உயிர்கள் பலியாகிப்போயுள்ளன.

எனவே இந்த உயிர்த்தியாகங்கள், மற்றும் இழப்புகளை கருத்திற்கொண்டு அரசியல் தீர்வொன்றைக் கொண்டுவர வேண்டியது இன்றியமையாததாகின்றது.

அரசியல் தீர்வொன்றுக்காக அரசை வலியுறுத்தும் அதேசமயம், எல்.ரி.ரி.ஈ.யினர் உட்பட, அனைத்து தமிழ் அரசியல் தரப்பினரும் தீவிர அரசியலில் குதிக்க வேண்டியது காலத்தின் தேவையாக இருக்கின்றது.

இல்லையேல் வடக்கு-கிழக்குப் பிரச்னை தொடர்ந்து ஓர் ஒரு-புலி ஆட்டமாகவே இருக்கும் என்பது திண்ணம்!





படிப்பகம்

www.padippakam.com

# உலகைக் கலக்கிய கார்லோஸ்

## 8 மனித வெடிகுண்டு

**சென்றவாரம்**

ஜேர்மனிய அதிபருக்கு எதிராக கடும் பிரசாரத்தில் ஈடுபட்டிருந்தது ரேடியோ ஃப்ரீ யூரோப் வானொலி.

ஜேர்மனில் மூனிச் நகரில் இருந்த அந்த வானொலி அறிவிப்பாளர்கள் மூவர் கார்லோஸால் அனுப்பட்ட தபால் குண்டு வெடித்து பலியானார்கள்.

அத்தோடு நிறுத்தவில்லை.

அடுத்த கட்ட நடவடிக்கைக்காக கிழக்கு ஜேர்மனுக்கு நேரடியாகச் சென்றான் கார்லோஸ். இனி.......

கிழக்கு ஜெர்மனில் கார்லோஸ் தனது மொழிபெயர்ப்பாளர் வெயின்றிச் சுடன் தங்கியிருந்தான்.

'ரெடியோ ஃபிரீ யூரோப் வானொலி நிலையத்தை முற்றாக தகர்த்துவிட வேண்டும்.' கார்லோஸின் திட்டம் அது தான்.

தனது காதலி மகதலோனாவையும் தகவலறியும் வேலைகளில் ஈடுபடுத்தினான் கார்லோஸ்.

மகதலோனா சற்று சதை போட்டிருந்தாள். முன்னர் பார்த்தபோது இருந்ததைவிட அழகாக இருப்பதாக தோன்றியது கார்லோஸுக்கு. அவளது சுருண்ட முடி தோளில் தொட்டுக்கொண்டு இருந்தது. வட்டமுகத்தில் மலர்ச்சி தெரிந்தது.

மகதலோனாவிடம் சில விசேஷ திறமைகள் இருந்தன. புகைப்படக் கலையில் தேர்ச்சி இருந்தது. படிக்கும் காலத்தில் ஜெர்மன் புரட்சிகர இயக்கங்களுடன் தொடர்பும் இருந்தது. அதனால் கார்லோஸின் சாகசங்களில் தானும் பங்கெடுக்க அவள் விரும்பியது இயல்பாகவிருந்தது. அவளை உளவறியும் நடவடிக்கைகளில் பயன்படுத்துவது கார்லோஸுக்கு சுலபமாகவிருந்தது.

ரேடியோ ஃபிரீ யூரோப் வானொலி நிலையத்திற்குள் மகதலோனா சுலபமாக சென்றுவந்தாள்.

'ஐ லவ் யூரோப்' என்ற ஒரு நிகழ்ச்சி செய்யப்போவதாகக் கூறி வானொலி நிலையத்தாருடன் தொடர்பு ஏற்படுத்திக் கொண்டாள்.

நிலைய உயர் அதிகாரிக்கு மகதலேனாவை பிடித்திருந்தது. அவருக்கு பிடிக்க வேண்டும் என்பதற்காகவே கவர்ச்சியாக உடையணிந்து சென்றாள். அவளது செழுமையான மார்புகளின் மேல் பகுதி எப்போதுமே தெரிந்து கொண்டிருக்கும். அதற்கேற்ப பட்டன்களை அலட்சியப்படுத்தியிருப்பாள்.

மார்பின் விளிம்புகள்மீது அதிகாரியின் கண்கள் மேய்வதை கவனிக்கத் தவற மாட்டாள். கண்டதைவைத்து காணாததின் செழிப்பை அதிகாரி ஊகித்துக்கொண்டு, மகதலோனாமீது தனி ஈடுபாடு செலுத்த ஆரம்பித்தார்.

"இன்று மாலை எனது வீட்டுக்கு வருகிறாயா? ஆறுதலாகப் பேசலாம்!"

"உங்கள் மனைவி இருப்பாரே?"

"இருக்கமாட்டாள். இன்று காலையில் தான் தன் தாயாரின் வீட்டுக்கு குழந்தைகளுடன் போயிருக்கிறாள்!"

அதிகாரியின் சபலம் புரிந்தது. மாலையில் அதிகாரியின் வீட்டில் இருந்தாள் மகதலோனா.

"என்ன தேடுகிறீர்கள்?"

சிகரெட்டை விரல்களுக்கிடையில் வைத்துக்கொண்டு, சோபாவுக்கு எதிரில் இருந்த ரீப்போவில் தேடிக்கொண்டிருந்தவர், "லைற்றரைத் தேடுகிறேன்" என்றார்.

மகதலோனா சிரித்தாள். "தேடினால் கிடைக்காது. "என்றாள். "ஏன்?" என்றார். "நான் வைத்திருக்கிறேன். நீங்கள் அதிகமாக புகைபிடிக்கிறீர்கள். நாள் ஒன்றுக்கு 5 பாக்கெட். இது மிக அதிகம். ஆகவே இப்போது வேண்டாம்."

"பிளீஸ் ஒன்று மட்டும்" கெஞ்சினார். மகதலோனாவை நெருங்கி சட்டென்று அவள் கையைப் பிடித்து விரல்களை விரித்துப் பார்த்தார்.

"இல்லை" சிரித்தாள். முதன் முதலில் அவளது கையைத் தொட்டதில் அதிகாரிக்கு ஏ.சிக் குளிரிலும் உடல் வெப்பமானது. அவள் அருகில் அமர்ந்து தோளோடு சேர்த்து அணைத்துக் கொள்ள ஆசைப்பட்டார். ஆனாலும் அச்சப் பட்டார்.

"எங்கே வைத்திருக்கிறாய்?" கேட்டார்.

"அவசியம் தேவையா?"

"யெஸ்! பிளீஸ்!"

மகதலோனா சிரித்து தன் மார்புச் சட்டையை விரலால் தொட்டுக் காட்டி "உள்ளே" என்றாள்.

"எடுத்துத்தா பிளீஸ்!"

"தேவையென்றால் தேடி எடுத்துக் கொள்ளுங்கள்!"

அதிகாரி சூடானார். கைகள் நடுங்கின.

"எடுத்துவிடுவேன்!"

"எங்கே பார்ப்போம்!"

கைகள் நடுங்க மகதலோனாவின் மார்புச் சட்டைக்குள் லைற்றரை தேடினார். லைற்றர் இருக்குமிடம் தெரிந்தும், தெரியாததுபோல தீவிரமாக இடதும், வலதுமாக தேடிக் கொண்டிருந்தார்.

"லைற்றரைத்தான் எடுக்கச் சொன்னேன்!" என்றாள் மகதலோனா.

"லைற்றர் இல்லாமலேயே பற்றவைத்து விட்டாய்!" என்றார். இப்போது அவரது நடுக்கம் குறைந்திருந்தது. அச்சம் மறைந்திருந்தது. ஆர்வம் நிறைந்திருந்தது.

"அனுபவம் அதிகமோ?"

"ஏன்?"

"தெரிகிறது."

"பிடிக்கவில்லையா!"

"கொல்கிறீர்கள்!"

அந்த நிகழ்வுக்குப் பின்னர் மகதலோனா ரேடியோ ஃபீரி யூரோப் வானொலி நிலையத்துக்கு சுதந்திரமாக வந்து போனாள்.

ஒரு நாள் அவளோடு கார்லோஸும் சென்றான். கையில் பெரிய சூட்கேஸ்.

மகதலோனா அவனை வரவேற்பறையில் இருத்திவிட்டு அவனிடம் சூட்கேஸை பெற்றுக் கொண்டு உள்ளே சென்றாள். பின்னர் சில நிமிடங்களில் திரும்பிவந்தாள்.

கார்லோஸ் அங்கே இல்லை. மகதலோனா திருப்தியாக புன்னகைத்துவிட்டு வெளியேறினாள்.

அவள் சென்று 15 நிமிடங்களுக்குள் ரேடியோ ஃபிரீ யூரோப் வானொலி நிலையத்துக்குள் குண்டு வெடித்தது.

4 பேர் படுகாயமடைந்தனர்.

வானொலி நிலையத்திற்கு பலத்த சேதம்!

ரேடியோ ஃபிரீ யூரோப்பின் வாய் சாத்தப்பட்டது!

மகதலோனாவை இறுக அணைத்து முத்தமிட்டான் கார்லோஸ்.

"கார்லோஸ்தான் செய்திருக்க வேண்டும்."

என்றார் சோவியத் உளவுத்துறை (கே.ஜி.பி) அதிகாரி தனது மீசையில்லாத முகத்தில் கோபத்துடன். முட்டை வடிவ மேசையில் அவர் முன்பாக இருந்த ஏனைய அதிகாரிகளும் மறுத்துப் பேசவில்லை.

"கார்லோஸின் மறைவிடம் எங்கே இருக்கிறது. இன்னும் 24 மணிநேரத்தில் எனக்கு தெரியவேண்டும்!" என்றார்.

கே.ஜி.பியின் சகல உளவாளிகளுக்கும் தகவல் பறந்தது.

ராட்சத வேகத்தில் செயற்பட்டு ஜெர்மனில் கார்லோஸ் இருந்த இடத்தை கண்டு பிடித்தார்கள்.

அதிகாரிக்கு தகவல் சொல்லப்பட்டது.

"குட்! ரோசியா எங்கே?"

அடுத்த ஒரு மணிநேரத்தில் ரோசியா தனது அதிகாரியின் முன்னால் இருந்தாள்.

"கார்லோஸின் முடிவு உன்கையில்தான் இருக்கிறது!" சொல்லிக் கொண்டே சில மாத்திரைகளை தூக்கிப் போட்டார்.

"மதுவில் கலந்து கொடுத்துவிடு! கொடுப்பது உன் திறமையைப் பொறுத்தது! கே.ஜி.பி.யுடன் விளையாடுகிறவன் உயிரோடு இருப்பது கெட்ட காரியம்!"

ரோசியா புறப்பட்டாள்.

ஜெர்மனில் கார்லோஸின் தொலைபேசி இலக்கமும் கே.ஜி.பி. கொடுத்திருந்தது.



தருவது- ரசிகன்

ரோசியா போனில் தொடர்புகொண்டு கார்லோஸுடன் பேசினாள்.

"எப்படி உனக்கு இந்தப் போன் நம்பர் கிடைத்தது? உளவு பார்க்கிறாயா நீ?"

"யெஸ்! நீ கவனிக்கப்படுகிறாய்! நான் உன்னோடு நேரில் பேசவேண்டும்? எனக்குப் பிடிக்கவில்லை. கே.ஜி.பி. உன்னை கொல்ல..... வேண்டாம், போனில் வேண்டாம்? எங்கே பார்க்கலாம்?"

கார்லோஸ் அவளது குரலில் இருந்த அவசரத்தை உணர்ந்து, ஒரு இரவு விடுதியின் பெயரைச் சொல்லி, நேரம் கொடுத்தான்.

ரோசியா இரவு விடுதியில் கார்லோஸ் எதிரில் பதட்டமாய் இருந்தாள்.

"என்ன குடிக்கிறாய்?"

"எதுவும் வேண்டாம்! அவர்கள் உன்னைக் கொல்லப் போகிறார்கள். போய்விடு கார்லோஸ்! ஜெர்மனைவிட்டே போய்விடு!"

"பொறு! அவசரப்படாதே! கார்லோஸை கொல்வது பியர் குடிப்பது போல சுலபமான காரியமல்ல. கார்லோஸால் யாரை வேண்டுமானாலும் கொல்ல முடியும். கார்லோஸை யார் விரும்பினாலும் கொல்ல முடியாது!" அவளுக்கும் சேர்த்து பியர் ஓடர் பண்ணினான்.

பியர் வந்தது. இரண்டு கிளாஸிலும் கார்லோஸ் நிரப்பினான். அந்த நேரம் பார்த்து ரோசியா "கார்.... கார்லோஸ் அதோ பார்" என்றாள். கார்லோஸின் பின்புறம் காட்டினாள். கார்லோஸ் திரும்பிய போது, மங்கலான வெளிச்சத்தில் இரவு விடுதியின் நடனப் பெண் தன் ஆடைகளை ஒவ்வொன்றாக இழந்து கொண்டிருந்தாள்.

அவளது அதீத வளர்ச்சியான மார்புகளில் கார்லோஸின் கவனம் பதிந்த நொடியில், ரோசியா தனது கையில் இருந்த மாத்திரையை கார்லோஸின் கிளாஸில் போட்டுவிட்டாள்.

தானாகவே ஒரு நொடியில் கரைந்து விடக்கூடிய மாத்திரை அது. கே.ஜி.பியின் விசேஷ தயாரிப்பு.

"என்ன மயக்கமா?" என்றாள் ரோசியா. கார்லோஸ் திரும்பி "அதைக் கண்டா



கார்லோஸ்

பயந்தாய்?" என்று கையை விரித்து காண்பித்தான்.

"இல்லை, பயம் இல்லை என்பதுபோல் பேசினாயே அதுதான் ஒரு பரீட்சை வைத்துப் பார்த்தேன்."

"அப்படியா! இன்னொன்றை கவனிக்கவில்லையே நீ! அதனால் உனது மேலிடத்தில் மாட்டிக் கொள்ளப் போகிறாய்!"

"என்ன?" என்றாள் போலிப் பயத்தோடு.

"எழுந்து அருகில் வா சொல்கிறேன்!"

வந்தாள். சட்டென்று இடையை அணைத்து தன்னை நோக்கி இழுத்து, அவளின் கழுத்தை வளைத்து இதழ்களில் முத்தமிட்டான். முதுகை இறுக்கினான்.

இப்போது கார்லோஸ் அவளை விடுவித்தான்.

"பதிலுக்கு பதிலா?" என்றாள். மார்பு கார்லோஸின் முகத்தில் இடித்தது. சென்று அமர்ந்தாள்.

சியர்ஸ் சொல்லி கார்லோஸ் பியர் கிளாஸை அவளது கிளாஸில் தட்டிவிட்டு மெல்ல உறிஞ்சினான்.

அவளும் உறிஞ்சிக்கொண்டே, 'கார்லோஸின் கடைசி நேரம்' என்று மனதில் நினைத்துக் கொண்டாள்.

ஆனால்...... ஆனால்.......

ரோசியாவுக்கு தலை சுற்றியது. கண்கள் இருண்டு கொண்டு வந்தன.

கார்லோஸ் கிளாஸின் விளிம்பில் ... சுக்கொண்டே கண்களால் சிரித்தான். பின்னர் கிளாஸை மேசையில் வைத்துவிட்டு, எழுந்து சுற்றிலும் விழிகளை செலுத்தினான்.

யாரும் கவனிக்கவில்லை. போதையோடும், பெண்களோடும் ஈடுபடாக இருந்தார்கள்.

கார்லோஸ் விடுதியை விட்டு வெளியேறிக் கொண்டிருக்க,

ரோசியாவின் தலை மேசையில் துவண்டு கவிழ்ந்தது.

ரோசியாவை முத்தமிட்டு, முதுகுப்புறமாக கைகளை செலுத்தி இறுக்கியபோது, கார்லோஸ் கிளாஸையும் இடம் மாற்றியிருந்தான்.

கே.ஜி.பியிலும் கார்லோசுக்கு தகவல் சொல்ல ஆளிருந்தது.

பணம் வாங்கிக்கொண்டு தகவல் சொல்லுமளவுக்கு கே.ஜி.பியிலும் பலவீனம் இருந்தது.

கார்லோஸ் விடுதியை விட்டு வெளியேறியபோது மெல்ல தனக்குள் சொல்லிக் கொண்டான்;

'கார்லோஸ் யாரை வேண்டுமானாலும் கொல்லுவான். கார்லோஸை யார் விரும்பினாலும் கொல்ல முடியாது!!'

(தொடர்ந்து வரும்)

# கிரிக்கெட் வீரர்களும் இந்தி நடிகைகளும் காதலர் பட்டியல்

இந்தி நடிகைகளுக்கும், கிரிக்கெட் வீரர்களுக்கும் இடையே ராசி நல்ல ராசி என்று காதல் விவகாரம் தொடர்ந்து கொண்டு தான் இருக்கிறது.

நடிகைகளோடு காதல் விவகாரத்தில் மன்னனாக இருந்தவர் இம்ரான்கான்.

இம்ரான்கானின் பந்து வீச்சில் விக்கெட்டுக்கள் சரிந்துகொண்டிருக்க, இந்தி நடிகை ஜீனத் அம்மனின் கண்வீச்சில் இம்ரான்கான் கிளீன் போல்டானார்.

இம்ரான்கானும், ஜீனத்தும் இங்கிலாந்தில் ஒரு பங்களாவில் தமது காதல் வாழ்க்கையை சில மாதங்கள் பகிர்ந்து கொண்டனர். பின்னர் இம்ரான்கான் வேறு சில நடிகைகளுடனும் காணப்பட்டதால் ஜீனத்-இம்ரான் காதல் முறிந்து போனது.

பாகிஸ்தானின் மற்றொரு கிரிக்கெட் நட்சத்திரம் மோஷின்கான். அவரது துடுப்பாட்டத்தில் அசந்துபோனார் இந்தி நடிகை ரீனாராய். அதற்கு முன்னர் இந்தி நடிகர் சத்துருக்கன் சிங்ஹாவை காதலித்தவர் ரீனாராய். பின்னர் கருத்து முரண்பாட்டால் அவர்கள் காதல் செத்துப்போனது. மோஷின் கானும், ரீனாராயும் திருமணம் செய்து கொண்டனர். திருமணத்தோடு மோஷின் கானின் கிரிக்கெட் வாழ்க்கையும் முடிந்த போனது.

சில வருடங்களில் மோஷின்கான் ரீனாராய் காதல் வாழ்வில் கடும்புயல் சுழன்றடித்தது. மகள் ஜனத்துடன் பாகிஸ்தானுக்கு பறந்துவிட்டார் மோஷின்கான். ரீனாராய் மறுபடி. இந்தி திரையுலகில் புகுந்தார்.

இந்திய கிரிக்கெட் அணி கப்டனாக இருந்தவர் மன்சூர் அலிகான் பட்டோடி. இந்தி நடிகைகளுடன் காதல் சமாச்சாரத்தை ஆரம்பித்து வைத்த முன்னோடி அவர்தான்.

இந்தி திரைப்பட உலகின் புகழ் உச்சியில் பறந்தவர் நடிகை சர்மிளா தாகூர். கிரிக்கெட் கப்டனின் காதல் பந்துவீச்சில் சர்மிளா தாகூர் வீழ்ந்துபோனார்.

பட்டோடியும்-சர்மிளா தாகூரும் இன்று வரை நல்ல வாழ்க்கைத் துணைவர்களாக இருக்கின்றனர். கிரிக்கெட்வீரர்-நடிகை காதல் விவகாரங்களில் வெற்றிபெற்று தொடரும் காதலர்கள் இருவரும்தான்.

மேற்கிந்தியத் தீவு கிரிக்கெட் அணி கப்டனாக இருந்தவர் கேரி சோபர்ஸ்.

இந்தி நடிகை அஞ்சு மகேந்துருவுக்கு கப்டனைப் பிடித்துவிட்டது. இந்தியாவில் விளையாடவந்த கேரி சோபர்ஸ் அஞ்சு வீட்டுக்கும் வந்து போனார். இருவரும் ஒன்றாகவே சுற்றினார்கள்.



சில்பா சிரோத்கார்

இந்தியாவில் விளையாடும்வரை சோபர்ஸ் அஞ்சுவுடனும் விளையாட்டுப் பிள்ளையாக சுற்றினார். இந்தியாவில் விளையாடிவிட்டுச் சென்றபோது, அஞ்சுவோடு நடத்திய காதல் விளையாட்டுக்கும் முற்றுப்புள்ளி வைத்துவிட்டு சென்றுவிட்டார்.

மேற்கிந்திய தீவு அணியின் மற்றொரு கப்டன் விவியன் ரிச்சர்ட்ஸ். நீனாகுப்தாவை இந்தியாவில் வைத்து சந்தித்தபோது, நீனாவின் முதல் பார்வையிலேயே மனதை பறிகொடுத்தார் விவியன் ரிச்சர்ட்ஸ். இருவருக்கும் ஒரு பெண்குழந்தை இருக்கிறது. முதலில் அதனை மறுத்தாலும் தற்போது உண்மையை ஒப்புக்கொள்கிறார் விவியன் ரிச்சர்ட்ஸ்.

நீனா குப்தா முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்திக்கும் நெருக்கமான நண்பியாக இருந்தவர்.

இந்தியக் கிரிக்கெட் வீரர்களில் அழகானவர் ரவிசாஸ்திரி. பல நடிகைகளுக்கு அவர்மீது கண். ரவிசாஸ்திரியும் ஒரு விளையாட்டுப் பிள்ளைதான். பல நடிகைகளோடு அந்தரங்கமாகப் பழகினார். ஆனாலும் ஒரு நடிகையோடு மட்டும் சற்று ஆழமாக நெருங்கினார்.



சந்தீப்பட்டில்-தேபஸ் ஸ்ரீராய்

அந்த நடிகையின் பெயர் அம்ரிதா சிங்.

'திருமணம் விரைவில்' என்றனர் இருவரும். பின்னர் திடீர் திருப்பம். இந்தி நடிகர் வினோத் கன்னாவுடன் காதலாகிவிட்டார் அம்ரிதா சிங்.

அத்தோடு ரவிசாஸ்திரி-அம்ரிதா காதலின் ஆயுள் முடிந்துபோனது.

இந்தியக் கிரிக்கெட் வீரர் சந்தீப் பட்டிலும் (தற்போது இந்திய அணியின் மனேஜர்) வங்காள நடிகை தேபஸ் ஸ்ரீராயும் கட்டியணைத்தபடி யெல்லாம் போஸ் கொடுத்தனர். கட்டில்வரை சென்றனர். இருவரும் இணைந்து படம் ஒன்றிலும் நடித்தனர்.

தேபஸ் ஸ்ரீராயுடன் மட்டும் நிற்காமல் நடிகை பூனம் தில்லானுக்கும் வலை வீசினார் சந்தீப்பட்டீல். விஷயம் அறிந்த தேபஸ்ஸ்ரீராய் குட்பை சொல்லிவிட்டார்.

பூனம் தில்லானும் சந்தீப்பட்டீலின் காதலை தூக்கிப் போட்டுவிட்டு, படத் தயாரிப்பாளர் ஒருவரை மணந்தார்.

ஹொலண்ட் வீரர் பாங்ஜீட்ரெண்ட் ரவீனா ராண்டனின் ரசிகர். ரவீனாவை சந்தித்தார். விழிகளை வீசினார் ரவீனா. வீரரின் இதயம் நழுவியது. இருவரும் சில நாட்கள் நெருங்கியிருந்து பிரிந்தனர்.

நடிகை ருசிகா பாண்டேயை ஆராய்வதில் வினோத்காம்ளி தீவிரம் காட்டுவதால், வினோத் காம்ளியின் மனைவி கோபத்தில் இருக்கிறார்.

சமர்த்தான பையன் என்று அழைக்கப்படும் சச்சின் டெண்டுல்கரை ஒரு நடிகை துரத்தித் துரத்தி காதலித்தார். நடிகையின் பெயர் சில்பா சிரோத்கார்.

கவர்ச்சியான சில்பா சிரோத்காருடன் டெண்டுல்கர் பொது இடங்களில் காணப்பட்டார். "டெண்டுல்கர் என்ன சொன்னாலும் செய்வேன்" என்று பைத்தியமாகவே இருந்தார் சில்பா சிரோத்கார். பின்னர் அஞ்சலி மேத்தாவை டெண்டுல்கர் கைபிடித்ததோடு சில்பா சிரோத்கார் ஒதுங்கிக் கொண்டார்.

அஜய் ஜடேஜா எப்போதுமே 'ஜாலி டைப்'. தொலைக்காட்சி நடிகை பூஜா ஆசாரியா என்பவருடன் பொழுதை உபயோகமாகச் செலவிடுகிறாராம் ஜடேஜா.

எப்படியோ பட்டோடி-சர்மிளா தாகூர் தவிர வேறு எந்த ஜோடியும் இது வரை தேறவில்லை. அசார்-சங்கீதா காதல் நீடிக்குமா? பார்க்கலாம்.

## பெண்களைச் சந்திக்கத் தடை!

"கிரிக்கெட் வீரர்களுக்கு என்ன குறை?" என்று பெருமூச்சுவிடுவோருக்கு இந்தச் செய்தி....!

வில்ஸ் உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டி ஆரம்பிக்க முன்னர் கபில் தேவ் 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் சொன்னதைக் கேளுங்கள்.. அல்ல.. படியுங்கள்.

"இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை விளையாட்டு வீரர்களுக்கு விதித்துள்ள ஒழுங்குமுறை விதிகள் தேவையற்றவை. அவை வீரர்களின் ஆளுமையைப் பாதிக்கின்றன.

பெண்கள்- அவர்கள் மனைவியாக இருந்தாலும்-போட்டி நடக்கும் நாட்களில் வீரர்களை சந்திப்பதை நிர்வாகம் அனுமதிப்பதில்லை.

'செக்ஸ்' இல்லாமலிருப்பது கிரிக்கெட் வீரர்களின் தேவையற்ற ஆர்வத்தையும், விரக்தியையும் வளர்த்துவிடக் கூடியது" என்று சொல்லியிருந்தார் கபில்தேவ்.

"கிரிக்கெட் போட்டியின் போது கிரிக்கெட் விளையாட்டில் மட்டும் கவனம் செலுத்தினால் போதும் என்று கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை நினைப்பதில் என்ன பிழை?" இது எமது கேள்வி.



படிப்பகம்

# குளிரான பானம் சூடான போட்டி

விளம்பரம் செய்யாவிட்டால் வியாபாரம் இல்லை. நவீன வியாபாரப் போட்டியின் தாரக மந்திரம் அதுதான்.

படத்தில் இருப்பது, கொக்கோ- கோலா நிறுவனம் சீனாவின் தலைநகரான பெய்ஜிங் நகரில் வைத்துள்ள மகா விளம்பரப் பலகை.

நியோன் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட இந்த விளம்பரப் பலகை 260 சதுர மீட்டர் பரப்புடையது. 2,300 மீட்டர் அளவுக்கு பளிச்சிடும் நியோன் விளக்குகளை பொருத்தியுள்ளனர். இரண்டு பக்கமிருந்தும் பார்க்கக்கூடிய வகையில் படம் வரைந்துள்ளனர். மிக உயரமாக அமைக்கப்பட்டுள்ள இந்த விளம்பரப் பலகையில் உள்ள விசேஷம் யாதெனில், பக்கத்து நகரங்களில் இருந்து பார்த்தாலும் பளிச்சென்று தெரிகிறது.

கொக்கோ- கோலா பற்றி மேலும் சில தகவல்கள். சர்வதேச ரீதியில் குளிர்பான விற்பனையில் 19 சதவீத இடத்தைப் பிடித்துள்ளது. சுமார் 200 நாடுகளில் விற்பனையாகிறது. நாள் ஒன்றுக்கு 80 கோடிப் போத்தல் குளிர்பானம் விற்பனையாகிறது.

வருமானத்தில் கணிசமானளவு பணம் விளம்பரப் போட்டிக்கு செலவாகிறது.

குளிர்பான விற்பனையில் கொக்கோ-கோலாவுக்கும், பெப்சிக்கும் இடையேதான் சூடான போட்டி.



# பல்லிருக்கப் பயமேன்

உடல் பலத்தை காட்டுவதில் சிலருக்கு அலாதிப் பிரியம். பம்பாயைச் சேர்ந்த கிருஷ்ண கோபால் ஸ்ரீவஸ்தவா என்பவருக்கும் பலம் காட்ட ஆசை. போயிங் விமானம் ஒன்றை பல்லால் இழுத்து சாதனை படைத்தவர் இவர். இப்போது கப்பலை கட்டி பல்லால் இழுத்து புதிய சாதனை படைத்துள்ளார். கப்பலின் எடை 500 தொன். மார்ச் 16, 1996 அன்று பம்பாயில் இச் சாதனையைப் படைத்தார். அண்ணரை பல்லவராஜன் என்று அழைக்கலாமோ! பின்னே, 50 தொன் பொருளைக்கூட பல்லால் இழுக்க நம்மால் முடியாதப்பா! அண்ணர் பலசாலிதான்!



# மனதில் உரம்



இந்தியாவின் கேரள மாநிலத்தில் உள்ள ஒயூரைச் சேர்ந்த சசிதரன் பிள்ளைக்கு வயது 37. இவரது 4வது வயதில் போலியோ நோயால் பாதிக்கப்பட்டு இரண்டு கால்களும் சூம்பிப் போய் விட்டன. எனவே இவரால் தவழ்ந்து தவழ்ந்துதான் எங்கும் செல்ல முடியும். சிறுவயது முதலே மரங்களைக் கண்டால் அதில் ஏற வேண்டும் என இவருக்குக் தோன்றுமாம். அதன்படி எப்படியாவது ஏறி விடுவார். இன்றும் அந்தப் பழக்கம் இவரைத் தொடருகிறது. எவ்வளவு பெரிய மரமாக இருந்தாலும் சரி அதன் உச்சியில் ஏறச் சொன்னால் போதும், சில நிமிடங்களில் தனது இரண்டு கைகளையும் பயன்படுத்தி மரத்தின் உச்சிக்கே சென்று விடுகிறார்.

உடல் ஊனமுற்றவராக இருந்தாலும் அதனைக் கூறி மற்றவர்களின் அனுதாபங்களைப் பெற சசிதரன்பிள்ளை தயாராக இல்லை. இவருக்கு இன்னும் திருமணமும் ஆகவில்லை. ஒயூரில் ஒரு சிறிய பெட்டிக்கடை வைத்துப் பிழைப்பு நடத்துகிறார். தன்னம்பிக்கைக்கு இவரை உதாரணம் சொல்லலாம்.



# ஒரு மொட்டை=100 மொட்டை


படத்தில் இருப்பவர்கள் எந்தக் கோவிலுக்கு நேர்த்திக்கடன் வைத்து மொட்டை போட்டிருக்கிறார்கள்? கோவிலுக்கில்லை. தலைவருக்காக, தலைவர் பாணியில் மொட்டை போட்டிருக்கிறார்கள். அனைவருமே ரஜினி ரசிகர்கள்.

நான் ஒரு தடவை சொன்னா அது நூறு தடவை சொன்னமாதிரி என்பது ரஜினி பேசிப் பிரபலமான வசனம்.

தன்னைப் போலவே தனது ரசிகர்கள் மொட்டை போட்டதை அறிந்த ரஜினி என்ன சொல்லுவார்?

"நான் ஒரு ஆள் மொட்டையடிச்சா அது நூறு ஆள் மொட்டையடிச்சமாதிரி!" என்று சொல்லுவாரோ?!





# ரஜினிக்கு முதல் மரியாதை

தி.மு.க. தேர்தல் பிரசாரங்களில் முன்னர் அண்ணாவின் படமும், கலைஞர் கருணாநிதியின் படமும் கண்டிப்பாக இடம்பெற்றிருக்கும்.

பிரச்சார வாகனங்களிலும் அண்ணாவும் கலைஞரும் படங்களில் புன்னகைத்தபடி காட்சி தருவார்கள்.

இம்முறை யாவுமே தலைகீழ். அண்ணாவைக் காண்பது அரிதாகிவிட்டது. கலைஞர் ஒரு புறம், மறுபுறம் ரஜினியின் படம் என்று பிரசாரத்தில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. சில பகுதிகளில் தி.மு.க பிரசாரத்தில் கலைஞர் கருணாநிதியின் படத்தைக்கூட காணவில்லை. ரஜினியின் கட்-அவுட்டை வைத்து வாக்குக் கேட்கிறார்கள்.

வை.கோபாலசாமி அதற்கு ஒரு கிண்டலடித்திருக்கிறார். "தி.மு.க அண்ணாவை மறந்துவிட்டது. அண்ணாமலையின் பின்னால் செல்கிறது." என்கிறார். கேலியிலும் உண்மை உண்டு.

# நடமாடும் சுவரொட்டி!

இந்தியத் தேர்தல் கமிஷன் ரொம்பக் கண்டிப்பானது. அதிலும் தேர்தல் கமிஷனின் தலைமை அதிகாரி சேஷன் இருக்கிறாரே, அவர் ஒரு தரம் சொன்னா நூறுதரம் சொன்னது மாதிரி. சுவர் விளம்பரங்களுக்கும் கட்டுப்பாடு விதித்திருக்கிறார். ஆனால் சில வேட்பாளர்கள் கில்லாடிக்கு கில்லாடிகள். சுவர் விளம்பரம் தானே பிரச்சனை என்று விட்டு, மாடுகளின் உடம்பில் பிரசார வாசகங்களை எழுதிவிட்டார்கள். செலவும் மிச்சம். சேஷனிடமும் தப்பலாம். மாடு போகுமிடமெல்லாம் பிரசாரமும் போகும். ஆக, கல் ஒன்று குறி மூன்று. அரசியல் வாதிகளா கொக்கா? மாட்டில் இருப்பது பாரதிய ஜனதா கட்சிக்கு ஆதரவான வாசகங்கள்.



www.padippakam.com

# சினிவிசிட்

## காதல் வலை

'பொன்னுமணி' படத்தில் கார்த்திக் ஜோடியாக நடித்தவர் சவுந்தர்யா. தற்போது சத்யராஜ் ஜோடியாக சேனாதிபதியில் நடித்து வருகிறார்.

தெலுங்கிலும் நடித்துவரும் சவுந்தர்யா காதல் வலையில் சிக்கியிருக்கிறார். தெலுங்கில் உயரமான நடிகரான ஜெகபதிபாபு தான் சவுந்தர்யாவின் காதலர்.

## காதலுக்கு ஜே

நடிகை ரோகிணியும், 'தொட்டாச்சிணுங்கி' பட இயக்குநர் அதியமானும் இரகசியமாக காதல் செய்தனர். இப்போது இரகசியம் பரகசியமாகிவிட்டது.

"இன்னும் ஒரு வருடம் கழித்துத்தான் திருமணம். அத்தோடு திருமணம் நடந்தாலும் நான் வளர்க்கும் அநாதைக் குழந்தைகள் நம்முடனேயே இருக்கும்" என்று சொல்லிவிட்டார் ரோகிணி. அதியமானும் சம்மதம் தெரிவித்து விட்டார்.

ரோகிணி, அதியமான் காதலுக்கு ரேவதி, பாலு மகேந்திரா, அர்ச்சனா ஆகியோர் பக்க பலமாக இருந்து உதவினார்களாம்.

## இந்தியில் 'முத்து'

'முத்து' படம் இந்தியில் தயாராகிறதல்லவா. ரஜினியின் பாத்திரத்தில் அமிதாப்பச்சன் நடிக்கிறார். சரத்பாபு நடித்த பாத்திரத்தில் அரவிந்தசாமி நடிக்கிறார்.

இந்தியில் நடிக்கும் முதல் படம், அதுவும் அமிதாப்பச்சனின் படம் என்பதால் அரவிந்தசாமி டென்ஷனில் இருக்கிறார். அதனால் 'மின்சாரக் கனவு' படத்தில் அரவிந்தசாமி நடிக்க வேண்டிய காட்சிகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

**முகப்பில்**
கார்த்திக் படம்- பூவரசன்.
ரேவதி தேர்தல் பிரசாரத்தில் கிளிக் செய்யப்பட்ட படம்.

## "நான் ஒரு தடவை

அழகான கிராமத்தில் தொடக்கப்பள்ளி.
பெயர்களை ஒவ்வொருவராகக் கேட்கிறார்.
என்று கேட்க, அவன் "பாட்ஷா" என்று
ஆசிரியை கீதாவுக்கு சரியாகக் கேட்கவி
"சத்தமாக மீண்டும் சொல்" என்று
தடவை சொன்னா அது நூறு தட
கூறியபடி அமர்ந்துவிட்டான். கீதா
அதே சமயம் வேறொரு மாணவ
'ஏண்டா இவ்வளவு தாமதம்? என்று
எங்கே, எப்போ, எப்படி வரணுமோ
வருவேன்" என்று ரஜினி போலவே
அதிர்ச்சியில் உறைந்த
எழுந்து விசுக்
அவனது
கொ



அஜித்குமார்-ஹீரா
படம்: காதல் கோட்டை



சிவரஞ்சனி

## மறுபடியும் சிவரஞ்சனி

சிவரஞ்சனி-ஆனந்த் ஜோடியாக நடித்து வரும் படம் 'அவதார புருஷன்'. தனது திறமை முழுவதையும் காட்டி சிவரஞ்சனி நடித்திருக்கிறார்.

தெலுங்கில் 'ஊஹா' என்ற பெயரில் கொடி கட்டிப் பறக்கும் சிவரஞ்சனி அவதார புருஷன் வெற்றி பெற்றால் தமிழிலும் கால் ஊன்றலாம் என்று நினைக்கிறார்.

'சின்னக் குஷ்பு', நீலக்கண் அழகி என்றெல்லாம் தமிழ் திரையுலகில் பேசப்பட்டவர்தான் சிவரஞ்சனி. அப்படியிருந்தும் தமிழ் திரையுலகம் அவரை கை நழுவ விட்டிருந்தது.

தெலுங்கில் 90 விதம் கவர்ச்சி 10 விதம் நடிப்பு என்ற ரீதியில் தனது இடத்தை தக்கவைத்திருக்கிறார் ஊஹா எனப்படும் சிவரஞ்சனி.

தெலுங்கில் அவர் கையில் இருப்பது பட வாய்ப்புக்கள் மட்டுமல்ல, பிரபல படத் தயாரிப்பாளர்களும்தான்.

## ஹீராவின் பிடியில் அஜித்

தமிழில் போதிய வாய்ப்பில்லாமல் போனதால் இந்திப் படவுலகுக்குச் சென்றவர் ஹீரா.

தமிழில் நடித்துக் கொண்டிருந்த போது ஒரு பிரபல நாயகனை சுற்றித்திரிந்தார். அந்த நாயகன் சரத்குமார். அவரும்-ஹீராவும் திருமணம் செய்து கொள்ளப் போகிறார்கள் என்றெல்லாம் செய்தி பரவியது. பின்னர் ஹீராவே கழன்று கொண்டார். இந்திப் படவுலகம் நோக்கிப் பறந்துவிட்டார்.

அங்கு தமிழில் காட்டாத கவர்ச்சியெல்லாம் காட்டி நடித்தார். பம்பாய் சஞ்சிகைகளுக்கு விதம் விதமாகப் போஸ் கொடுத்தார். கிடைத்த படங்களில் சென்சார் அனுமதிக்கும் கடைசி எல்லைவரை தாராளமாக நடித்தார்.

ஆனாலும் படவாய்ப்புக்கள் எதிர்பார்த்தளவுக்கு கிடைக்கவில்லை. வெறுத்துப்போன ஹீரா மறுபடியும் தமிழுக்கு திரும்பியிருக்கிறார்.

'காதல் கோட்டை' படத்தில் அஜித் ஜோடியாக நடிக்கிறார். இந்தி படவுலகில் கற்றுக் கொண்ட வித்தைகளையும் பிரயோகிக்கிறார். இயக்குநர் எள் என்றால் எண்ணெய்யாக கவர்ச்சி விடயத்தில் ஒத்துழைக்கிறாராம் ஹீரா.

'காதல் கோட்டை' படத்தில் வரும் குளியல் காட்சியில் அஜித்தும், ஹீராவும் நடித்தார்கள். ஹீராவின் வேகம் கண்டு அஜித் அசந்து போனாராம்.

படப்பிடிப்பு இல்லாத நேரங்களிலும் அஜித்தும்-ஹீராவும் நெருக்கமாக இருக்கிறார்களாம். வெளிப்புற படப்பிடிப்பில் அஜித்துக்கும், ஹீராவுக்கும் அருகருகே ரூம் போட்டுக் கொடுத்தாராம் புத்திசாலி இயக்குநர். இருவரது நெருக்கமும் காட்சிகளிலும் பிரதிபலித்தால் இயக்குநருக்கும் லாபம்தானே! புதிய இயக்குநராக இருந்தாலும் ஆர். ரகுராஜ் புத்திசாலி.

## ரஜினியின் அடுத்த படம்?

ரஜினிகாந்த் அடுத்து நடிக்கப்போகும் படம் அவரது சொந்தத் தயாரிப்பு என்பது புதிய தகவல். தனது மனைவி லதாவின் பெயரில் புதிய பட நிறுவனத்தின் பெயரை வைக்கப்போகிறார். படத்தை இயக்குவது சுரேஷ் கிருஷ்ணா.

தேர்தல் பரபரப்பு முடிந்ததும் ரஜினி தனது அடுத்த படம் பற்றிய முடிவை அறிவிப்பார்.

தற்போது ரஜினிக்குள்ள இமேஜ் பாதிக்கப்படாதவகையில் பெரியளவில் தயாரிப்பு இருக்கும் என்று நம்பலாம்.

## உருளும் ஆப்பிள்

'சின்னக் கவுண்டர்' படத்தில் சுகன்யாவின் தொப்புளில் பம்பரம் விட்டார் விஜயகாந்த். வந்தது வினை. தொப்புள்களில் என்னென்ன புதுமை செய்யலாம் என்று இயக்குநர்கள் பலர் முடியைப் பிய்த்துக்கொள்ள ஆரம்பித்தார்கள். 'சின்ன ஜமீன்' படத்தில் வினிதாவின் தொப்புளில் தக்காளி உருட்டினார் கார்த்திக். 'லவ்பேட்ஸ்' படத்தில் ஆம்லெட் போட்டுப்பார்த்தார் பிரபுதேவா.

இப்போது 'நான் ஒரு இந்தியன்' படத்தில் ஒரு காட்சி. வினிதாவின் கனவில் காதலன் பாபுகணேஷ் வருகிறார். காதலன் அணைப்பில் கிறங்கிய வினிதா புல்தரையில் சாய்கிறார். காதலன் வினிதாவின் தொப்புளில் காஷ்மீர் ஆப்பிளை வைத்து வாயால் உருட்டி வினிதாவின் உதடுவரை கொண்டுவருகிறான். உடனே பாடல் ஆரம்பமாகிறது.

"ஒரு கணம்....ஒரு கணம்....நிழலிலே உன் நிழலிலே வாழ்ந்தாலும் போதுமே..." என்று தொடர்கிறது பாடல்.

பாடல்கள்-வாலி இசை-இளையராஜா, கதை திரைக்கதை, வசனம், இயக்கம்-பாபு கணேஷ். படத்தில் இரண்டு கதாநாயகிகள் ஒருவர் ஊர்வசி, மற்றவர் வினிதா.

## திரையில் புதிய

சித்திரைப் புத்தாண்டுக்கு தமிழ் திரையிடப்பட்டு, நம்நாட்டில் வீடியோ வந்துள்ள படங்கள் இவை.

'சிறைச்சாலை' (பிரபு-மோகன்லால்-தபு), (நெப்போலியன்-ராம்கி-மன்சூரலிகான்-
'இரட்டை ரோஜா' (ராம்கி-குஷ்பு-ஊர்வசி),
கோட்டை' (அர்ஜுன்-மீனா), 'காலம் மாறிப் பே
(பாண்டியராஜன்-சங்கீதா), 'மாண்புமிகு மாண
(விஜய்-சபீதாபேடி), 'கறுப்பு ரோஜா' (ராம்
வினிதா), தேவராகம் (அரவிந்தசாமி-ஸ்ரீதேவி)

## ஊர்வசிக்கு பதிலாக ஸ்ரீதேவி

தமிழில் வெளியாகி நல்ல நிலையில் ஓடிக்கொண்டிருக்கும் படம் 'இரட்டை ரோஜா' தற்போது இந்தியிலும் தயாராகிவருகிறது. தமிழில் ராம்கி நடித்த வேடத்தில் அனில் கபூர் நடிக்கிறார். ஊர்வசி நடித்த வேடத்தில் ஸ்ரீதேவி நடிக்கிறார். குஷ்பு நடித்த வேடத்தில் ஊர்மிளா நடிக்கிறார். 'ஜுடாய்' என்ற பெயரில் தயாராகிறது. ஸ்ரீதேவியுடன் கிசுகிசுக்கப்பட்ட தயாரிப்பாளர் போனிகபூர் இந்தியில் தயாரிக்கிறார்.



வினீத்-யுவராணி
படம்: சக்தி



## மீசை நல்ல மீசைதான்

'சக்தி' படத்தில் யுவராணிக்கு சான்ஸ் கொடுத்திருக்கிறார் குஞ்சுமோன். பெரிய பட்ஜெட் படத்தில் தனக்கு கதாநாயகி வாய்ப்பு தந்ததற்காக குஞ்சுமோன் மீது பிரியம் காட்டுகிறார் யுவராணி. குஞ்சுமோனின் மீசை மட்டுமல்ல, அவரது உள்ளமும் அழகுதான் என்று புகழ்கிறார்.

படத்தில் வினீத்தான் கதாநாயகன். குஞ்சுமோன் தயாரிக்கும் 'காதல் தேசம்', 'சக்தி' ஆகிய இரு படங்களும் வெளிவந்தால் வினீத்தின் மார்க்கெட் உயரலாம்.

'சக்தி' படத்தில் மற்றொரு ஜோடி.. சிவகுமார்-ராதிகா. அவர்களுடன் மனோரமா, நிழல்கள் ரவி வடிவேலு ஆகியோரும் நடிக்கின்றனர்.

## 'குடும்ப சங்கிலி'யில் குஷ்பு

'ஜமீன் கோட்டை' படத்தை இயக்கி கதாநாயகனாக நடித்தவர் கலைப்புலி ஜி. சேகரன். படம் நன்றாக ஓடியது.

அதனையடுத்து அவர் தயாரிக்கும் புதிய படம் 'குடும்ப சங்கிலி'.

கதை, திரைக்கதை, வசனம் எழுதி இயக்கி, கதாநாயகனாக ஜி. சேகரன் நடிக்கிறார். அவருக்கு ஜோடியாக குஷ்பு நடிக்கிறார். மற்றும் ராஜேஸ், செந்தில், ஸ்ரீவித்யா, அனுஷா, வடிவுக்கரசி உட்பட பலர் நடிக்கின்றனர்.

இசை: சிற்பி, பாடல்கள்: காளிதாசன். ஜுலை மாத இறுதியில் படத்தை வெளியிடத் திட்டமிட்டுள்ளார்கள்.

## தமிழில் கன்னட இயக்குநர்

விஜயசாந்தி-ஜெயராம் ஜோடியாக நடிக்கும் நேரடித் தமிழ் படம் 'சத்ய ஜோதி'

சட்டக்கல்லூரி மாணவியாக விஜயசாந்தியும், பொலிஸ் அதிகாரியாக ஜெயராமும் நடிக்கின்றனர். கன்னட இயக்குநரான ஓம் சாய் பிரகாஷ் இயக்குகிறார். இவர் தமிழில் இயக்கும் முதல் படம் இதுதான். திரைக்கதை, வசனம், லியாகத் அலிகான். மலேசியா வாசுதேவன், ஆனந்தராஜ், கோவை சரளா, ஜோதிமீனா ஆகியோரும் நடிக்கின்றனர்.


படிப்பகம்

www.padippakam.com

## சொன்னா....."

...யெ ஆசிரியை கீதா. மாணவர்களின் ...
...் மாணவனிடம் உன் பெயர் என்ன? ...ல் சொல்கிறான். அவன் சொன்னது ...லை.

...ால்ல, அந்த மாணவனோ, "நான் ஒரு ... சொன்னமாதிரி" என்று ஸ்டைலாக ...கு அதிர்ச்சி.

... வகுப்புக்கு தாமதமாக வந்து நிற்பான். ...கேட்டார் ஆசிரியை. அவனோ, "நான் ...அங்கே அப்போ சரியான நேரத்திலே ...யை சொடுக்கி சொல்லுவான். ஆசிரியை ...போய் நிற்க, 'பாட்ஷா' என்ற மாணவன் ...று ஒரு விரலை உயர்த்திக் கேட்க, ...சரத்தை உணர்ந்த ஆசிரியை அனுமதி ...பார்.

இப்படியொரு காட்சி 'சிவப்பு நிலா' படத்தில் இடம் பெறுகிறது. ஆசிரியையாக புதுமுகம் ரத்தி நடித்தார். மாணவர்களாக சிறுவர்கள் நடித்தனர்.

## விசித்ராவின் புதிய திட்டம்

வாய்ப்பில்லாத நடிகைகளுக்கு வருவாய் தேடிக் கொடுக்க முன்வந்துள்ளார் விசித்ரா. நடனக் குழு ஒன்று அமைத்துள்ளார்.

சமீபத்தில் சென்னையில் நடைபெற்ற நிகழ்ச்சியொன்றில் விசித்ராவின் நடனக்குழு ரசிகர்களை திணறடித்துவிட்டதாம். விநோதினி, சர்மிளா, போன்ற படவாய்ப்பில்லாத நடிகைகளும் நடனக் குழுவில் இருக்கிறார்கள்.

நடன அசைவுகளில் பல சங்கதிகளை புரிய வைத்து ரசிகர்களின் பேராதரவை பெற்றுவிட்டது விசித்ராவின் நடனக்குழு. விரைவில் துபாய் போன்ற நாடுகளுக்குச் சென்று அசத்திச் சம்பாதிக்கும் திட்டமும் இருக்கிறதாம். விசித்ரா பிழைக்கத் தெரிந்தவர்.

## மவுசு மவுசுதான்

இணைந்து நடிக்கும் நடிகைகளோடு கிசுகிசுக்கப்படும் ராசியானவர் கார்த்திக். கிசுகிசுக்களில் உண்மை இல்லாமல் இல்லை.

'கிழக்கு முகம்' படத்தில் கார்த்திக் ஜோடியாக நடித்த ரேஷ்மாவோடு ஊட்டியில் ஒரு வாரம் தங்கியிருந்தார் கார்த்திக். அதனால் கார்த்திக் என்றாலே காதல் இளவரசன் என்பது நடிகைகள் வட்டாரத்தின் கணிப்பு.

'உள்ளத்தை அள்ளித்தா' படத்தின் வெற்றிக்குப் பின்னர் கர்த்திக்கைத் தேடி தயாரிப்பாளர்கள் படையெடுக்கிறார்கள். மவுசு கூடியிருக்கிறது. கார்த்திக் பாடு கொண்டாட்டம் தான்.

## மினிசினி

* சத்யராஜின் மனேஜர் ராமநாதன் தற்போது விஜயகாந்த், சத்யராஜ் நடிக்கும் படங்களைத் தயாரித்து வருகிறார். அடுத்து இவர் தயாரிக்கும் புதிய படத்தில் பிரபு கதாநாயகனாக நடிக்கவுள்ளார்.

* அருண்குமாருடன் 'பிரியம்' படத்திலும், விஜய்யுடன் 'செல்வா' படத்திலும் கதாநாயகியாக நடித்து வரும் மந்த்ரா, 'லோகா' என்ற இந்திப் படத்தில் மிதுன் சக்கரவர்த்திக்கு ஜோடியாக நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார்.

* மலையாளத்தில் சுரேஷ் கேபியுடன் பானுப்பிரியா நடித்த 'ஹைவே' பானுப்பிரியாவின் 100வது படம். இப்படத்திற்குப் பின்னர் பானுப்பிரியா, நாசருக்கு ஜோடியாக மலையாளப் படமொன்றில் நடிக்கவுள்ளார்.

* விஜயகாந்துடன் 'திருமூர்த்தி' படத்தில் நடித்த ரவளி தற்போது கார்த்திக் கதாநாயகனாக நடிக்கும் 'கூட்டாளி' படத்தில் மட்டுமே நடித்து வருகிறார். இப்படத்தை ஜான் அமிர்தராஜ் இயக்குகிறார்.

* 'ஏழைஜாதி', 'கட்டளை', 'மக்கள் ஆட்சி' போன்ற படங்களுக்கு வசனம் எழுதிய லியாகத் அலிகான், சரத்குமார் நடிக்கும் 'அரவிந்தன்' படத்தில் முதலமைச்சர் வேடத்தில் நடிக்கிறார்.

* பிரபல மலையாளப்பட இயக்குநர் பத்ரன் தற்போது சுரேஷ்கோபி-விஜயசாந்தி இணைந்து நடிக்கும் 'டெல்லி டைரி' என்ற படத்தைத் தமிழில் இயக்கி வருகிறார். இதைத் தொடர்ந்து பொபி டியோல் நடிக்கும் இந்திப் படமொன்றை இயக்கவிருக்கிறார்.

* ஏ.வி.எம்மின் 'மின்சாரக்கனவு' படத்தின் நாயகியான கஜோலின் தங்கை தனிஷா 'தரரம்பம்' என்ற இந்திப் படத்தின் மூலம் அறிமுகமாகிறார். இப்படத்தை 'பண்டிட் குயின்' சேகர் கபூர் இயக்குகிறார்.

அமிதாப்பச்சன் தமிழில் தயாரிக்கும் 'உல்லாசம்' படத்தில் அஜித்குமாருக்கு ஜோடியாக மகேஸ்வரி நடிக்கிறார். ஜேடி-ஜெர்ரி இயக்கும் இப்படத்திற்கு கார்த்திக்ராஜா இசையமைக்கிறார்.

* 'முஸ்தபா' வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருப்பதால் நெப்போலியனின் மார்க்கெட் மீண்டும் சூடு பிடித்துள்ளது. 'முஸ்தபா'வுக்குப் பின்னர் நான்கு புதிய படங்களில் இவர் ஒப்பந்தமாகியுள்ளார்.

* எம்.ஜி.பிக்சர்ஸ் நிறுவனம் தயாரிப்பில் விஜய் நடிக்கும் படத்தை ராஜகபூர் இயக்குவதாக இருந்தது. இப்போது இந்தப் படத்தை இயக்கப்போவது ஆர்.சுந்தர்ராஜன்.

## திருமண வாழ்த்துக்கள்

பிரபு தேவாவின் சகோதரர் நாகேந்திர பிரசாத் 'தொட்டாச் சிணுங்கி' படத்தில் ரஜினி ரசிகராக நடித்திருந்தார்.

தற்போது புதிய படம் ஒன்றில் கதாநாயகனாக நடிக்கிறார். படத்தின் பெயர். திருமண வாழ்த்துக்கள். 'புதையல்' பட நாயகி சாக்ஷிதான் கதாநாயகி.

## "மந்திரம் சொல்லித்தா!"

அஜித்குமார்-கீர்த்தனா ஜோடி நடித்துவரும் படம் 'மைனர் மாப்ளே!

கார் சாரதியாக நடிக்கிறார் அஜித். அவருக்கும் பணக்காரவீட்டுப் பெண் கீர்த்தனாவுக்கும் இடையே காதல் மலர்கிறது. காதலின் நடுவே பாடல் இல்லாவிட்டால் எப்படி? 'தந்தி கொடு, தந்தி கொடு, காமனுக்கு தந்தி கொடு, மந்திரத்தை சொல்லித்தரவேணும்..' என்று தொடர்கிறது பாடல். மந்திரம் சொல்ல காமன் எதற்கு, அஜித் இருக்கும்போது?





சிரஞ்சீவி-விஜயசாந்தி படம் வீரவிளையாட்டு

## பார்க்கக்கூடிய படம்

புத்தாண்டுக்கு வெளியாகியுள்ள படங்களில் பார்க்கக்கூடிய படம் எது? தரமான வீடியோ கொப்பி கிடைத்தால் 'சிறைச்சாலை' பார்க்கலாம்.

மோகன்லால்-தபு சம்பந்தப்பட்ட காதல் காட்சிகள் நயமாக உள்ளன. பிரபு நகைச்சுவை கலந்து அசத்துகிறார். இளையராஜாவின் பின்னணி இசை தூள் கிளப்புகிறது.

இயக்குநர் பிரியதர்ஷன் பிரமாண்டம் காட்டி மிரட்டுகிறார்.

காதலி தன் நெற்றி மூலம் காதலனின் நெற்றியில் குங்குமம் வைக்கும் காட்சியில் மோகன்லாலும்-தபுவும் சூப்பர்.

இந்தியா சுதந்திரமடையும் முன்னர் அந்தமானில் சிறைவைக்கப்பட்டிருந்த இந்தியர்கள் எப்படி நடத்தப்பட்டார்கள்? கதை அதுதான். அது சொல்லப்பட்டுள்ள விதம்தான் பிரமாதம்.

மோகன்லாலும், பிரபுவும் உருவவிடயத்தில் கச்சிதமான ஜோடிப் பொருத்தம். படத்தில் அதுவும் ஒரு சிறப்பு.

## நானா-மனிஷா பிரிந்தனர்

நல்ல நண்பர்களாக சுற்றினார்கள் நானா படேகரும், மனிஷா கொய்ராலாவும். இருவரும் ஒருவரை ஒருவர் நன்கு அறிந்தும் கொண்டனர். இப்போது திகட்டிவிட்டது.

"நானா படேகர் என்னைவிட மூத்தவர் அவருக்கு குடும்பமும் இருக்கிறது. ஆகவே நாம் இருவரும் நட்போடு பிரிந்துவிட்டோம்" என்று பம்பாய் சஞ்சிகைக்கு பேட்டி கொடுத்துள்ளார் மனிஷா கொய்ராலா.

ஆகவே, இத்தால் யாவருக்கும் தெரிவிப்பது என்னவென்றால், மனிஷா, நானா படேகர் ஒருவருடக் காதல் முடிவுக்கு வந்துவிட்டது.

...வை ...ட்டில் ...யாக ...லி' ...).



## நான்கு மொழிகளில் 'அரசியல்'

மம்முட்டி-ரோஜா நடித்து சூப்பர் ஹிட்டான படம் 'மக்களாட்சி'. அதனை இயக்கியவர் ஆர்.கே.செல்வமணி.

அரசியலை சாடும் அதிரடிப் படம் மக்களாட்சி.

இப்போது ஆர்.கே. செல்வமணி புதிய படம் ஒன்றை இயக்கப் போகிறார். படத்தின் கதை என்னவாக இருக்கும் என்ற கேள்விக்கே அவர் இடம் வைக்கவில்லை. படத்தின் பெயரிலேயே கதை தெரிகிறது. படத்தின் பெயர்: 'அரசியல்'

கதாநாயகன் மம்முட்டி. அவருக்கு ஜோடியாக நடிப்பவர் இந்தி நடிகை ஷில்பா சிரோத்கர். இவர் 'ஹம்', 'குதாகலா' போன்ற படங்களில் அசத்தியவர்.

பிரசாந்தும் மற்றொரு கதாநாயகனாக நடிக்கிறார். மன்சூர் அலிகான், அனுபம்கேர், ராதாரவி, மணிவண்ணன், தியாகு ஆகியோரும் நடிக்கின்றனர்.

தமிழ், மலையாளம், தெலுங்கு, இந்தி ஆகிய நாலு மொழிகளிலும் தயாராகிறது.

ஆர்.கே. செல்வமணியின் காதலி ரோஜா இதில் நடிக்கவில்லை.


## தமிழில் வரும் 'சங்கம்'

மணிரத்னம் இயக்கத்தில் ஆனந்தம் படத்தில் மோகன்லால் நடித்துவருகிறார். இதற்கு முன்னர் மணிரத்னம் முதன் முதலாக இயக்கிய மலையாளப் படம் ஒன்றிலும் மோகன்லால் நடித்திருந்தார். படத்தின் பெயர் சங்கம். தொழிலாளர் பிரச்சனையை மையமாகக் கொண்ட படம் அது.

பல ஆண்டுகள் கழித்து இப்போது அதனை தமிழில் மொழிமாற்றுகிறார்கள். 'சங்கம்' என்ற பெயரிலேயே தமிழிலும் வரப்போகிறது.

இசை: இளையராஜா. வசனம்: பரதன், திரைக்கதை, இயக்கம் மணிரத்னம்.

சிரஞ்சீவி-விஜயசாந்தி படம் வீரவிளையாட்டு



கமல்-மனிஷா கொய்ராலா படம் இந்தியன்



படிப்பகம்

www.padippakam.com

அட்வைஸ்

# மறப்பது உங்கள் வழக்கமா?

ஞாபகமறதி இல்லாதவர்களே இருக்க மாட்டார்கள். ஆனால் சிலர்தான் 'மகா மறதி'க்காரர்களாக இருக்கிறார்கள். இதற்கு என்ன காரணம் என்று அமெரிக்காவில் சமீபத்தில் ஆராய்ச்சி நடத்தப்பட்டது.

அப்போது பல ருசிகரத் தகவல்கள் கிடைத்தன.

ஒவ்வொரு நாளும் மூளையில் உள்ள இலட்சக்கணக்கான செல்களில் இருந்து பத்தாயிரம் செல்கள் அழிகின்றன. இதனால் தான் ஞாபகசக்தி கணிசமான அளவுக்குக் குறைகிறது.

சில கொலையாளிகளுக்கு தாங்கள் யாரைக் கொலை செய்தோம் என்பது கூட இதனால் நினைவுக்கு வருவதில்லை. இத்தகைய ஞாபக மறதிகள் மூளையில் ஏதோ ஒரு கோளாறு ஏற்பட்டுள்ளது என்பதைத்தான் உணர்த்துகிறது.

பிறக்கும்போது நாம் எல்லாரும் ஒரே மாதிரியான ஞாபக சக்தியுடன்தான் பிறக்கிறோம். ஆனால் இடையிடையே



ஏற்படும் கோளாறுகளால் ஞாபகசக்தி குறைந்து விடுகிறது.

இதை நீங்கள் நினைத்தால்... குறைத்துக் கொண்டு, ஞாபக சக்தியை வளர்த்துக் கொள்ள முடியும். அதற்கான வழிமுறைகள் இதோ:-

* எதையும் படிக்கும் போது, முழு மனதுடன் ஆழ்ந்து படியுங்கள்.
* ஏதாவது ஒன்றை மறக்கக் கூடாது என்றால் மீண்டும் மீண்டும் அதை மனதிற்குள் சொல்லிப்பார்க்க வேண்டும்.
* அடிக்கடி உங்களுக்குள் நீங்களே கேள்விகள் கேட்டு மூளைக்கு நல்ல பயிற்சி கொடுங்கள்.
* தினமும் உடற்பயிற்சி செய்வது ஞாபக சக்தியை அதிகரிக்கும்.
* தகவல்களை ஞாபகத்தில் கொண்டுவர அதனுடன் தொடர்பானவற்றை நினைவுக்குக் கொண்டு வர பயிற்சி பெறலாம்.
* எந்தப் பொருளை எங்கு வைத்தோமோ, அங்கேயே வைத்துப் பழகினால் எங்கு வைத்தோம் என்ற மறதியைக் குறைக்கலாம்.
* ஞாபகசக்தி இல்லையே என்று பயப்படாதீர்கள். அது நோயை அதிகரிக்கலாம்.

# மேனி அழகை மெருகூட்டலாம்



* வாஸ்லின் மற்றும் தேன் கலந்து-வெடித்த உதடுகளில் தடவி பிறகு வெதுவெதுப்பான நீரால் கழுவிவிட நிவாரணம் கிடைக்கும். வாரத்திற்கு மூன்று முறை செய்து வந்தால் உதடு வெடிப்பு பிரச்சனை வராமல் தடுக்கலாம்.
* தினமும் சிறிதளவு துளசி சாப்பிட்டு வாருங்கள். ஆரோக்கியமான சருமத்திற்கு துளசி சிறந்த மாமருந்து. துளசி சருமத்தில் தோன்றும் வெள்ளைப் புள்ளிகளைக் கூட காணாமல் போகச் செய்யும்.
* வறண்டு போன மற்றும் கிருமி தொற்றிய உள் மண்டை, பொடுகு ஏற்படக் காரணமாகிறது. வாரம் ஒரு முறை கரட்டைக் குழைத்துத் தலையில் பூசிக் குளித்து வர பொடுகு நீங்கும்.
* தலை முடியின் நிறம் மாறாமல், கொட்டாமல் இருக்க-புரதம் நிறைந்த உணவுப் பொருட்களை உங்களது உணவில் சேர்த்துக் கொள்ளுங்கள்.
* பத்து இலவங்கத்தை ஒரு லீட்டர் தண்ணீரில் போட்டு ஃபிரிட்ஜில் வைத்து விடுங்கள். அவ்வப்போது அந்தத் தண்ணீரால் வாய் கொப்பளித்து வர வாய் துர்நாற்றம் நீங்கும். சுவாசப் புத்துணர்ச்சி கிடைக்கும்.
* அழகான, மென்மையான சருமத்திற்கு-2 தேக்கரண்டி எலுமிச்சம் பழச்சாறு, 3 தேக்கரண்டி ரோஸ் வோட்டர், 1 தேக்கரண்டி கிளிசரின் ஆகியவற்றைக் கலந்து முகம் மற்றும் உடலெங்கும் பூசி 10 நிமிடம் கழித்து நீராடுங்கள்.
* நிறைய தண்ணீர் குடியுங்கள். தண்ணீரானது உடலையும் நமது தோலையும் சுத்தப்படுத்துகிறது. அதிகாலையில் தண்ணீரோடு தேனையும் சேர்த்து வெறும் வயிற்றில் பருகிவந்தால் சருமம் ஆரோக்கியமாகும்.
* வெயில், தூசு, காற்று மற்றும் தூக்கமின்மை, மனச்சஞ்சலம், அதிகம் புகை பிடித்தல், மது அருந்துதல் இவைகள் நமது தோலும், உடலும் கெட்டுப் போகக் காரணமாக இருப்பவை. இவற்றைத் தவிருங்கள்.

# சென்ட் உபயோகிப்பது எப்படி?

நீங்கள் சென்ட் பயன்படுத்துபவர்களானால் இதைச் சற்றுப் படியுங்கள்.

* விலை சற்றுக் கூடியதாக இருந்தாலும் தரமான சென்டையே வாங்கி உபயோகியுங்கள்.
* சருமத்திற்கு தீங்கு விளைவிக்காத சென்ட்டைப் பாவியுங்கள்.
* இருண்ட, குளிரான பகுதியில் சென்ட்டை வைத்திருக்க வேண்டும்.
* சென்ட்டை பாவிக்கத் தொடங்கினால், அதனை அதிக நாட்களுக்குப் பயன்படுத்தாதீர்கள். அது போல் வாங்கி வைத்திருந்து அதிக நாட்கள் பாவிக்காமல் இருப்பதும் கூடாது.
* உடல் சூடு கொண்டவர்கள் உடலுக்கு சென்ட் பூசுவது நல்லதல்ல. இவர்கள் தங்கள் உடைகளில் பூசிக்கொள்ளலாம்.
* சென்ட் பயன்படுத்துகிறவர்கள் அடிக்கடி பல்வேறு வகையான சென்ட்டை மாற்றாமல், ஒரே வகையைத் தொடர்ந்து பயன்படுத்துவது நல்லது.
* கை மணிக்கட்டு, கழுத்தின் பின்பகுதி, காதின் பின் பகுதி போன்றவைகளில் சென்ட் தடவினால் வாசனை அதிக நேரம் நிற்கும்.

# லேடீஸ் ஸ்பெஷல்

நடிகை சுகன்யா சந்தனக் கடத்தல் மன்னன் வீரப்பனுக்கு எதிராக அவதூறு வழக்குத் தொடர்ந்திருக்கிறார்.

தமிழ்நாடு-கர்நாடக எல்லைக் காடுகளில் மறைந்திருந்து பொலிசாருக்கு தண்ணி காட்டிக்கொண்டிருப்பவன் வீரப்பன்.

## வீரப்பன் சொன்ன இரகசியம்?

# 'சுகன்யா தொடுத்தார் வழக்கு'

சுகன்யாவுக்கும் அவனுக்கும் என்ன சம்பந்தம் என்று யோசிக்கிறீர்கள் அல்லவா?

அதுபற்றிய விபரம் இதுதான்:

சந்தனக் கடத்தல் வீரப்பனை காட்டுக்குள் சென்று சந்தித்தார்கள் 'நக்கீரன்' என்னும் வாரப்பத்திரிகை நிருபர்கள்.

அதுமட்டுமல்ல, வீரப்பனின் பேட்டியையும் வீடியோவில் பதிவு செய்து கொண்டு வந்தார்கள்.

கருணாநிதியின் குடும்ப நிறுவனமான சன் ரி.வியில் அப்பேட்டி ஒளிபரப்பானது.

ஒரு கல்லில் இரண்டு மாங்காய்களை அடித்தது சன் ரி.வி.

வீரப்பன் பேட்டி மூலம் சன் ரி.விக்கு பரபரப்பான விளம்பரம்.

வீரப்பனின் பேட்டியில் உள்ள சில விஷயங்கள் தமிழக முதல்வருக்கு பாதகமானவை.

வீரப்பன் சொன்னதில் மிகவும் பாதகமான விஷயம் நடிகை சுகன்யா தொடர்பானவை.

இந்தியப் பிரதமர் நரசிம்மராவின் இரு மகன்களும் தமிழக முதல்வருக்கு மிகவும் வேண்டியவர்கள் என்பது தெரிந்த விடயம் தான்.



வீரப்பன் என்ன சொன்னான் தெரியுமா?

இந்நியப் பிரதமரின் மகன்களில் ஒருவருக்கு சுகன்யா தரப்பட்டார். இருவரும் உடலுறவில் ஈடுபட்டபோது அதனை வீடியோ படம் பிடித்தனர். அதனை வைத்து மிரட்டித்தான் காங்கிரசுடன் கூட்டணியை ஏற்படுத்தினார் ஜெயலலிதா" என்று தனது பேட்டியில் சொல்லியிருந்தான் வீரப்பன்.

அதன்பின்னர்தான் சுகன்யா நக்கீரன் பத்திரிகை நிறுவனத்திற்கும், அதன் ஊடாக வீரப்பனுக்கும் அவதூறு வழக்குத் தொடர்ந்துள்ளார்.

ஏற்கனவே அமைச்சர் கண்ணப்பனுக்கும் சுகன்யாவுக்கும் இடையே இருந்த தொடர்பு குறித்த பல கிசு-கிசுக்கள் பரவியிருந்தன.

குறிப்பிட்ட அமைச்சர் மூலமே சுகன்யா பயன்படுத்தப்பட்டார், என்றும் தகவல்கள் பரவியுள்ளன.

பெரும் புள்ளிகளை சரிக்கட்ட தமிழக அரசியல் வட்டாரங்கள் நடிகைகளைப் பயன்படுத்துவது ஒன்றும் புதியதல்ல.

அம்பிகா-ராதா-பானுப்பிரியா ஆகியோரது பெயர்கள் முன்பு பரவலாக இந்த விவகாரங்களில் அடிபட்டன.

இப்போது சுகன்யாவின் பெயர் அடிபட்டுள்ளது.

# சமைப்போம் சுவைப்போம்

தொகுத்துத் தருவது-சுகந்தினி

## வெஜிடபிள் சாலட்

தேவையான காய்கறிகள்:

முட்டைக்கோவா - 200 கிராம்
கரட் - 200 கிராம்
வெள்ளரிக்காய் - 200 கிராம்
தக்காளிப் பழம் - 200 கிராம்
பீட்ரூட் - 100 கிராம்
எலுமிச்சம் பழம் - 2
மிளகுத்தூள் - அளவாக
உப்பு - அளவாக

செய்முறை:

கோவா, கரட் போன்றவற்றை நன்கு கழுவி, பொடியாக நறுக்கிக் கொள்ளவும். வெள்ளரிக்காயின் தோல், விதை நீக்கித் துருவ வேண்டும். தக்காளியையும் சிறிய துண்டுகளாக நறுக்கிக் கொள்ளவும். பின் இவற்றை ஒன்றாகச் சேர்த்து எலுமிச்சம் பழம் பிழிந்து, மிளகுத்தூளும் உப்பும் கலந்து பத்து நிமிடம் ஊறவைக்க வேண்டும். பின்னர் எடுத்துப் பரிமாறலாம். காரம் வேண்டுமானால் இரண்டு, மூன்று பச்சை மிளகாயை பொடியாக நறுக்கிக் கலந்து கொள்ளலாம்.

# மக்கள் தீர்மானிப்பர்

இந்திய அணியில் தொடர்ந்து புறக்கணிப்பு இடம்பெறுவதால் கவலையடைந்துள்ளார் வினோத் காம்ளி.

வினோத் காம்ளியை பத்திரிகையாளர்கள் சந்தித்தனர். அப்போது பேட்டி கொடுக்க மறுத்துவிட்டார்.

பத்திரிகையாளர்கள் விடவில்லை. "உங்கள் ஆட்டத்திறமை சரியில்லை என்பதால்தான் இங்கிலாந்து சுற்றுப் பயணத்திலும் இடம்பெறவில்லையா?" என்று கேட்டனர்.

அதற்கு வினோத் காம்ளி, "நான் கருத்துச் சொல்ல விரும்பவில்லை. எனது ஆட்டத் திறமை குறித்து எனது நாட்டு மக்களே முடிவு செய்து கொள்ளட்டும்" என்றார்.

# இந்திய அணியில் புதுமுகங்கள்

இங்கிலாந்தில் 72 நாள் சுற்றுப்பயணம் செய்யும் இந்திய கிரிக்கெட் அணியில் நான்குபேர் புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்த சகல துறை ஆட்டக்காரர் சுநீல் ஜோஷி, பம்பாயின் மிதவேகப் பந்து வீச்சாளர் பரஸ் மம்ப்ரே, மத்திய பிரதேசத்தை சேர்ந்த சுழற்பந்து வீச்சாளர் நரேந்திர ஹிர்வாணி, மேற்கு வங்க மாநிலத்தைச் சேர்ந்த சௌரவ் கங்குலி ஆகியோரே புதியவர்கள்.

இவர்களில் சுநீல் ஜோஷி, பரல் மம்ப்ரே இருவரும் இந்திய கிரிக்கெட் அணிக்கு புது முகங்கள்.

நரேந்திர ஹிர்வாணி ஏற்கெனவே இந்திய அணியில் விளையாடி பிரபலம் அடைந்தவர். அவர் முதன் முதலில் விளையாடியது மேற்கிந்திய தீவுக்கு எதிரான டெஸ்ட் போட்டியில்தான். அதில் 12 விக்கெட்டுக்களை கைப்பற்றினார். ஒவ்வொரு இன்னிங்ஸிலும் தலா 6 விக்கெட்டுக்களை கைப்பற்றினார். இது 87-88 இல் மேற்கிந்திய அணி இந்திய சுற்றுப்பயணம் வந்தபோது ஹிர்வாணி படைத்த சாதனையாகும்.

அதன் பின்னர் சில போட்டிகளில்



ஜோஷி - புதுமுகம்

அவர் சோபிக்கவில்லை யென்பதால் அணியில் இருந்து தூக்கப்பட்டார். தற்போது மறுபடியும் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

ஆஷின் கபூர், பிரசாந்த் வைத்யா ஆகியோர் இங்கிலாந்து சுற்றுப்பயண அணியில் இடம்பெறவில்லை.

வினோத் காம்ளிக்கும் நீண்ட ஓய்வு கொடுக்கப்பட்டுள்ளது. இம்முறையும் அவரை சேர்த்துக் கொள்ளவில்லை.

# நாலு பந்தில் - நாலு விக்கெட்



தென் ஆபிரிக்க கிரிக்கெட் வீரர் ஷோன் புல்லொச் புதிய சாதனை ஒன்றைப் படைத்துள்ளார். இவர் தொடர்ந்து வீசிய நான்கு பந்துகளில் நான்கு விக்கெட்டுக்களை வீழ்த்தி கிரிக்கெட்டில் வரலாறு படைத்தார்.

இங்கிலாந்தில் உள்ள வோர்விக்ஷையர் கவுண்டி அணிக்கும், லீசெஸ்டாஷையர் அணிக்கும் இடையில் கடந்த 25ம் திகதி நடைபெற்ற போட்டியில் இவர் வோர்விக்ஷையர் அணிக்காக விளையாடியபோது இந்தச் சாதனையைப் படைத்துள்ளார்.

# வீட்டுக் குறிப்புகள்

* தோலால் செய்யப்பட்ட பைகள், பெட்டிகள் போன்றவற்றைச் சிறிது கிளிசறின் அல்லது வாசலின் போட்டுத் தேய்த்துத் துடைத்தால் அவை பளபளப்பாக இருக்கும்.
* பிளாஸ்டிக் பொருட்களில் இருந்து வரும் ஒரு வித வாடையைப் போக்க அவைகளை ஒரு கரண்டி உப்பு கலந்த தண்ணீரால் நன்றாகக் குலுக்கிக் கழுவினால் துர்வாடை போய்விடும்.
* கண்ணாடிப் பாத்திரங்களை நீலம் கலந்த தண்ணீரால் கழுவினால் அவை மிகவும் பளபளப்பாக இருக்கும்.
* கண்ணாடி டம்ளர்களில் வெந்நீரை ஊற்றும்பொழுது அவை சில சமயங்களில் வெடித்து விடும். இதற்கு டம்ளர்களில் ஓர் உலோக கரண்டியை வைத்துவிட்டு எவ்வளவு சூடான வெந்நீரை ஊற்றினாலும் அவை உடையாது.
* சுடுநீர் போத்தல்களைப் பாவிக்காமல் வைத்திருக்கும்போது அதற்குள் ஒரு கரண்டி சீனியைப் போட்டு வைத்தால் கெட்ட வாடைவராது.

# பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

மகளிர் மட்டும் மகளிர் மட்டும்



★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

★ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** L

பெயர்:..............................

முகவரி:..............................

..............................

கையொப்பம்:..............................

உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை

பி.கு: அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப் படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 11-05-1996

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.

# தினமுரசு-அம்மன் ஜுவல்லஸ் இணைந்து நடத்திய தங்கமாலை பரிசுப் போட்டி

முதல் பரிசாக நெக்லஸ் பெற்ற அதிஷ்டசாலி உட்பட 40 அதிஷ்டசாலிகளது பெயர்கள் முன்னர் வெளியிடப்பட்டன. ஏனைய 10 அதிஷ்டசாலிகளும் இவர்கள்தான்:-

1. எம்.வயலட் நோனா, இல.28, பண்டாரநாயக்க டவுன், ஹட்டன்.
2. எம்.திரு நிறைச்செல்வி, கொலனி வீதி, மன்னம்பிட்டி, பொலனறுவை.
3. திரு மதி.தி.ஜே.சாமுவேல், 508/7, வெளியேன் வீதி, தழுவகொடுவ, கொச்சிக்கடை.
4. எல்.மகேஸ்வரி, 84,ஹேகித்த வீதி, வத்தளை.
5. திரு மதி. சமீனா பேகம், 17, முறுத்தகஹமுல்ல, கம்பளை.
6. திரு மதி.வி.அலோசியஸ், 36/4,செண்ட் ஜோசப் மாவத்தை, நீர்கொழும்பு.
7. ரி.நிஷாந்தினி, A6, F30, புளுமெண்டால் தொடர்மாடி, கொட்டாஞ்சேனை, கொழும்பு-13
8. திரு மதி.எம்.எல்.எம்.றிஸ்வானா, சி.ரி.சி.வடக்கு வீதி, வீட்டு இல. 245, அட்டாளைச்சேனை-4.
9. கிருஷ்ணகுமாரி ரகுபதிராஜா, கதிர்காமர் ஒழுங்கை, ஆரையம்பதி-03
10. செல்வி.சமந்தா பேர்னாட், 'கிராண்ட் வியு', புனாகல வீதி, பண்டாரவளை.

பரிசுகள் பெறுவது தொடர்பாக கடிதம் மூலமாக அறிவிக்கப்படும்.

# இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை? மக்கொன வாசகிக்கு அதிஷ்டம்

இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான்.

**இர்பானா ரியால்**
531, காலி வீதி, மக்கொன.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக-வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?


இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.





படிப்பகம்

www.padippakam.com

# காட்டூண் கணைகள்




தமிழக பத்திரிகைகள் ஏவிய கணைகள் இவை.

## ஒரு பாலைவனத்தில் பூத்தோடி வந்தவர்கள்...

என் கண்களிலிருந்து
நழுவியோடிய காதலை,
நண்பர்களின்
நயனங்களில்
நிரப்பி வந்தா
என்னிடம் சேர்க்க முடியும்?
-o-
உமது சகாக்கள்
எமதில்லம் வந்த போது,
என் கண்களைக்
கடந்து போகக்
கண்ணீர் ஊர்வலமொன்று
காத்துக் கிடந்தது!
-o-
எனக்குள்ளே
ஓராயிரம் ஒப்பாரிகள்
ஒலியெழுப்ப முனைந்து,
ஓசைப்படாமல்
ஒடுங்கிக் கொண்டன!
-o-
நெஞ்சிலிருந்து
பொங்கியெழுந்த
ஆசைகள் யாவும்
வழிந்தோடி விட,
நிராசைகளே
எஞ்சியிருந்தன!
-o-
எனது இருண்ட உலகின்
விரக்தியின் அரண்களைத்
தகர்த்து விட்டு,
அன்பின் தீபங்களை–என்
ஆன்மாவின் மீது
அவர்களால்
ஏற்ற முடியவில்லை.
-o-
சின்னப் புறாவின்
முறிந்த சிறகுகளுக்கு
யாரிடமும்
கண்ணீரையும்
களிம்பாய்ப் பூசிக்
காயமாற்ற முடியாதே!
-o-
அவர்களால்–
பூட்டப்பட்டிருந்த
எனது அதரங்களில்
புன்னகையை
அணிவிக்க முடியவில்லை;
உறங்காத–எனது
நயனங்களை
நம்பிக்கை
முத்தங்களால்
மூடவைக்க முடியவில்லை;
-o-
என்றோ நாளங்களில்
முணுமுணுத்தோடும்
வேதனை ஓலங்களையும்
இதயத்திலிருந்து கசியும்
இரத்த ஓடைகளையும்
அவர்களின் பார்வைகளால்
ஒற்றியெடுக்கத் தெரியவில்லை!
-o-
அவர்கள்–
வரண்டிருந்த
வாழ்வை நோக்கி
வசந்தங்களைத்
திசை திருப்ப வந்த போது,
என் வாழ்க்கை நந்தவனம்
சாம்பல் திட்டாகிச்
சாபம் சுமந்து கொண்டிருந்தது!

செல்வி. பஹீமா ஜஹான்,
தெமடகொல்ல, மெல்சிரிபுர.

## தேன் கிண்ணம்

### நீ மௌனிக்கிறாய் நான் மரணிக்கிறேன்....

என் கனவுகளிலாவது
நீ–
புன்னகைத்துப் போயிருந்தால்....
என் கவிதையில்–
இத்தனை சோகங்கள்
இருந்திருக்க நியாயமில்லை...!
▫▫
உன்னால்–
உசுப்பப்பட்ட
என் வாலிபம்,
உன்னாலேயே
உதிர்ந்து விடப்போவதிலும்–
உனக்கு திருப்தியென்றால்....
நீ–
உதிர்ந்து விட்டே போகலாம்....!
▫▫
இது–
பூந்தோட்டத்திற்காயல்லவா
தவமிருந்தேன்–உன்னில்....?
நீயோ–
எறிந்து விட்டுப் போனது
சில–
கருகி விழுந்த சருகுகள்தான்!
▫▫
என் எல்லா வினாக்களுக்கும்
மௌனங்களே–
உன் பதில்களென்றால்....
இது வரையில்
என்னை நீ–
விரும்பாமலேயே
இருந்திருக்கலாம்....!
▫▫
சம்மதத்தின் அர்த்தங்கள்–
மௌனங்கள் மட்டும்தானா?
ஆயின்;
உன் சம்மதங்கள்–
எனக்கு
இப்போது தேவையில்லை!
▫▫
வார்த்தைகளை நீ
எங்கேயடி தொலைத்தாய்....?
ஊமை பாசையிலாவது–
உன்னால்–
உரையாட முடியாதா...?
▫▫
என்–
அவஸ்தை சொல்லி
நான்–
அழுவதென்றால்....
காதலி!
உன் விழிகளைக் கொஞ்சம்–
கடனாகத் தா....!
▫▫
என் கனவுகளிலாவது
நீ–
புன்னகைத்துப் போயிருந்தால்....
என் கவிதையில்–
இத்தனை சோகங்கள்
இருந்திருக்க நியாயமில்லை...!
▫▫

அட்டாளைச்சேனை, யூயெல் மப்ராக்.

## மஞ்சள் நிலவு

அந்த–
ஞாபகம்!
**
சிரித்து விடாத
புன்னகை!
**
அவிழ்ந்து
விழப்பார்க்கும்
மார்பு!
**
நீளமில்லாத
தூண்டில் போடும்
கூந்தல்!
**
பாதி இதயம் வெட்டிய
காதில்–
தூக்கிலிடப்பட்ட
அழகு வெட்டுக்கள்!
**
சோற்றுப் பருக்கையைக்கூட,
எண்ணி நகர்த்தும்
பிஞ்சு–
விரல் நுனிகள்!
**
மருதாணி போட்டு
இரத்த ஓடையான
நகங்கள்.
**
வெட்கித்து ஒடுங்கும்
அக்னி உதடுகள்.
**
பெண்ணே!
உனக்கு பள்ளி வாழ்க்கை
பூச்சியம்!
**
உன்னால் எனக்கும்
வாழ்க்கை பூச்சியம்!
**
கனவுகள் விற்கும்
மந்திர விழியால்
இப்போது–
ரணமாகிப் போயின
நாட்கள்!

அக்கரைப்பற்று-யெம்யே.தஸ்ரிப்

## சிக்கெட்




## நீயில்லாத இரவுகள்

நீள் வானத்தின்
அமாவாசை
அரிச்சுவடிகள்....
**
இமைகளுக்கிடையே
நெருஞ்சி முட்கள்....
**
நினைவுகள் உதிர்க்கும்
நெய்யில்
நெருப்பாய் வளரும்
விரதமும் விரகமும்....
**
நீயில்லாத இரவுகள்
நிர்வாணப்படுத்தும்
என் கவலைகளை.....
**
உன் இதழ் தொடர்ந்த
இடமெல்லாம்–
இரவின் எரிகற்கள்
தொடரும்.....
**
இவை–என்
காதலி(யி)ன்
கர்ம வேதனைகள்....
**
என்னுடன் சேர்ந்து
இரவை முடிக்கும்
விடி வெள்ளியே!
எப்போது– நான்
முடிந்து போவது....?
**
ஓ நம்பிக்கையே!
ஒளியிழந்தாலும்–நீ
என் வாழ்வின்
ஒற்றையடிப்பாதை!!

வளர்மதி–பொத்துவில்–02.

## இதுதான்டா இயற்கை

காலைச் செய்தி–
வறட்சியினால்
நான்கு மணிநேர
மின்வெட்டு!
*
பகல் செய்தி–
மழையின்மையால்
ஐந்து மணிநேர
மின்வெட்டு!
*
மாலைச் செய்தி–
வெள்ளம் ஏற்பட்டு
ஐம்பது பேர்
அகதிகள்!

கொக்காகல–எஸ்.பிரபா.

## இந்த வாரம் உங்கள் பலன்

( 05.05.96 முதல் 11.05.96 வரை)

சோதிட மாமணி 'தில்லை'

### நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| மேடம் | - சூரியன், செவ்வாய், புதன். |
| மிதுனம் | - வெள்ளி. |
| கன்னி | - இராகு. |
| தனு | - வியாழன். |
| மீனம் | - சனி, கேது. |

சந்திரன்- விருட்சிகம், தனு, மகரம், ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

### மீனம்:

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் மந்தம், பணவரவு குன்றும். | பி.ப. 2 மணி |
| திங்கள்- பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி. | காலை 7 மணி |
| செவ்வாய்- பலவித நன்மை, தேகசுகம் பாதிப்பு. | பி.ப. 1 மணி |
| புதன்- வீண் மனஸ்தாபம், உறவினர் பகை. | மு.ப. 9 மணி |
| வியாழன்- துயர் நீங்கும், பணவரவு. | பகல் 12 மணி |
| வெள்ளி- வெளியிட வாழ்க்கை, இனசன நன்மை. | காலை 8 மணி |
| சனி- தொழில் விருத்தி, முயற்சி பலிதம். | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்- திங்கள், அதிஷ்ட இலக்கம்-2

### மேடம்:

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் நன்மை, பணவரவு. | பகல் 12 மணி |
| திங்கள்- பெரியோர் உதவி, மனமகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |
| செவ்வாய்- வெளியிட வாழ்க்கை, உயர்ந்த நிலை. | பி.ப. 3 மணி |
| புதன்- இனசன நன்மை, கௌரவம். | பி.ப. 1 மணி |
| வியாழன்-புதிய முயற்சி, பொருள் பேறு. | காலை 8 மணி |
| வெள்ளி- தெய்வானுகூலம், மனத் தைரியம். | பகல் 12 மணி |
| சனி- தொழில் மந்தம், செலவு மிகுதி. | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-2

### இடபம்:

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- அந்நியர் உதவி, செலவு மிகுதி. | பி.ப. 2 மணி |
| திங்கள்- வீண் முயற்சி, மனக் கவலை. | பி.ப. 1 மணி |
| செவ்வாய்- உறவினர் உதவி, பணக் கஷ்டம். | காலை 6 மணி |
| புதன்- துயர் நீங்கும், உயர்ந்த நிலை. | பகல் 12 மணி |
| வியாழன்- கடன் பயம், கௌரவக் குறைவு. | காலை 7 மணி |
| வெள்ளி- செல்வாக்கு குறைவு, மனப் பயம். | பகல் 12 மணி |
| சனி- பெரியோர் நட்பு, மன மகிழ்ச்சி. | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-3

### மிதுனம்:

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, பண வரவு. | பி.ப. 1 மணி |
| திங்கள்- எதிர்பார்த்த நன்மை, செலவு மிகுதி. | காலை 7 மணி |
| செவ்வாய்- துயர் நீங்கும் உயர்ந்த நிலை. | பகல் 12 மணி |
| புதன்- அந்நியர் நட்பு, செல்வாக்கு மேன்மை. | காலை 7 மணி |
| வியாழன்- மனக்கவலை மறையும், பணக்கஷ்டம் தீரும். | மு.ப. 9 மணி |
| வெள்ளி- வீண் குரோதம், செய்தொழில் நட்டம். | பகல் 12 மணி |
| சனி- உறவினர் பகை, மனக் கலக்கம். | காலை 10 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-7

### கும்பம்:

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, பணவரவு. | காலை 6 மணி |
| திங்கள்- பெரியோர் உதவி, முயற்சி பலிதம். | காலை 8 மணி |
| செவ்வாய்- வீண் மனஸ்தாபம், கௌரவம். | பகல் 12 மணி |
| புதன்- துயர் நீங்கும், உயர்ந்த நிலை. | காலை 7 மணி |
| வியாழன்-மனக் கலக்கம், செலவு மிகுதி. | பகல் 11 மணி |
| வெள்ளி- முயற்சி பலிதம், தொழில் விருத்தி. | காலை 7 மணி |
| சனி- இனசன நன்மை, பணச் செலவு. | பி.ப. 1 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6

### கர்க்கடகம்:

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் மந்தம், பொருள் விரயம். | பகல் 12 மணி |
| திங்கள்- பெரியோர் நட்பு, மன மகிழ்ச்சி. | மு.ப. 9 மணி |
| செவ்வாய்- உறவினர் உதவி, பணச் செலவு. | பி.ப. 1 மணி |
| புதன்- காரியானுகூலம், தொழில் சிறப்பு. | பகல் 11 மணி |
| வியாழன்- வீண் குறை கேட்டல், காரிய நஷ்டம். | காலை 7 மணி |
| வெள்ளி- தொழில் விருத்தி, பணவரவு. | பி.ப. 2 மணி |
| சனி- இனசன நன்மை, கௌரவம். | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-4

### மகரம்:

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பெரியோர் பகை, மனக் கலக்கம். | பி.ப. 2 மணி |
| திங்கள்- பயனுள்ள செயல், கௌரவம். | மு.ப. 9 மணி |
| செவ்வாய்- புதிய முயற்சி, பணச் செலவு. | பகல் 12 மணி |
| புதன் - அந்நியர் நட்பு, மனக் கலக்கம். | காலை 7 மணி |
| வியாழன்- உறவினர் உதவி, மனமகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |
| வெள்ளி- எதிர்பார்த்த நன்மை, துயர் நீங்கும். | காலை 7 மணி |
| சனி- வெளியிட வாழ்க்கை, மன நிம்மதி. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-9

### சிம்மம்:

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பெரியோர் நட்பு, மனமகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| திங்கள்- அந்நியர் உதவி, செலவு மிகுதி. | காலை 6 மணி |
| செவ்வாய்- எதிர்பார்த்த நன்மை, மீனக் கலக்கம். | பி.ப. 2 மணி |
| புதன்- புதிய முயற்சி, உயர்ந்த நிலை. | காலை 6 மணி |
| வியாழன்-தொழில் விருத்தி, பயனுள்ள செயல். | பகல் 12 மணி |
| வெள்ளி- வெளியிடப் பயணம், செல்வாக்கு மேன்மை. | பகல் 2 மணி |
| சனி- இனசன மேன்மை, உயர்ந்த நிலை. | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6

### தனு:

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, அந்நியர் உதவி. | காலை 6 மணி |
| திங்கள்- உயர்ந்த நிலை, மன மகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| செவ்வாய்- காரியானுகூலம், பணவரவு. | பகல் 11 மணி |
| புதன்- புதிய முயற்சி, செலவு மிகுதி. | பி.ப. 2 மணி |
| வியாழன்- பயனுள்ள செயல், அதிகார சித்தி. | மு.ப. 9 மணி |
| வெள்ளி- துயர் நீங்கும், இனசன மேன்மை. | பகல் 12 மணி |
| சனி- தொழில் மந்தம், வீண் பிரயாசம். | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-4

### விருட்சிகம்:

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் விருத்தி, முயற்சி பலிதம். | காலை 6 மணி |
| திங்கள்- பயனுள்ள செயல், மன மகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |
| செவ்வாய்- வீண் முயற்சி, பணச்செலவு. | காலை 6 மணி |
| புதன்- இனசன நன்மை, அந்நியர் நட்பு. | பகல் 12 மணி |
| வியாழன்- தொழில் மந்தம், பணவரவு குன்றும். | பி.ப. 2 மணி |
| வெள்ளி- பெரியோர் உதவி, உயர்ந்த நிலை. | மு.ப. 9 மணி |
| சனி- பொருள் வரவு, முயற்சி மேன்மை. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-2

### துலாம்:

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- இனசன நன்மை, செல்வாக்கு மிகுதி. | பி.ப. 2 மணி |
| திங்கள்- புதிய முயற்சி, வெளியிட வாழ்க்கை. | பகல் 12 மணி |
| செவ்வாய்- தொழில் விருத்தி, மனக்குறை நீங்கும். | காலை 7 மணி |
| புதன்- பணக் கஷ்டம், கடன் படல். | காலை 6 மணி |
| வியாழன்- பெரியோர் நட்பு, அந்நியர் உதவி. | பகல் 12 மணி |
| வெள்ளி- காரியானுகூலம் மன மகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |
| சனி- வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | மு.ப. 10 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5

### கன்னி:

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)


| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பொருள் விரயம், மனக் கலக்கம். | காலை 6 மணி |
| திங்கள்- வெளியிடப் பயணம், கௌரவம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- புதிய முயற்சி, வீண் மனஸ்தாபம். | பி.ப. 1 மணி |
| புதன்- துயர் நீங்கும், எதிர்பாராத செலவு. | மு.ப. 9 மணி |
| வியாழன்- பயனுள்ள செயல், பெரியோர் உதவி. | பகல் 12 மணி |
| வெள்ளி- காரியானுகூலம், உறவினர் பகை. | காலை 7 மணி |
| சனி- தொழில் விருத்தி, முயற்சி பலிதம். | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-8



படிப்பகம்





# வெள்ளாடே! வெள்ளாடே!

வெள்ளாடே! வெள்ளாடே!
விளையாடப் போறியா?
பள்ளிக்கூடம் போகப் போறேன்
படிக்க நீயும் வாறியா!

'மே' மாதம் கூட இப்போ
நல்லா நீயும் சொல்லுறே!
மேல் வகுப்பு உனக்கு உண்டு.
நிச்சயம் நான் சொல்கிறேன்!

அம்மாவையும் கன்றுபோல
அழகு தமிழில் சொல்லணும்
ஆனந்தமே நமது வாழ்வில்
என்றும் வந்து துள்ளணும்!

எல்லா மொழியும் இளமையிலே
எளிதில் கற்றுக் கொள்ளணும்
இன் தமிழின் ஏற்றமதை
எடுத்ததிலே சொல்லணும்!

எம்.ஏ. இசார்தீன், அட்டாளைச் சேனை-10.

மெல்லத் தெரிந்து சொல்! மேழி போற்று!
மொய்ம்புறத் தவம் செய்! மோனம் போற்று!
மௌட்டியந் தனைக் கொல்! யவனர் போல் முயற்சி கொள்!
யாரையும் மதித்து வாழ்! யௌவனம் காத்தல் செய்!

-சுப்பிரமணிய பாரதியார்.

## பாப்பா முரசு சிறுகதை



# பேச்சுக்கலை

முன்னொரு காலத்தில் அழகாபுரி என்ற நாட்டை அழகேசன் என்ற மன்னன் ஆட்சி புரிந்து வந்தான்.

ஒரு நாள் இரவு அவனுக்கு ஒரு கனவு வந்தது.

அவன் வாயில் ஒரு பல்லு மட்டும் இருக்க மற்ற எல்லாப் பற்களும் விழுந்து விட்டன. இதுதான் அவன் கண்ட கனவு.

கனவு கண்டு தூக்கத்தில் அலறி அடித்துக் கொண்டு எழுந்து விட்டான் அரசன். உடனே கண்ணாடி முன் நின்று வாயை 'ஆ' வென்று திறந்து கொண்டு பார்த்தான். எல்லாப் பற்களும் அப்படியே இருப்பதைப் பார்த்து ஆறுதலும், மகிழ்ச்சியும் அடைந்தான். ஆனாலும் அந்தத் துர்க்கனவினால் அவன் மனம் நிம்மதியில்லாமல் இருந்தது.

மறுநாள் காலையில் அரண்மனை ஜோதிடர்களை எல்லாம் அழைத்தான் அழகேசன்.

என்னவோ ஏதோவென்று பயந்து கொண்டே அரண்மனை ஜோதிடர்கள் எல்லாரும் தர்பாருக்கு வந்தார்கள்.

எல்லாரையும் அமரச் சொன்ன அரசன் அவர்களைப் பார்த்து,

"ஜோதிடர்களே! நேற்றிரவு நான் ஒரு கனவு கண்டேன். அக்கனவுக்கு என்ன பலன் என்று கேட்டறியவே உங்களை எல்லாம் இங்கே அழைத்தேன்" என்றான்.

எல்லா ஜோதிடர்களும், "சொல்லுங்கள் அரசே!" என்றார்கள்.

"கனவில் என் பற்களில் ஒன்று மட்டும் மீதி இருக்க மற்ற எல்லாப் பற்களும் உதிர்ந்து விட்டன. இக்கனவுக்கு என்ன பலன் ஜோதிடர்களே?" என்று கேட்டான் அரசன் அழகேசன்.

"அரசே! நாங்கள் அனைவரும் தனியே கூடி இக்கனவு பற்றி ஜோதிட நூல்கள் என்ன கூறுகின்றன என்பதை விவாதித்து தங்களுக்குத் தெரிவிக்கிறோம்." என்றார்கள் ஜோதிடர்கள்.

"அப்படியே செய்யுங்கள்" என்றான் அரசன் அழகேசன்.

ஜோதிடர்கள் தனி மண்டபத்தில் கூடி அரசன் கண்ட கனவைப்பற்றி பேசினார்கள். விவாதித்தார்கள். ஜோதிட நூல்களை ஆராய்ந்தார்கள். பிறகு அரசனிடம் வந்தார்கள்.

"என் கனவுக்கு என்ன பலன்?" என்ற அவர்களிடம் ஆவலாகக் கேட்டான் அரசன்.

அவர்கள் தயங்கியபடி, "அரசே...! மன்னிக்க வேண்டும்; நீங்கள் நிர்ப்பந்திப்பதால் சொல்ல வேண்டி இருக்கிறது.... உங்களுக்கு முன் உங்கள் மனைவி, மக்கள், உறவினர்கள் இறந்து விடுவார்கள் என்பதுதான் நீங்கள் கண்ட கனவின் பலன்" என்றார்கள்.

அதைக் கேட்டுக் கோபமடைந்த அரசன், "என்ன தைரியம் உங்களுக்கு....? எனக்கு முன்னே என் மனைவி, பிள்ளைகள், உறவினர்கள் இறந்து விடுவார்கள் என்று சொன்ன உங்களை என்ன செய்கிறேன் பாருங்கள்," என்று சொல்லி சிறையிலடைக்கும்படி உத்தரவிட்டான்.

இந்நேரத்தில் அயல் நாடொன்றிற்கு நல்லெண்ண விடயமாகச் சென்றிருந்த மந்திரி அறிவானந்தம் நாடு திரும்பினார். அவர்தான் தனது கனவுக்குச் சரியான பலன் கூறுவார் என்றெண்ணி அவரிடம் கேட்டான் அரசன் அழகேசன்.

நாடு திரும்பியதும் அரண்மனையில் நடந்த விஷயங்களை எல்லாம் அறிந்திருந்தார் அறிவானந்தம். ஜோதிடர்கள் சொன்ன கனவின் பலன் சரியானதுதானென்றும், அவர்கள் சொல்லிய விதம் தான் சரியில்லை என்றும் எண்ணிய மந்திரி அரசனிடம்,

"அரசே.... நீங்கள் நீடித்த ஆயுளை அடைந்திருப்பீர்கள். உங்கள் மனைவி, மக்கள், உறவினர்களை விட அதிக காலம் உயிர் வாழ்வீர்கள் என்பது தான் நீங்கள் கண்ட கனவின் பலன்," என்றார்.

அதைக் கேட்டு அரசன் அழகேசன் மனம் மகிழ்ந்தான். அந்நேரம் பார்த்து, சிறையிலுள்ள ஜோதிடர்களை எல்லாம் விடுதலை செய்யும்படி கேட்டுக் கொண்டார் அறிவானந்தம். அவனும் அப்படியே செய்தான்.

பேச்சு ஒரு கலை. வாயில் வந்தபடி எதையும் பேசி விடக்கூடாது. பேசுவது என்ன என்பதை யோசித்துப் பேசினால் மட்டும் போதாது; அதை எப்படிப் பேச வேண்டும் என்பதை அறிந்து கொண்டு பேசவேண்டும். உண்மைபேச ஏன் பயப்படவேண்டும் என்று எண்ணி அப்படியே பேசி விடக்கூடாது. அதை மற்றவர்கள் ஏற்றுக்கொள்ளும் விதத்தில் எப்படிப் பக்குவமாக சொல்ல முடியுமோ அப்படிச் சொல்ல வேண்டும். ●

# வாரம் ஒரு நாடு

## மாரிடானியா

தலை நகர்-நவாக்சோட்
பரப்பு- 10,30,700 சதுர கிலோ மீட்டர்.
மக்கள் தொகை-22,00,000
மொழி- அரபி, ஃபிரெஞ்சு,ஹசான்யா
எழுத்தறிவு- 30%
சமயம்- இஸ்லாம்
நாணயம்-ஒகுயா
தனி நபர் வருமானம்- 520 டொலர்.



**அமைவிடம்:-**

மாரிடானியா இஸ்லாமியக் குடியரசு, மேற்கு ஆபிரிக்க முனையில் அட்லாண்டிக் கடற்கரைப் பகுதியில் அமைந்துள்ளது.


**வரலாறு:-**

மாரிடானியா முன்னர் ஃபிரெஞ்சு நாட்டின் கடல் கடந்த ஆதிக்கப் பகுதியாயிருந்தது. 1958 இல் தனியுரிமை பெற்று 1960 இல் முழுச்சுதந்திரம் அடைந்தது. 1978 இராணுவக் கலவரங்களைத் தொடர்ந்து, இராணுவக் குழுக்களின் ஆட்சி.

**பொருளாதாரம்:-**

மக்கள் பரம்பரையாக ஆடு, மாடு, மேய்த்தலைத் தொழிலாகக் கொண்ட நாடோடிகள். மீன் பிடித்தல் முக்கிய தொழில். இரும்பு, செம்பு போன்றவை அதிகளவில் கிடைக்கின்றன. எண்ணெய் உற்பத்தியும் நடைபெறுகிறது. ●

# சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 11.05.1996.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 139
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 137

பரிசுக்குரியவர்:
சு.கீதாரமணி தயாநிதி.
நிமல் வீதி, கொழும்பு-04.

### பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| செல்வன்.எம். ரிஹான். காலிவீதி, ஹேனமுல்ல, பாணந்துறை. | செல்வன். சொ. பிரியதர்சன். திருமகள் விதி, கல்லடி உப்போடை, மட்டக்களப்பு. |
| ஜே. புஸ்பாலினி மெயின் வீதி, கொஸ்லாந்தை. | செல்வி. பாத்திமா சர்க்கா. சென் ஜுட் பிளேஸ், நீர்கொழும்பு. |
| செல்வன். அன்ரூ ராஜன். புனித அந்தோனியார் கல்லூரி, வத்தளை. | நஸீர் நஸ்ரியா. நெய்தல் நகர், மூதூர்-01. |
| செல்வி. ஜோய்லிட்டா ஜோன்சன். கிளரண்டன் எஸ்டேட், நானுஓயா. | செல்வி. பி. சாலினி. வ/சைவப் பிரகாச மகளிர் கல்லூரி, வவுனியா. |
| செல்வி. கிறிஸ்பினி மைக்கெயில். டைட்ஸ் குனதிலக மாவத்தை, பாணந்துறை. | செல்வன். வினோத் றொமேஸ்காந்த். சென்ற் பீட்டர்ஸ் கல்லூரி, பம்பலப்பிட்டி, கொழும்பு-04. |

# நரி

நாய்க் குடும்பத்தைச் சேர்ந்தது நரி. நாய்களைப் போலவே நரிகளுக்கும் கூர்மையான காதுகள், நீண்ட முகம் உண்டு. ஆனால் நாய்களைப் போல் அல்லாது நரிகளுக்கு அடர்த்தியான, நீண்ட வால் உண்டு. கடும் குளிர் காலங்களில் நரிகளுக்கு இந்த வால் போர்வையாகப் பயன்படும்.

நரி ஓர் அசைவப் பிராணி. பறவைகள், பூச்சிகள், தவளைகள், பல்லிகள், பழங்கள், காய்கறிகள் போன்றவற்றைச் சாப்பிடும்.



செத்த மிருகங்களைக் கூட இது விட்டு வைக்காது. இறந்த மிருகங்களை முழுமையாகச் சாப்பிட முடியாவிட்டால் மீதி உடலை அப்படியே விட்டுச் செல்லாது. தனது முன்னங் கால்களால் மண்ணைத் தோண்டி குழியாக்கி அதில் அந்த உடலை இழுத்துப் போட்டு மூடும். பின்னர் பசிக்கும்போது அங்கு வந்து சாப்பிடும்.

நரி வளைகளில் வாழும். நரியின் வளை 60 அடி நீளம் வரை இருக்கும். அதற்குப் பல வழிகள் இருக்கும். நீண்ட குகையில் பல அடுக்குகளை நரி கட்டும். உணவைப் பத்திரப்படுத்த தனி இடம் இருக்கும். ஆனால் பெரும்பாலான நரிகள்



தங்கள் குட்டிகளை வளர்க்கும்போது மட்டும் தான் வளைகளில் வசிக்கும். குட்டி நரி தானாக வேட்டையாடத் தயாரான பின்னர் பெரிய நரியும், குட்டியும் திறந்த வெளியில் வசிக்கும். ஓநாய்களைப் போல நரிகள் கூட்டம் கூட்டமாக வசிக்காது. அவை தனியாகவோ, ஜோடியாகவோ மட்டும் வசிக்கும்.

நரிகளில் பல வகை உண்டு. செந்நரி, சாம்பல் நரி, பனிப்பகுதிநரி, வௌவால் காது நரி எனப் பலவகைகள் உண்டு.



சாம்பல் நரிகளால் மரங்களில் ஏறமுடியும். பண்ணைகள், காடுகள், பாலைவனம் ஆகிய பகுதிகளில் நரிகளைக் காண முடியும்.

அண்டார்ட்டிகாவிலும், தென் கிழக்கு ஆசியாவிலும் நரிகளைப் பார்க்க முடியாது.

# மம்மீஸ்

*** மம்மீஸ் என்றால் என்ன?**

இறந்தவர்களின் உடல் அழிந்து போகாவண்ணம் பதப்படுத்தி வைப்பதற்கு மம்மீஸ் என்று பெயர். இந்த மம்மீஸ் பெரும்பாலும் எகிப்தில் காணப்படுகின்றன.

*** பிணத்தை ஏன் இவ்வாறு பாதுகாக்கின்றனர்?**

எகிப்தியர்கள், இறந்தவர்களின் உடல் எவ்வளவு நாட்கள் அழியாமல் இருக்கிறதோ அதுவரையில் இறந்தவர்களின் ஆவி உயிர் வாழும் என்று நம்பினார்கள். இதனால் தான் இவ்வாறு பாதுகாக்கின்றனர்.

*** பிணங்களை எப்படி பதப்படுத்துவார்கள்?**

முதலில் பிணங்களின் உள் உறுப்புக்



களை அகற்றி விட்டு சடலத்தை உப்பு மற்றும் இரசாயனக் கலவையில் பல வாரங்களுக்கு ஊற வைப்பர். பிறகு வாசனைத் திரவியங்கள், மூலிகைக் களிம்புகள் கொண்டு தடவி பிறகு மெல்லிய துணிகளால் கட்டி இரட்டைப் பிணப் பெட்டியில் வைத்துப் புதைத்து விடுவார்கள்.

***மனிதர்களின் பிணங்களை மட்டும்தான் இப்படிப் பதப்படுத்துவார்களா?**

இல்லை. எருது, நாய், பூனை, முதலை, பறவைகள், மீன், மற்றும், பூச்சிகளின் இறந்த உடல்களையும் பதப்படுத்துவார்கள்.


*** எகிப்து நாட்டைத் தவிர வேறு எந்த நாடுகளில் இந்தப் பழக்கம் காணப்படுகிறது?**

தென் அமெரிக்காவில் உள்ள பெரு மற்றும் மெக்சிக்கோ நாடுகளிலும் இந்தப் பழக்கம் காணப்படுகிறது. ●

# ஒரு வரிச் செய்திகள்

* ஹொங்கொங்கில் ஒரு காசுக்குக் கூட நோட்டு உண்டு.
* நம் உடம்பில் இரத்தம் பாயாத பகுதி கண்ணின் கருவிழி மட்டுமே.
* ஜப்பானிய ரைப்ரைட்டரில் (தட்டச்சு) 2863 எழுத்துக்கள் உள்ளன.
* நம் உடலில் உள்ள இரும்பு 3 முதல் 4 கிராம்தான்.
* சீட்டாட்டம் முதன் முதல் தோன்றிய நாடு இந்தியா.
* தேள் ஒரு வருடம் கூட உணவின்றி இருக்கும்.
* மிக அதிக எடையுள்ள உலோகம் இரிடியம் ஆகும்.
* நாம் புன்னகைப்பதற்கு 17 தசைகள் இயங்க வேண்டும்.
* ஒரு எறும்பு தனது எடையைப் போல் 50 மடங்கு எடையுள்ள பொருளைத் தூக்கிச் செல்லும்.
* இரு கண்களையும் திறந்து கொண்டு தும்முவது இயலாது.
* ஒரு கம்பளிப்புழு கிட்டத்தட்ட 2000 தசைகளைக் கொண்டிருக்கிறது.
* சிலவகை மூங்கில் மரங்கள் ஒரு நாளைக்கு 36 அங்குலம் வீதம் கூட வளரக் கூடியது.



**திகில்கதை மன்னன் ராஜேந்திரகுமார்**

"நீ தான்" அழுத்திச் சொன்னாள் ஜென்னி. "நீ மட்டும் தான் சொல்ல முடியும் வரதராஜா– சொல்லு."

"எதைச் சொல்லச் சொல்றீங்க?"

"ஓ! நோ" கண்களில் சலிப்புக் காட்டினாள்" "பாஸ்! இவனைத் திருத்தவே முடியாது."

"புரியும்படி கேளேன் ஜென்னி! மொட்டையாக சொல்லு சொல்லுன்னா அவன் எதைன்னு கண்டான்? சொல்லப் போனால் எனக்கே புரியல."

முறைத்தாள்.

"நிஜமாகவே புரியல்ல; சொல்லும்மா; நானும் புரிஞ்சுக்கிறேன்."

"நான் சொல்றதை தெளிவா கேளுங்க. பார்ட்டியில் இவனுமிருந்தான்."

"சரி"

"இவன் மட்டும்தான் போதை வஸ்துக்களைத் தொடாதிருந்ததினால் நிதானமான அறிவோட திரிஞ்சான். சரியா?"

"இதுவும் சரியே."

"அந்த ஜோதியை அதிகம் நெருங்கிப் பேசிப் பழகினவனும் இவனே."

"என்னப்பா?"

"ஓரளவுக்கு உண்மைதான் சார்! மத்தவங்களை விட என்னத்தான் ரொம்பவும் நெருங்கினாள்."

"அப்ப சொல்லேன் மேன்."

"மறுபடியும் பாரேன். எதைச் சொல்லச் சொல்றே நீ?"

"பார்த்தவரை அவளோட யார் யார் பேசினாங்க?"

"அவ இருந்த இருப்புக்கு நெருங்கிப் பேசற தைரியம் யாருக்கும் வரல்ல போலிருக்கு. எல்லாம் நாலடி தள்ளியே நின்னாங்க."

"யாருமே நெருங்கி வரல்லையா?"

"சொன்னேனே. எல்லாரும் பயந்து பயந்து விலகிப் போனாங்க."

"சரி. இப்படிச் சொன்னா சொல்ல மாட்டே. மிஸஸ் இன்பவல்லி கொடுத்த பட்டியலில் பெண்களை விவரிக்கிறேன். யாரையாவது அல்லது யாராவது அடையாளம் தெரிகிறதா பார். ஓ.கே."

"சரி"

"மிஸஸ் பத்மஜா சுப்ரமணியம். ஸ்தூலமான உடம்பு சிரிச்சா கண்ணு ரெண்டும் கெட்டியா மூடிக்கும்."

"அந்தம்மாவைப் பார்த்தேன். ஆனா பாவம் அவங்க. புருஷனை விட்டா யார் கூடவும் பேச பயந்துகிட்டிருந்தாங்க. கிட்டத்தட்ட ஒரு மணி நேரத்திற்கு ஒரு கோப்பை மாம்பழச்சாறு வைச்சு கொஞ்சம் கொஞ்சமாக உறிஞ்சிக்கிட்டேயிருந்தாங்க. அச்சமாப் பார்த்துக் கிட்டிருந்தாங்க."

"மிஸ் நித்திரா."

"பார்த்தேன். பெயருக்கேற்ப எப்பவும் நித்திரையிலேயேயிருக்கிற மாதிரி கண்ணு ரெண்டும் சொக்கிட்டிருந்தது."

"சரி மிஸ் நந்தினி ராமன். தலைவிரி கோலமாக கண்ணகி மாதிரி திரிஞ்சிக் கிட்டிருப்பாங்களாமே."

"ஆமாம். நந்தி... நந்தின்னு இன்ப வல்லி அடிக்கடி கூப்பிட்டாங்க, ஆனா அவங்க நந்தி மாதிரியில்லே. டைனி கேர்ள். சிக்கனமான சின்ன உருவம். நல்ல அழகான முகம். ஸ்டைலோ– விதவையோ– பொட்டேயில்லாம சுத்தி சுத்தி வந்துக்கிட்டிருந்தாங்க. பார்த்தேன்."

"மிஸ் நந்தினின்னு சொன்னேனில்லே? அப்புறம் என்ன விதவை? ஸ்டைலுக்காக விட்டிருப்பாங்க. அப்பறம்."

"இருங்க, இருங்க. லேசா ஞாபகம் வருது. அந்த மிஸ் நந்தினி இந்தப் பெண்கிட்ட பேசினாள். அதை நான் பார்தேன். பக்கத்தில தான் இருந்தேன்."

"என்ன பேசினாங்க ரெண்டு பேரும்?"

"இந்த நந்தினி போய் 'இங்கே டாய்லெட் எங்கேயிருக்கு'ன்னு கேட்டிருப்பாங்க போலிருக்கு."

"இவ என்ன சொன்னாள்?"

"நான் என்ன டிராப்பிக் கான்ஸ்டபிளா? வழி காட்ட நான் தான் ஆளா? ன்னு கத்தினா. பாவம் அந்தப் பொண்ணு முகமெல்லாம் வாடிப்போய் நகர்ந்துடுச்சு."

"சரி. பத்மினி கோஸ்வாமி." ஜென்னி கேட்டாள். "முன்பல் கொஞ்சம் தெற்று விழுந்திருக்குமாமே."

"ஆமாம். பார்தேன். சும்மா நான் பார்த்ததுக்கே என்னமோ வர்றியா? ன்னு கேட்டுட்ட மாதிரி அப்படியொரு சீறல் சீறிட்டாங்க. 'அடச்சே போடி'ன்னு வந்துட்டேன்."

"தெய்வமே. இதையாவது கொஞ்சமாக யோசனை பண்ணப்பா. ஏதாவது க்ளூ கிடைக்கும். யோசியேன்."

"இன்னொரு பெண் ஷீலான்னு நினைக்கிறேன். அவளோட சிநேகிதிங்க எல்லாரும் ஷீல்-ஷீல்னு கூப்பிட்டிருந்தாங்க."

"என்ன அவளுக்கு?"

"இந்தப் பொண்ணை நெருங்கிப் போய். ஹேய் உன் பாய்-பிரண்ட எனக்கு அறிமுகம் செய்து வையேன். ரொம்பப் போரடிக்கிறதேன்னா."

"என்ன சொன்னா? இவ என்ன சொன்னாள்?"

"பாயுமில்லே தலையணையுமில்லே போடின்னு கத்திட்டா. பாவம் அந்தப் பொண்ணு ஷீலா கண்கலங்கிப் போயிட்டா. பாவம், ரொம்பப் பாவம்."

"ஆமாம். பாவம், ரொம்பப் பாவம்."

"பாஸ். எவளோ ஒருத்திக்கு நீங்க காட்டற அனுதாபம் ரொம்ப ஜாஸ்தி. மைண்ட் யூ. நான் கவனிச்சிட்டு தான் இருக்கேன்."

"ஆஹ!" இருந்தாப் போலிருந்து குதித்தான் வரதராஜன். "ஞாபகம் வந்துவிட்டது."



"என்ன சாப்பாட்டு ஞாபகமா?"

"அதில்லே சார். ஒரு பெண் இவகிட்ட வந்து. சிகரெட் இருக்கு. உன்கிட்ட லைட்டரிருக்கான்னு கேட்டிருக்கிறா."

"உம்."

"இவளும் 'கைப்பையிலிருக்கு பார்– எடுத்துக்க'ன்னு சொல்லிட்டா."

"வெரிகுட். அந்தப் பெண் எடுத்தாளா?"

"ஆமாம் எடுத்தாள். நான் பார்த்தேன்."

"யார் அந்தப் பெண்? என்ன அவள் பெயர்?"

"முழுசா பெயர் தெரியாது. ஆனா இந்தப் பெண் மட்டும் அவளை அடிக்கடி அதில்லேடி அபி– இதில்லேடி அபின்னு சொல்லிட்டிருந்ததைப் பார்த்தேன்."

"அபியா? அமியா? ஒரு வேளை அமீதாவாக இருக்குமோ?"

"ஏன்? அபிராமியாயிருக்கக் கூடாதா?" என்று ராஜா கேட்க–

பெரிதும் மகிழ்ந்து போனாள் ஜென்னி.

"மேலே வாங்க இன்ஸ்பெக்டர்." என்றாள் அந்த அபிராமி.

மாடி வராண்டா கைப்பிடிச் சுவரைத் தாங்கியவாறு நின்று மிகவும் அலட்சியமாக ஒரு பார்வை பார்த்தாள்.

அவர் படி ஏறுவதையும் வராண்டாவைக் கடந்து வரும் கம்பீரத்தையும் அதே அலட்சித்துடன் பார்த்தாள்.

"என்ன மறுபடியும் வந்திருக்கீங்க?"

வேதநாயகத்துக்கு கொஞ்சம் கோபம் வந்தாலும் அடக்கிக் கொண்டார்.

"கர்ட்டஸி விஸிட்தான்."

"போலிசாரின் விஸிட்டை அவ்வளவு சுலபமா அக்கம் பக்கத்தவங்க நினைக்க மாட்டாங்களே."

"ஒரு சின்ன விஷயம். உங்களைக் கேட்டால் விவரம் தெரியும்னு வந்தேன்."

"என்ன விவரம்?"

அவர் கதவைப் பார்த்தார். "இங்கேயே நின்று பேசணுமா?"

"வேண்டாம். இது என் வாசகசாலை தான். உள்ளே போயே பேசலாம் வாங்க." என்றவள்–

**கொஞ்சம் கோபமாகவே எதிர்ப்பைக் காட்டி எழுந்து நாற்காலியைப் பின்னுக்குத் தள்ளிவிட்டு நடந்தார் வேதநாயகம்.**

கதவைத் திறந்து உள்ளே போக இவரும் பின் தொடர்ந்து போனார்.

"உட்காருங்க." என்று நீளமான அந்த மேஜையின் மறுமுனை நாற்காலிக்குப் போய் அமர்ந்து கொண்டாள். "சொல்லுங்க"

"பேப்பரில பார்த்திருப்பீங்க. ஆனாலும் அசல் படத்தைப் பார்த்துச் சொல்லுங்க." என்றவர்–

ஒரு பழுப்பு நிறக் கவரை மேஜைமேல் தள்ளிவிட அது மேஜை முழுவதுமாக பயணித்து

தன்னை நெருங்கியதும் 'சக்' கென்று பிடித்து நிறுத்தி கோபமாகப் பார்த்தாள். "என்ன இது?"

"பிரிச்சுப் பாருங்க."

அவள் பிரிக்கும் போதும் பார்க்கும் போதும் அவள் முகத்தில் மாறுதலை எதிர்பார்த்து ஏமாந்தார்.

அதே கோபமாக கவருக்குள்ளே திணித்துத் தள்ளிவிட அது மீண்டும் மேஜை முழுவதும் பயணித்து இவரிடமே வந்து சேர்ந்தது. இருந்தாலும் மிக அமைதியாகக் கேட்டார். "பார்த்தாச்சா?"




"ஏதோ இரண்டு பிணங்களின் படங்கள். அதை ஏன் எனக்கு காட்டறீங்கன்னுதான் எனக்குப் புரியல்ல."

"இவங்களை அடையாளம் தெரியுதா?"

"என்னை ஏன் கேட்கறீங்க? அதுவும் என்ன கேட்கறீங்க?"

"எல்லாரையும் கேட்கிற கேள்வியைத் தான் உங்களையும் இப்ப கேட்டேன். அடையாளம் தெரியாத பிணங்களை அடையாளம் காண நாங்க செய்கிற முயற்சி."

"ஸாரி. எனக்குத் தெரியாது. அடையாளம் புரியல்ல."

"ஒரு விலாசம் சொல்றேன் கேளுங்க."

"சொல்லுங்க."

சொன்னார். "அந்த வீட்டு மாடி போர்ஷனில் குடியிருக்கிற ஆளை உங்களுக்குத் தெரியுமா?"

"ஸாரி. என் சினேகிதர்களும் என்னைச் சேர்ந்த யாரும் ஒண்டுக் குடித்தனக்காரங்க இல்லே. எல்லாரும் தனி பங்களாவில் இருக்கும் மேட்டுக்குடி பரம்பரைக் காரங்க தான். தவிர–"

"சொல்லுங்க."

"நீங்க சொல்கிறதை வைச்சுப் பார்த்தா அந்தப் பெண்ணின் தொழில் புரிகிறது. உங்க துணிச்சலைப் பாராட்டறேன் மிஸ்டர்."

"எதுக்கு?"

"அப்படிப்பட்ட பெண்ணை எனக்குத் தெரியுமான்னு கேட்கிற அளவுக்கு உங்களுக்கு இருக்கிற துணிச்சலைப் பாராட்டறேன்."

கைக்கடிகாரத்தை உயர்த்திப் பார்த்தாள்.

"இதுவரை பேசினதே போதும்னு நினைக்கிறேன். யூ மே கோ நௌ."

"உங்களைப் போல மேட்டுக் குடிக்காரங்களுக்கு அப்படிப்பட்ட பெண்களைத் தெரிஞ்சுக்கிற ஞாயமில்லேன்னு எனக்கே தெரியும்."

"பின்னே ஏன் மேன் கேட்கிறே?"

அவள் சீறல் கொஞ்சம் அதிர்ச்சியையே தந்தது.

"யாரையும் கேள்வி கேட்க எனக்கு உரிமையுண்டு."

"அதுக்காக எந்த அவமானத்தையும் தாங்கிக்க வேண்டிய அவசியம் எனக்கில்லே. நீங்க போகலாம்."

"அது வந்து–"

"உங்களை போகலாம்னு சொன்னேன்." எழுந்து நின்று கும்பிட்டாள். "குட் பை இன்ஸ்பெக்டர்."

கொஞ்சம் கோபமாகவே எதிர்ப்பைக் காட்டி எழுந்தார்– நாற்காலியைப் பின்னுக்குத் தள்ளிவிட்டு நடந்தார்.

அங்கே யாருமே இல்லாதது போல புத்தகத்தைப் பிரித்து வைத்து படிக்கத் தொடங்கும் அவளைப் பார்க்க எரிச்சலாக வந்தது.

சக்கர வண்டியின் கிறீச்சொலி கேட்டு திரும்பினார்.

தங்கப் பிரேம் போட்ட கண்ணாடியுடன் கால் விளங்காத ஓர் அம்மையார்–

"இன்ஸ்பெக்டரா? மாடியிலிருந்து நீங்களா இறங்கி வந்தீங்க?"

"ஆமாம்."

"என் மகளைப் பார்க்கவா வந்தீங்க? அபிராமியைச் சொல்றேன்."

"ஆமாம்."

"பார்த்துட்டீங்களா? இருக்கிறாளா?" என்று அவர் கேட்டதும் இவரை வியப்புக் குள்ளாக்கியது.

"அங்க இருக்கிறதே உங்களுக்குத் தெரியாதா?"

"அவ எப்ப வர்ரா? எப்ப வெளியே போறா என்கிறதெல்லாம் யாருக்குப் புரியிது? ஹூம். கால் போனதுக்குப் பதிலா என் உயிர் போயிருக்கலாம். எல்லாம் தலைவிதி."

"வருத்தப்படாதீங்கம்மா. லைப்ரரியில தான் படிச்சிட்டிருக்காங்க. இப்ப இறங்கி வருவாங்கன்னு தோணல."

"வர வர அவள் ஒரு புதிரா மாறிட்டு வருகிறா; அதைத்தான் என்னால தாங்கிக்க முடியல்ல."

"ஏன்?"

"அவ என்னை அம்மான்னு கூப்பிட்டே எத்தனை நாளாகிறது தெரியுமா? யாரோ அந்நிய ஆளைப் பார்க்கிற மாதிரி என்னைப் பார்த்து, நலம் கூட விசாரிக்காமப் போயிடறா. அதைத்தான் என்னால தாங்கிக்க முடியல்ல."

ஆறுதல் சொல்ல முயன்றவர்–

"இன்ஸ்பெக்டர்! நீங்க இன்னுமா போகலே?" என்ற அதட்டலுக்கு இவர் நிமிர்ந்த போது–

அவசரமாக உள்ளே போய் அவள் மறைவது தெரிந்தது.

(தொடர்ந்து வரும்)

## பேனா நண்பர் அரங்கம்



பெயர்: வி. கணேஷ்.
வயது: 16
முகவரி: 24, குவாரி வீதி, குருநாகல்.
பொழுது போக்கு: கிரிக்கெட், ரீ.வி.



பெயர்: கே. விஜயா.
வயது: 20
முகவரி: ஆர்.பி.4, தங்கநகர், கிளிவெட்டி.
பொழுதுபோக்கு: கதைப்புத்தகம்.



பெயர்: எம். கணேஷ்குமார்.
வயது: 21
முகவரி: YORK RING-23, 48159 MUNSTER , GERMANY.
பொழுது போக்கு: பத்திரிகை, தொலைக்காட்சி, பேனாநட்பு.



பெயர்: முஸீன் முகமட்.
வயது: 19
முகவரி: 174, இபுனு பதூதா வீதி, புத்தளம்.
பொழுது போக்கு: பத்திரிகை, உதைபந்து.



பெயர்: பசிரா.
வயது: 20
முகவரி: 933 ஏ/5, தைக்கா வீதி, ஏறாவூர்-01.
பொழுது போக்கு: வானொலி, ரீ.வி.



பெயர்: கே. மோடின்.
வயது: 32
முகவரி: P.0.BOX NO- 916, K.S.F. CAMP-5, 13010 SAFAT, KUWAIT.
பொழுதுபோக்கு: பேனா நட்பு, பத்திரிகை.

பெயர்: எம். அதுஹம்.
வயது: 21
முகவரி: 68, ஆண்டியா கடவத்தை, கம்பளை.
பொழுது போக்கு: கிரிக்கெட், ரீ.வி., வானொலி.

பெயர்: எம். முப்லில்.
வயது: 20
முகவரி: 44/7, கபுவத்தை வீதி, பாலத்தடி, வெலிகாமம்.
பொழுது போக்கு: வானொலி, கிரிக்கெட்.

பெயர்: கே. யோகராஜா.
வயது: 24
முகவரி: P.O.BOX- 20942, RIYADH- 11465, K.S.A.
பொழுது போக்கு: புத்தகம் வாசித்தல்.

பெயர்: எஸ். சத்தியலிங்கம்.
வயது: 17
முகவரி: 202/5 உவர்மலை, திருகோணமலை.
பொழுது போக்கு: முத்திரை சேகரித்தல்.

பெயர்: ஏ. கிறிசாந்த்.
வயது: 15
முகவரி: 9, கோயில் வீதி, இருதயபுரம், மட்டக்களப்பு.
பொழுது போக்கு: சித்திரம் வரைதல், பத்திரிகை.

பெயர்: இஸட். அஸ்வான்.
வயது: 24
முகவரி: P.O. BOX-157, DOHA, QATAR.
பொழுது போக்கு: பத்திரிகை, ரீ.வி.

www.padippakam.com

# தாய்

74

ஜன்னலுக்கு வெளியே முன்னிருந்த இரைச்சலுக்குப் பதில் இப்போது ஆழ்ந்த அமைதி நிலவியது. அந்த அமைதி அந்தக் கிராமம் முழுவதையும் சுற்றி வட்டமிடும் பயவுணர்ச்சியையும் பாரவுணர்ச்சியையும் பிரதிபலித்துக் காட்டியது. தனிமை உணர்ச்சி பெருகியது. சாம்பலைப் போல் நிறம் கறுத்த ஓர் அந்தி மயக்கத்தை இதயம் முற்றிலும் பரப்பியது.

மீண்டும் அந்த யுவதி வாசல் நடையில் தோன்றினாள்.

"நான் உங்களுக்கு பொரித்த முட்டை கொண்டு வரட்டுமா?" என்று கேட்டாள்.

"சிரமப்படாதே. எனக்குச் சாப்பிடவே மனமில்லை. அவர்களுடைய கூச்சலும் கும்மாளமும் என்னைப் பயமுறுத்தி விட்டு விட்டன."

அந்தப் பெண் மேஜையருகே வந்து இரகசியமாக உத்வேகம் நிறைந்த குரலில் பேசினாள்.

"அந்தப் பொலிஸ் தலைவன் அவனை எப்படி அடித்தான் தெரியுமா? நீங்கள் அதைப்பார்த்திருக்க வேண்டும். நான் பக்கத்தில் தான் நின்றேன். கன்னத்தில் கொடுத்த அறையில் அவன் பற்கள் உதிர்ந்துவிட்டன. அவன் குபுக்கென்று இரத்தம் கக்கினான். கரிய சிவந்த கட்டியான இரத்தம்! அவனது கண்கள் வீங்கிப் போய் மூடிவிட்டன. அவன் ஒரு தார் எண் ணெய்த் தொழிலாளி.



அந்த பொலிஸ் சார்ஜெண்டோ மாடி மேலே போய்ப் படுத்துக் கொண்டு நன்றாகக் குடித்து மயங்கிக்கிடந்தான். இன்னும் குடிக்கக் கேட்டான். ஒரு பெரிய சதிக்கூட்டமே இருக்கிறதாம். அவர்களுக்கெல்லாம் இந்தத் தாடிக்கார மனுஷன்தான் தலை வனாம். மூன்று பேர்களைப் பிடித்தார் களாம். ஒருவன் தப்பியோடி விட்டானாம். இவர்கள் கூட்டத்தைச் சேர்ந்தவனென்று ஒரு பள்ளிக்கூட உபாத்தியாயரையும் அவர்கள் பிடித்திருக்கிறார்களாம். இவர் களுக்குக் கடவுள் நம்பிக்கை கிடையாதாம்: தேவாலயங்களைக் கொள்ளையடிக்கும்படி மற்றவர்களைத்தூண்டி விடுகிறார்களாம். இவர்கள் இப்படிப்பட்ட ஆசாமிகள்தானாம். எங்கள் கிராமத்து முஜீக்குகள் சிலர் இவர்களுக்காக வருத்தப் பட்டார்கள். சிலர் இவர்களுக்கு இத்தோடு சாமாதி கட்டிவிடவேண்டும் என்று சொல்லுகிறார்கள். இந்த மாதிரியான கேவல புத்தி படைத்த முஜீக்குகள் இங்கே அதிகம் பேர் இருக்கிறார்கள்!"

அந்தப் பெண்ணின் தொடர்பிழந்த படபடக்கும் பேச்சைத் தாய் கவனமாகக் கேட்டாள். அதைக்கேட்டு, தனது பயத்தையும் பீதியையும் போக்கி வெற்றி காண முனைந்தாள். தனது பேச்சைக் கேட்பதற்கும் ஓர் ஆள் இருக்கிறது என்ற உற்சாகத்தில் அந்தப் பெண் உத்வேகமும் உவகையும் பொங்கித் ததும்ப, இரகசியமான குரலிலேயே பேசத் தொடங்கினாள்:

"இதெல்லாம் வெள்ளாமை விளைச்சல் சரியாக இல்லாததால் தான் ஏற்படுகிறது என்று எங்கள் அப்பா சொல்கிறார். இரண்டு வருஷகாலமாய் இங்கே நிலத்திலே எந்த விளைச்சலும் கிடையாது. இதனால் தான் இத்தகைய முஜீக்குகள் தோன்றுகிறார்கள். கிராமக் கூட்டங்களில் அவர்கள் சண்டை பிடிக்கிறார்கள்; கூச்சல் போடுகிறார்கள். ஒரு நாள் வசுகோவ் என்பவன் பொருள்களை, அவன் வரிகட்டவில்லை என்பதற்காக, ஏலம் போட்டார்கள். அவனோ 'இதோ உன்வரி' என்று சொல்லிக் கொண்டே நாட்டாண்மைக்காரரின் முகத்தில் ஓங்கி ஒரு குத்துவிடுகிறான்."

வெளியே பலத்த காலடியோசை கேட்டது. தாய் மேஜையைப் பிடித்தவாறே எழுந்து நின்றாள்.

அந்த நீலக்கண் முஜீக் தனது தொப்பியை எடுக்காமலே உள்ளே வந்தான்:

"உன் பெட்டி எங்கே?"

அவன் அதை லேசாகத் தூக்கி ஆட்டிப் பார்த்தான்.

"காலிப் பெட்டிதான். சரி, மார்க்கா! இவளை என்குடிசை வரை கூட்டிக் கொண்டுபோ."

அவன் திரும்பிப் பார்க்காமலே சென்றான்.

"இன்றிரவு நீங்கள் இந்த ஊரிலா தங்குகிறீர்கள்?" என்று கேட்டாள் அந்தப் பெண்.

"ஆமாம். பின்னல் லேஸ் வாங்கவந்தேன்..."

"இங்கே யாரும் பின்னுவதில்லையே. தின்கோவாவிலும், தாரினாவிலும்தான் நெய்கிறார்கள். இங்கே கிடையாது" என்று விளக்கினாள் அந்த யுவதி.

"நான் நாளைக்கு அங்கே போவேன்..."

தேநீருக்குக் காசு கொடுத்து முடிந்ததும், தாய் அந்தப் பெண்ணுக்கு, மூன்று கோபெக்குகளை இனாமாகக் கொடுத்தாள். இனாம் கொடுத்ததில் அவளுக்கு ஓர் ஆனந்தம். அவர்கள் வெளியே வந்தார்கள். ஈரம் படிந்த அந்த ரோட்டில் அந்தப் பெண் வெறும் கால்களோடு விடுவிடென்று நடந்து சென்றாள்.

"நீங்கள் விரும்பினால், நான் தாரினாவுக்குச் சென்று அங்குள்ள பெண்களை, அவர்கள் பின்னிய லேஸ்களை எடுத்துக் கொண்டு இங்கு வரச்சொல்கிறேன்" என்றாள் அந்தப் பெண்: "அவர்களே இங்கு வந்து விடுவார்கள். நீங்கள் அங்கே போக வேண்டியதில்லை. இங்கிருந்து பன்னிரண்டு கிலோமீட்டர் தூரம்தான் இருக்கிறது.."

"நீ ஒன்றும் கவலைப்படாதே, கண்ணு" என்று கூறிக்கொண்டே அவளோடு சேர்ந்து நடக்க முயன்றாள் தாய். குளிர்ந்த காற்று அவளுக்கு இதம் அளித்தது. ஏதோ ஒரு மங்கிய தீர்மானம் அவளது மனத்துக்குள்ளே வடிவாகி உருப்பெறுவதாகத் தோன்றியது. அந்த உருவம் மெதுவாக வளர்ந்து வந்தது. அதன் வளர்ச்சியை அதிகரிக்க வேண்டும் என்ற ஆசையால், அவள் தனக்குத் தானே கேட்டுக் கொண்டிருந்தாள்:

'நான் என்ன செய்ய வேண்டும்? நான் என் இதயத்திலுள்ள எல்லாவற்றையும் திறந்து கூறி விட்டால்..'

பொழுது ஒரே இருளாகவும் குளிராகவும் ஈரமாகவும் இருந்தது. குடிசைகளின் ஜன்னல்களில் செக்கர் ஒளி மினுமினுத்தது. சிறு சிறு அழுகைக் குரல்களும், கால் நடைகளின் கனைப்பும் அந்த அமைதியினூடே கேட்டன. அந்தக் கிராமம் முழுவதுமே ஏதோ ஓர் இருண்ட பாரவுணர்ச்சியைச் சுமந்து கவலையில் ஆழ்ந்திருப்பதாகத் தோன்றியது.

"இதோ" என்று காட்டினாள் அந்தப்

## "மனிதப் பிறவிகளை இப்படி மண்ணோடு மண்ணாய் இழுத்து உதைத்துக் கொள்ளையிடும் பாவத்துக்கு அவர்கள் என்றென்றும் நாசமாய்ப் போகட்டும்" –தாய்.

பெண்; "இரவைக் கழிப்பதற்கு மிகவும் மோசமான இடத்தைத் தேர்ந்தெடுக்கிறீர்கள். இவன் மிகவும் ஏழையான முஜீக்."

அவள் கதவைத் தட்டினாள். கதவு திறந்தவுடன் அவள் தன்தலையை உள்ளே நீட்டிச் சத்தமிட்டாள்:

"தத்யானா அத்தை!"

பிறகு அவள் ஓடிப்போய் விட்டாள்.

"போய்வருகிறேன்" என்ற அவளது குரல் இருளினூடே ஒலித்தது.

✳ ✳ ✧ ✪ ♣

தாய் வாசலருகே சென்று தன் கையைக் கண்களுக்கு அருகே உயர்த்திப் பிடித்துக் குடிசைக்குள் கூர்ந்து பார்த்தாள். அந்தக் குடிசையில் கொஞ்சம் தான் இடம் இருந்தது, என்றாலும் கண்ணைக் கவரும் சுத்தத்துடன் இருந்தது. ஓர் இளம் பெண் அடுப்பு மூலையிலிருந்து திரும்பி அவளைப் பார்த்துத் தலையை அசைத்துக் கொண்டாள். ஆனால் ஒன்றும் பேசாமலே மீண்டும் திரும்பி விட்டாள். மேசைமீது ஒரு விளக்கு எரிந்து கொண்டிருந்தது.

வீட்டுச் சொந்தக்காரனான அந்த முஜீக் மேஜையருகே உட்கார்ந்து தனது கை விரல்களால் மேஜை மீது தாளம் போட்டுக் கொண்டிருந்தான்; தாயின் கண்களையே அவன் வெறித்துப் பார்த்தான்.

"உள்ளே வாருங்கள்" என்று சிறிது நேரம் கழித்துச் சொன்னான் அவன். "தத்யானா, போய் பியோத்தரை வரச் சொல்லு.. சீக்கிரம் போ."

அந்தப் பெண் தாயை ஏறிட்டுப் பார்க்காமல் வெளியே சென்றாள். தாய் அந்த முஜீக்குக்கு எதிராக ஒரு பெஞ்சில் உட்கார்ந்து சுற்று முற்றும் கண்ணைத் திருப்பினாள். அவளது டிரங்குப் பெட்டியை அங்கு எங்கும் காணவில்லை. அந்த அறைமுழுவதிலும் ஒரு பயங்கர அமைதி நிலவியது. இடையிடையே விளக்குத் திரி பொரிந்து விழுவதைத் தவிர வேறு சத்தமே இல்லை. ஒரு வித அக்கறையோடு நெரித்து நோக்கும் அந்த முஜீக்கின் முகம் தாயின் கண் முன்னால் மங்கலாக நிழலாடியது. அவளது மனத்தில் அதே கணத்தில் ஒரு பெருங் குழப்பவுணர்ச்சி லேசாக முளை விட்டது.

"என் பெட்டி எங்கே?" என்று திடீரென்று உரத்த குரலில் கேட்டாள். அந்தக் கேள்வி அவளுக்கே திடுமென்று ஒலித்தது.

அந்த முஜீக் தன் தோள்களைக் குலுக்கினான்.

"அது ஒன்றும் தொலைந்து போகாது" என்று அவன் கூறினான். பிறகு தணிந்த குரலில் பேசினான்: "கடையிலேயேதான் அது காலியாயிருக்கிறது என்று அந்தப் பெண்ணின் காதில் விழும்படி நான் வேண்டுமென்றுதான் சொன்னேன். அது காலியாய் ஒன்றுமில்லை. ரொம்பக் கனமாக இருக்கிறது."

"சரி. அதனால் என்ன?" என்று கேட்டாள் தாய்.

அவன் எழுந்து தாயிடம் வந்து குனிந்து நின்று இரகசியமாக கேட்டான்:

"அந்த மனிதனை உங்களுக்குத் தெரியும், இல்லையா?"

"ஆமாம்." அந்தக் கேள்வி அவளை வியப்புறச் செய்தது. எனினும் அவள் உறுதியான குரலில்தான் பதில் சொன்னாள். அந்தச் சிறு வார்த்தை அவளுக்கு எல்லாவற்றையும் விளக்கி, இதயத்தில் மூண்டிருந்த இருளையும் போக்கியது. அவள் நிம்மதியாக ஆசுவாசமாகப் பெருமூச்செறிந்தாள்; பெஞ்சின் மீது அசையாது உறுதியோடு உட்கார்ந்தாள்.

அந்த முஜீக் பல்லைக்காட்டிப் புன்னகை புரிந்தான்.

"நீங்கள் அங்கே இருந்து அவனுக்குச் சைகை காட்டியதைப்பார்த்ததுமே நான் ஊகித்துக் கொண்டேன். அவனும் பதிலுக்குச் சைகை காட்டினான். அவனிடம் நான் இரகசியமாகக் கேட்டேன். 'அதோ வாசல் முகப்பில் நிற்கிறாளே, அவளை உனக்குத் தெரியுமா' என்று கேட்டேன்."

"அதற்கு அவன் என்ன பதில் சொன்னான்?" என்று ஆத்திரத்தோடு கேட்டாள் தாய்.

"அவனா? 'எங்கள் கோஷ்டியில் எத்தனையோ பேர் இருக்கிறார்கள்' என்றான் அவன்."

அந்த முஜீக் எதையோ கேட்கும் பாவனையில் அவளது கண்களையே கூர்ந்து நோக்கினான். மீண்டும் புன்னகை புரிந்துவிட்டுப் பேசத் தொடங்கினான்:

"ஒரு பலசாலியான தைரியமான ஆசாமி கிடைத்திருக்கிறான். 'நான் தான்' என்று அவன் எவ்வளவு தைரியமாகச் சொல்கிறான். அவர்கள் அவனை எவ்வளவுதான் அடிக்கட்டுமே, தான் சொல்ல விரும்பியதை அவன் சொல்லியே தீர்க்கிறான்."

அவனது குரலைக் கேட்டுத் தாய்க்கு வர வர மனப் பாரம் குறைந்து வந்தது. அவனது குரல் பலமற்றும் நிச்சயமற்றும், அவனது கள்ளமற்ற கண்களின் பார்வையால் அவளுக்கு ஒரு நிம்மதி ஏற்பட்டது. அவளது பயபீதியும் கலக்கமும் மறைந்து அவளது மனத்தில் ரீபினின் மீது ஓர் ஆழ்ந்த பரிவுணர்ச்சி இடம் பெற்றது.

"மோசக்காரர்கள்! மிருகங்கள்!" என்று கசப்பு நிறைந்த ஆக்ரோஷத்தோடு கத்தினாள்: உடனே அழ ஆரம்பித்துவிட்டாள்.

அந்த முஜீக் வருத்தத்தோடு தலையை அசைத்துக் கொண்டு அங்கிருந்து அகன்று சென்றான்.

"இதோ, அதிகாரிகள், தமக்கு நல்ல நண்பர்களைத் தயாரித்துக் கொண்டார்கள்!"

அவன் மீண்டும் தாயை நோக்கித் திரும்பி அமைதியாகச் சொன்னான்:

"அந்த டிரங்குப் பெட்டியிலே பத்திரிகை கள்தான் இருக்க வேண்டும் என்று, எனக்குத் தோன்றுகிறது. என் ஊகம் சரிதானே?"

"ஆமாம்" என்று தன் கண்ணில் வழிந்த கண்ணிரைத் துடைத்துக் கொண்டே சொன்னாள் தாய். "நான் தான் அவனுக்குக் கொண்டு வந்து கொடுத்துக் கொண்டிருந்தேன்."

அந்த முஜீக் தன் முகத்தைச் சுழித்தான். தாடியைக் கையில் இறுகப் பற்றிப் பிடித்தவாறு ஒரு மூலையையே வெறித்து நோக்கினான். கடைசியாகப் பேசத் தொடங்கினான்.

"அவை எங்களுக்கும் கிடைத்து வந்தன. புத்தகங்களும் கிடைத்து வந்தன. அந்த மனிதனை எங்களுக்குத் தெரியும். நாங்கள் அவனைப் பார்த்திருக்கிறோம்."

அவன் பேச்சை நிறுத்திவிட்டு ஒரு கணம் சிந்தித்தான்.

"அதை வைத்துக் கொண்டு–அந்த டிரங்குப் பெட்டியை வைத்துக் கொண்டு– இப்போது என்ன செய்வதாக உத்தேசம்?" என்று கேட்டான்.

"உங்கள் வசம் ஒப்புவித்துவிட்டுப் போகிறேன்" என்று அவனை நேருக்கு நேராகப் பார்த்துச் சொன்னாள் தாய்.

அவன் மறுதலிக்கவில்லை; வியப்புணர்ச்சியையும் காட்டவில்லை.

"எங்களிடம்?" என்று அவன் திருப்பிக் கேட்டான்.

சொன்னதை ஏற்றுக் கொண்ட பாவனையில் அவன் தலையை அசைத்தான்: மேஜையருகே உட்கார்ந்து, தனது தாடியைக் கைவிரல்களால் சிக்கெடுக்க ஆரம்பித்தான்.

ரீபினுக்கு இழைக்கப்பட்ட மிருகத்தனமான கொடுமையைக் கண்ட காட்சி தாயின் மனத்தில் அழுத்தந் திருத்தமாகப் பதிந்து நினைவிலெழுந்து அவளைப் பயமுறுத்தியது. அந்த உருவம் அவளது மனத்தில் குடிகொண்டிருந்த எண்ணங்கள் யாவற்றையும் விரட்டியோட்டியது. அந்த மனிதனுக்காக வேதனையும் மனத்தாங்கலும் அவள் இதயத்தை நிரப்பின. எனவே அவள் டிரங்குப் பெட்டியைப் பற்றியோ வேறு எதையும் பற்றியோ சிந்திக்கச் சக்தியற்றுப்போனாள். அவளது கண்ணீர் தாரை தாரையாகத் தங்கு தடையற்று வழிந்திறங்கியது. அவளது முகம் சுண்டிக்கறுத்தது. ஆனால் தடுமாறாத குரலிலேயே அவள் பேசினாள்.

"மனிதப் பிறவிகளை இப்படி மண்ணோடு மண்ணாய் இழுத்து உதைத்துக் கொள்ளையிடும் பாவத்துக்கு அவர்கள் என்றென்றும் நாசமாய்ப் போகட்டும்!" என்றாள்.

(தொடர்ந்து வரும்)

---

# சொல்லிவிடு வெள்ளி நிலவே....

ஷர்மிளா இஸ்மாயில்– கண்டி

"உங்களோட கொஞ்சம் பேசணும்....." ஒரு நாளுமில்லாதவாறு சற்று தயங்கியபடி நிவேதா நின்றிருந்தாள்.


பிரமிளா நிதானித்தாள். இத்தனை நாளாக ஒரே கம்பனியில் ஒன்றாக வேலை பார்த்தும் சற்றும் ஒட்டாதவள் இன்று தன்னை நாடி வந்து இப்படிச் சொல்வது அதிசயம்தான். "இருங்க நிவேதா...." இருக்கையைக் காட்டி சற்று புன்னகைத்தாள் பிரமிளா.

"ம்..... சொல்லுங்க...." பைலை மூடி வைத்து கதிரையில் சற்று வசதியாக சாய்ந்து கொண்டாள். நிவேதாவும் அமர்ந்து கொண்டாள். முகத்தில் ஏதோ சொல்ல முடியாதவோரு சோக உணர்வு பிரதி பலிப்பதை பிரமிளா உணர்ந்தாள்.

"எதுவாயிருந்தாலும் பரவாயில்லை. நிவேதா.... சொல்லுங்கள்.... தயக்கம் வேண்டாம்."

பிரமிளா ஊக்கப்படுத்தினாள். நிவேதா சங்கடப்பட்டாள்.

"எ...எப்படிச் சொல்வதென புரியல. என்னோட பர்சனல் விஷயம்....நீங்க மத்தவங்களோட உணர்ச்சிகளை புரிஞ்சு அதுக்கேத்த மாதிரி நல்ல ஆலோசனைகளை....நல்ல முடிவுகளை எடுத்துச் சொல்லி மத்தவங்க கவலை, கஷ்டங்களை தீர்த்து வைக்கிறத பல சமயங்கள்ல பார்த்திருக்கிறேன். எப்பவுமே என்னை நான் மத்தவங்ககிட்ட வெளிப்படுத்திக் கிட்டதில்ல. இப்ப....இந்த சிக்கல்,- பிரச்சனையை யாருட்டயாவது சொல்லித் தீர்க்கணும் போல. என்னால தனியே தாங்கிக்க முடியல. யோசிச்சுப் பார்த்தேன். உங்களத் தவிர வேறு யாரையும் மனசுக்குப் பிடிக்கல....தவறா ஏதும் நினைக்...." தொடர்ந்து பேசிய நிவேதாவைத் தடுத்தாள் பிரமிளா. 'சொல்ல வந்ததை விடுத்து எங்கேயெல்லாமோ சுற்றி வருகிறாளே...'



"போதும்....நிவேதா....எதுக்கு இந்த பீடிகையெல்லாம்......மனசுல எப்பவுமே பிரச்சனைகளைப் போட்டு அழுத்தி மூடி வைக்கிறது நல்லதில்ல. இப்படி சொல்லிவிட முன்வந்தீங்களேன்னு உங்களைப் பாராட்டுறேன். சொல்லுங்க.....கஷ்டம், கவல இல்லாத ஜீவன்தான் எது?" பிரமிளா இதமாய்ச் சொன்னாள். "என்கிட்ட சொல்லுங்கள்; முடிஞ்சளவு உதவி செய்றேன்." சற்று யோசித்து பின் கண்களில் லேசாய் ஈரம் தெரிய ஆரம்பித்தாள் நிவேதா.

"விஜய்- என் அத்தை மகன்- அவருக்கும் எனக்கும் இடையில நினைவு தெரிந்த நாளாய் நேசம். எனக்கு அவர்தான்; அவருக்கு நான்தான் என குடும்பத்துலயும் பேசி வச்சாங்க. எதிர்காலத்தப் பத்தி ரொம்பவும் சுகமா கற்பனை பண்ணி நானும் விஜயும் ரொம்ப அன்பாயிருந்தோம். என் உயிர் போல அவரை நேசிச்சேன். எங்க திருமணமும் கிட்டத்தில வந்தது. ரொம்ப சந்தோசப் பட்டேன். சந்தோசங்கள் என்றைக்குமே நீர்க்குமிழிகள் போல- என் வாழ்க்கையிலயும் ஆயிடுச்சு. திருமணத்திற்கு ஒரு கிழமை இருக்கையில ஒரு விபத்திலகப்பட்டு விஜயின் குடும்பத்தில எல்லாருமே செத்துப் போயிட்டாங்க. விஜய் தான் தப்பிச்சவர். எங்க கல்யாணமும் அத்தோடு நின்று போயிடுச்சு. ஒரே நாள்ல எல்லோரையும் இழந்துபோன விஜய் ரொம்ப குழம்பி போனார். அந்த நேரத்துல அவருக்கு ஆறுதல் சொல்லி, அரவணைச்சு ஆதரிச்சார் எங்கப்பா. எங்க குடும்பத்திலேயே அவரையும் இணைச்சுட்டார். எனக்கு சந்தோசம் பாதி, துக்கம் பாதி. விஜய் பக்கத்துல இருந்தது கொஞ்சம் பூரிப்பாய் வேறு இருந்தது. ஆனா திரும்பவும் திருமணப் பேச்சை எடுத்தா அவர் சம்மதிக்கல; கொஞ்ச காலம் வெளிநாடு போய் சம்பாதிக்கணும்; பிறகு தான் கல்யாணம்னு சொன்னார்.."

நிறுத்திய நிவேதா சற்று ஆசுவாசமானாள்.

பிரமிளா அவளையே பார்த்தபடி இருந்தாள். "இருந்த காணியையும் நகைகளையும் வித்துப் போட்டு காசு புரட்டிய அப்பா விஜயின் ஆசைப்படி- அவரின் மனம் நோகக் கூடாதென எண்ணி-விஜயை வெளி நாட்டுக்கு அனுப்பிவெச்சார். 'வருவேன் காத்திரு' என கலங்கிப்போன எனக்கு வாக்குறுதி தந்துட்டுபோனார்."

நிவேதாவின் கண்களில் துளிகள் வடிந்தோடின. ஒற்றிக் கொண்டாள் கைக்குட்டையால். "அழாதீங்க நிவே.. மெதுவா.. சொல்லுங்க.." பிரமிளா அவளது கைவிரல்களை அழுத்தி ஆறுதல் கூறினாள். "மனசை கட்டுப்படுத்துங்க. அழாதீங்க.."

"போனவர் போனது தான். இன்று வரைக்கும் ஒரு தகவலுமில்லை. கடிதம் போடல. பதறிப் போய் வெளிநாட்டிலேர்ந்து வந்த மத்தவங்ககிட்ட விசாரிச்சுப் பார்த்தோம்.. இப்ப அவர் அங்கேயே யாரோ ஒரு பொண்ணக் கட்டி குடும்பமாய் செட்டிலாகிட்டாராம்.. நம்ப முடியல.. போன மாதம்.. எங்க பெரியப்பா மகன் வெளி நாட்டால வந்தவர் உண்மை அது தான்னு உறுதிப் படுத்திட்டார். எ.. என்னால.. தாங்கிக்க முடியல.. தற்கொலை வரைக்கும் போனேன். சாத்தியமாகலை. இப்ப என்னான்னா ரவி-நம்ம கம்பனில அடுத்த செக்ஷனில வேலை பார்க்கற ரவி- என்னை விரும்பறதாச் சொன்னார். நான் மாட்டேன்னு சொல்லிட்டேன். ஒரு தரம் பட்ட சூடு போதும்! எந்த ஆண்களையும் இனிமே நம்புவதற்கில்லை.. ஆனா ரவி.. என் கதையை கேட்ட பின்னும் இன்னும் வற்புறுத்துறார்.. என்ன செய்யறதுன்னே தெரியல."

கடைசி வரிகளில் பிரமிளா சிலையானாள். என்ன சொல்வதென்றே இப்போது அவளுக்குப் புரியவில்லை- காரணம் அந்த ரவியை பிரமிளா மானசீகமாய் மிக நேசித்தாள். மனதுக்குள்ளால் பூஜித்தாள். காலம் வரும் போது காதலைச் சொல்லவும் காத்திருந்தாள். ஆனால்.. இன்று- இங்கு விதி இப்படியாகி விட்டதே! யாருக்கு ஆறுதல் யார் சொல்வது? பிரமிளாவின் ஆறுதல் வார்த்தைகளுக்காகவும் ஆலோசனைக்காகவும் நிவேதா காத்திருந்தாள். பிரமிளா வார்த்தைகளை தொலைத்திருந்தாள். சொல்லுவதென்ன?



படிப்பகம்

www.padippakam.com

# சுகங்கள்

**வெ. தமிழழகன்**

அபிநயா அழுது கொண்டிருந்தாள். ஆனந்த் அவளை நெருங்கினான். தோளைத் தொட்டான்; திரும்பினாள். கர கரவென கண்ணீர். பார்த்தான்–துணுக் குற்றான்.

பூச்செண்டு போல் மலர்ச்சி கொண்ட மேனி. புதுமணத்தின் குதுகுதுப்பான பூரிப்பு. செதுக்கிய முகம். சிரிக்கும் விழிகள். செழுமை ததும்பும் தோற்றம்.

திருமணம் நடந்து இரண்டு வாரங்கள் ஆகின்றன.

எனினும், அவர்களுக்குள் 'எதுவும்' நடக்கவில்லை. தனிமை, மௌனம், வெறிச் சென்று விடிந்த இரவுகள்.....

"...என்னை உங்களுக்குப் பிடிக்க வில்லை; அதனால் தானே நிராகரிக்கிறீர்கள்?" என்றாள் அபிநயா.

சட்டென அவன் மனம் கலங்கியது. தன்னைத் தானே நொந்துக்கொண்ட வேதனை. குற்றம் கலந்த மனத்தவிப்பு, அவனுள் விழிப்புற்றது.

"இல்லை. அபிநயா!" என்றான்.

"அப்படியானால் உங்க மௌனத்தின் அர்த்தம்....?" என்றாள் மீண்டும்.

அவனுள் மௌனம். இந்தத் தெய்வீக அழகின் ஒளிவெள்ளத்தில் நீந்துவதற்கு, யார்தான் வெறுப்புக் கொள்வார்கள்? புனிதமான மலரைப் போல மனைவியாகி விட்டாள் அபிநயா...!

'அவளைத் தொடுகின்ற தகுதி என்னிடம் உண்டா?' என யோசித்தான், ஆனந்த்.

அவன் தொழிலதிபர் ஒருவரின் மகன். பணம் கொழிக்கும் பல கம்பெனிகள். அதில் சிலவற்றின் நிர்வாகப் பொறுப்பினை ஆனந்த் ஏற்றிருந்தான்.

பெயருக்கேற்றபடி பெண்களிடம் ஆனந்தம் தேடினான். கேளிக்கை வாழ்க்கை. கேள்வி கேட்க ஆளில்லை. ஒரே வாரிசு என்பதால் பெற்றவர்களும் கண்டு கொள்ள வில்லை. கண்டித்தும் பயனில்லை. இந் நிலைக்கு முற்றுப்புள்ளி வைக்க எண்ணி, பெற்றோர் பெண் பார்க்கத் தொடங்கினர். எதற்கும் அவன் அசைந்து கொடுக்கவில்லை.

அவனிடம் புதிதாக வேலைக்குச் சேர்ந்த வள் புஷ்பா. அவளின் அழகு அவனை ஈர்த்தது. தினம் ஒரு கனவும், தினுசு தினுசான மகிழ்வுமாய் வாழ்ந்து பழக்கப் பட்டவன். அவளை தன் விருப்பத்துக்கு இணங்கவைக்க முடியும் என நினைத்தான்.

ஹோட்டலுக்கு அழைத்தான்; வந்தாள். தனியான அந்த அறையில் குளிர்பானம் அருந்தியபடி, "புஷ்பா." என்றான்.

"என்ன சார்?"

"சார் என்கிற மரியாதையெல்லாம் வேண்டாம். நான் உன்னை விரும்புகிறேன். உன் அழகு என்னை வதைக்கிறது. தித்திக்கிற ஆசையை விதைக்கும் சக்தி உன்னிடம் உள்ளது. அதை நீ எனக்கு அர்ப்பணிக்க வேண்டும். அதை நான் அள்ளிக் கொள்ள வேண்டும். என்ன சொல்கிறாய்?" என்றான்.

"வாலிப ஆசைகள் தித்திக்கும். அளவுக்கு மீறினால் திகட்டும்."

அவள் அவனை ஊடுருவினாள். பார்வை சுருங்கியது. கனிந்தது கனிவா, காதலா? என்பது புரியாத புன்னகை பூத்தது.

"குற்றத்தின் குறுகுறுப்பில் மனம் பேதலித்தது. மனதை திறந்து கொட்டிவிடத் துடித்தான்."

"இதே டயலாக்கை எத்தனை பேரிடம் சொல்லியிருக்கிறீர்கள் என்று விவரம் சொல்லட்டுமா?"

புஷ்பா கேட்க ஆன்ந்த் அதிர்ந்தான். முகம் இருண்டது. பதில் தோன்றவில்லை. திணறினான்.

அவள் தொடர்ந்தாள்.

"வாலிப ஆசைகள் தித்திக்கும். அளவுக்கு மீறினால் திகட்டும். திகட்டினால் சலிப்புத் தான் மிஞ்சும். பெண், பெண் என்று நாடிப் போகிறீர்களே..... அவர்களுக்குள் யாரோ ஒருத்தி உங்களுக்காக காத்திருக் கிறாள்; கற்பைப் பாதுகாக்கிறாள், மேன்மை பொருந்திய பத்தினித் தனத்தைச் சீதனமாய்த் தருவதற்காகக் காப்பாற்றி வைத்திருக் கிறாள்....."

"அதற்காக....?"

"....இப்படி தன்னைக் காத்து, உங்களுக் கென்றே தவமிருந்து அர்ப்பணித்துக் கொள்ளவிருக்கிற அந்தப் பெண்ணை ஒரு கணமாவது நினைத்துப் பார்த்ததுண்டா?"



"......."

"அத்தகைய பெண்ணுக்கு மகிழ்ச்சியைத் தரக்கூடிய அளவுக்கு உங்களிடம் நீங்கள் என்ன வைத்திருக்கிறீர்கள்? .....உடல் வெறும் காம விஷயம் மட்டுமல்ல; அதில் ஆத்மா, ஜீவன், அன்பு, ஐக்கியத்தின் பரிமளிப்பு, சங்கமம், சாந்தி எல்லாம் அடங்கியிருக்கிற விஷயம். உங்களுக்கென காத்திருக்கும் ஒரு பெண்ணைப் பார்த்து மணந்து கொள்ளுங் கள்; காதலியுங்கள். வாழ்வின் பரிணாமம் அதுதான்.....

"......."

"எனக்குத் திருமணம் ஏற்கெனவே நிச்சயமாகி விட்டது. விரைவில் அழைப்பிதழ் தருவேன். அவசியம் நீங்கள் வந்து வாழ்த்த வேண்டும்." என்று எழுந்து போனாள்.

ஆனந்த் அப்படியே ஸ்தம்பித்து நின்றான். அவன் மனம் கூனிக் குறுகியது. அவள் பேச்சின் தாக்கம் அவனை யோசிக்க வைத்தது. மனத் தடுமாற்றத்துடன் வீட்டுக்குப் போனான். பல ஆண்டுகளாய்க் கல்யாணம் செய்து கொள்ள மறுத்து வந்தவனை, அவன் பெற்றோர் கிடுக்கிப் பிடி போட்டனர். திருமணத்துக்குச் சம்மதம் சொல்லாவிட்டால் தங்களை மறந்துவிடும்படி கூறினர். தற்கொலைக்கு முயலும் பெற்றோரைப் பற்றி ஏற்பட்ட கவலையில் "சரி" என்று சம்மதித்தான். "நீங்கள் பார்த்தால் போதும்." என்றான். பெண் பார்த்தனர்; மணம் முடித்தனர்.

அபிநயாவின் அபரிமித அழகு அவனை அச்சுறுத்தியது. அவளின் ஒளி பொருந்திய முகத்தைப் பார்க்கவே கூசினான்.

பணத்திற்காக, தன் மடியில் விழுந்த பல பெண்களின் நினைவு வரிசையிட்டு நின்றன.

களங்கமற்ற அபிநயாவின் முகத்தைப் பார்க்கும் போதெல்லாம், தன் களங்கம் அவனுக்கு முழுசாய்ப் புரிந்து வதைத்தது.

'சந்தனமலர் போன்ற அவளுள் சாக் கடைத் துளியாய் நாம் சேர்தல் எந்த வகை யில் பொருத்தம்?'

இந்த மனப் போராட்டத்தினால் தான்... மணம் முடிந்த இத்தனை நாட்களிலும் அவளை அவன் தொடவில்லை.

'நான் உனக்குத் தகுதியற்றவன்' எனக்கூறிக் கதறவேண்டும் போல இருந்தது அவனுக்கு. ஏனோ வார்த்தை வரவில்லை.

குற்றத்தின் குறுகுறுப்பில் மனம் பேதலித் தது. தன் மனம் முழுவதையும் திறந்து கொட்டிவிடத் துடித்தான் ஆனந்த்.

அதேசமயம்– அவன் பாட்டி, புனிதத் தலங்கள் பற்றிய நூல் ஒன்றைப் படிக்கும் குரல் கேட்டது.

அதை உற்றுக் கேட்டான்.


"புனிதமான நதியில் சாக்கடைகளும் தான் கலக்கின்றன. அதனால் நதி சாக்கடை யாகி விடுவதில்லை. ஆனால் நதியால் சாக்கடைகளும் நதியின் புனிதத் தன்மையைப் பெறுகின்றன.

ஒன்றில் ஒன்று கலந்து ஒன்றி...புதிய பிறப்பெடுக்கின்ற அதுதான் இயற்கைக்கு இறைவன் செய்கின்ற விந்தை."

....அந்த வாசகம் கேட்டு ஆனந்த் அகமகிழ்ந்தான். நெஞ்சில் கோடி உணர்வு கள் புரண்டு கொடுத்தன. நெகிழ்வில் மனம் ததும்பி ஆர்ப்பரித்தன.

அபிநயாவை அப்படியே அள்ளிக் கொண்டான். விலைச் சுகங்களின் விபரீத யுக்தி மாறி.... ஒரு புது விதமான மயக்கம் அவனை வீழ்த்தியது. முந்தைய உறவுகளில் வந்த சுகம் இருமடங்கு பெருகியது.

அவன் ஆனந்தத் தத்தளிப்பில் மீனா னான். அவளும்தான்!...



**எம். சுரேஷ்**



அந்த விழிகள் அவனைக் கிறங் கடித்தன. மனதை ஒருமுகப்படுத்தி வழிபாடு செய்ய முடியவில்லை. அது கோயில் என்பதையும் மறந்து அந்த அற்புதமான அழகை, கயல் விழிக் கண்களை மெய்மறந்து இரசித்துக் கொண்டிருந்தான் வர்மா. ஆசை எல்லை மீறிப்போக அவளோடு எப்படியா வது பேசவேண்டும் என்று மனம் துடித்தது. இருப்பினும் சூழ்நிலை அதற்கு இடம் கொடுக்கவில்லை. அவளோடு ஒரு வயதான மனிதரும் வந்திருந்தார். அது அவளின் தந்தையாக இருக்க வேண்டும்....

முள்ளில் சிக்கிய மென்பட்டுத் துணியாய்க் கிடந்த தனது மனதை விடுவிக்க முடியாமல், அறுத்தெடுத்துக் கொண்டு வீடு திரும் பினான். அவளை இன்னொரு முறை காணமாட்டோமா? என்று மனம் ஏங்கித் தவித்தது. கவலைப்பட்டான். யோசித்தான். மின்னலாய் ஒரு யோசனை. 'அவள் அடுத்த வெள்ளிக்கிழமையும் கோயிலுக்கு வரத்தானே வேண்டும்....' அந்த நினைப்பே இனிப்பாய் இருந்தது. அடுத்த வெள்ளி வரும்வரை தவமாய்த் தவம் கிடந்தான்.

வெள்ளிக்கிழமை வந்தது. அவளும் வந்தாள். அவளோடு அந்த வயதான மனிதரும் வந்திருந்தார். 'ச்சே! இந்த முறையும் அவளோடு பேச முடியாது போலிருக் கிறதே' மனம் சஞ்சலப்பட்டது. இவனது தவிப்பை அவள் கண்டிருக்க வேண்டும்; வயதான மனிதருக்குத் தெரியாமல் மெல்லப் புன்னகைத்தாள். அந்த எதிர்பாராத புன்னகை மின்னலால் தாக்குண்ட வர்மா கிட்டத்தட்ட அனைத்தையும் மறந்து ஒரு ஞானியின் நிலையை அடைந்தான். சுருக்கமாச் சொன்னால் இன்னும் ஒன்றும் நடக்கவில்லை.! பேசக் கிடைக்காத சோக மூட்டையைச் சுமந்து கொண்டு வீடு திரும்பி னான் வர்மா.

'இனிக் கோயிலுக்குச் சென்று பிரயோ சனமில்லை. அவள் கோயிலுக்கு வருவதாக இருந்தால் யாரையாவது துணைக்கு அழைத் துக் கொண்டுதான் வருவாள். நமக்குப் பேசக்கிடைக்காது. எனவே எதிர்பாராத விதமாக எங்காவது சந்தித்தால் பேசிவிட வேண்டும். என் மனதில் உள்ளதையெல்லாம் அவளிடம் சொல்லிவிட வேண்டும்.' நினைத் துக் கொண்டான்.

பல வெள்ளிக்கிழமைகள் செலவழிந் திருந்த நிலையில் ஒரு நாள் காலை எதிர்பாராத விதமாக அந்த அழகிய விழி களை ஒரு அஞ்சல் அலுவலகத்தில் கண்டு ஆச்சரியப்பட்டான் வர்மா. ஓர் இன்ப அதிர்ச்சி. லேசாக ஒரு நடுக்கம்.... அவளும் அவனைப் பார்த்தாள், அன்றுபோலவே இன்றும் லேசாய்ப் புன்னகைத்தாள். வர்மா வின் இதயத்துடிப்பு அதிகரித்தது. அவள் தனியாகத்தான் நின்று கொண்டிருந்தாள்.

பக்கத்தில் யாரும் இல்லை. 'ஆகா! அருமை யான சந்தர்ப்பம்..... போ வர்மா.... போ..... போய் ஆசை தீரப் பேசு....' ஆசை அவசரப் படுத்த, பயத்தில் மேனியெல்லாம் வியர்த்துக் கொட்டியது.

எப்படியோ கொஞ்சம் தைரியத்தை வரவழைத்துக்கொண்டு அந்த அழகியின் அருகில் சென்ற வர்மா தடுமாறினான்.

"ஒ.... ஒங்களை.... அடிக்கடி..... கோயில்ல பார்த்திருக்கேன்."

அவள் அதை ஆமோதிப்பதைப் போல் அழகாகச் சிரித்தாள்.

"அப்படிப் பார்க்கிறப்போ.... ஒங்கக் கிட்ட நிறைய விஷயம் பேசணும்ன்னு நினைப் பேன். ஆனா சந்தர்ப்பம் கிடைக்கல்ல."

அவன் தயங்க அவள் அழகாக இதழ் திறந்தாள்.

"ஏன்! நீங்க கோயில்ல வைச்சே பேசி யிருக்கலாமே?"

அந்தக் கேள்வி வர்மாவிற்கு ஒரு புத்துணர்ச்சியைத் தந்திருக்க வேண்டும், சற்று சந்தோஷமாக....

"எப்படிங்க பேசுறது? நான் பார்க் கிறப்போ எல்லாம் ஒங்ககூட ஒங்க அப்பா வும் வந்திருந்தாரே!"

அவன் முடிக்கும் முன், அவள் ஆரம் பித்தாள்,

"அது என்னோட அப்பா இல்லை– கணவர்!"

வர்மாவிற்கு லேசாகத் தலை சுற்றியது!!

# மண் பாசம்

**ரூபாராணி**

"சரசு, நீ வேணுமெண்டா பக்கத்து வீட்டு பாக்கியம் மாமியோட எங்காவதுபோய் உன் உசிரைக் காப்பாத்திக்க"

தகரப் பீங்கானில் இருந்த பாண் துண்டுகளை நீண்ட நேரமாகப் பார்த்துக் கொண்டிருந்தாள் பார்வதி. குவளையில் ஆறிப் போய்க்கிடந்த தேனீரில் இலையான் ஒன்று குளித்து விளையாடியது. சற்று நேரத்துக்கு முன்னால் தாளப் பறந்த ஹெலி போட்ட துண்டுப் பிரசுரம் அவள் அருகில் காற்றில் படபடத்துக் கிடந்தது. இருபத்திநாலு மணித்தியாலங்களுக்குள் இடம் பெயர்ந்து பாதுகாப்பான இடம் தேடிப்போக வேண்டுமாம். மூச்சுக்காற்று அனலாய் மூக்கிலிருந்து வெளியேறியது பார்வதிக்கு.

'இடம் பெயர்தல்... பாதுகாப்பு... இவை இரண்டும் தமிழன் தலையில் முன் கூட்டியே எழுதப்பட்டவைதானா?' தனக்குத்தானே பார்வதி கேட்ட கேள்விதான் அது. அவளுக்கு நெஞ்சை அடைத்ததுபோல் இருந்தது. தேனீரில் மிதந்த இலையானைச் சுண்டு விரலால் தட்டிவிட்டு அண்ணாந்து மட மட என்று குடித்த பார்வதி எந்தப் பரபரப்பும் இன்றித் திண்ணைக்கட்டில் முந்தானையை விரித்து ஒருக்களித்துப்படுத்துக் கொண்டாள்.

அம்மாவின் இந்த அசாதாரண அமைதி அவள் மகள் சரசுவுக்குச் சற்றே எரிச்சலூட்டி னாலும் அவள் காட்டிக்கொள்ளவில்லை.

மாவும் பலாவும் வாழையும் தென்னை யும் கூடிக்குலாவிய தோட்டம் பார்வதிக்குச் சொந்தமானது. அதன் நடுவில் சின்னதாக ஒரு கல்வீடு; கிணறு, மாடு–கன்று என்று அந்தக் கிராமத்தில் செல்வாக்காய் வாழ்ந்த வள் பார்வதி. அவள் பிறந்த திருவிடமும் அதுதான். அவள்பாட்டன் பாட்டி, அம்மா, அப்பா என்ற உறவுகளோடு உருண்டு புரண்டு கிடந்த நிலத்தில் பார்வதி உயிரையே வைத்திருக்கிறாள்.

"சரசு! மண்ணைக் குவித்து கீச்சுக் கீச்சுத் தம்பளம் கீயாமாயாத்தம்பளம் என்று சினேகிதியுடன் விளையாடிய இந்த மண்ணை விட்டுப் போகத்தான் வேணுமா?"



பார்வதியின் கணவர் விதானையாரும் அவளும் மதியச் சாப்பாட்டுக்குப் பிறகு முந்திரி மர நிழலில் கால் நீட்டி இருந்து வெற்றிலை மடித்துக் கொடுத்துச் சல்லாபித்த இடத்தைவிட்டுப் போக வேணுமா? நினைவுகளில் நீந்தி நீந்திக் கரையேற முடியாமல் தவித்தாள் பார்வதி.

சரசு ஒரு உரப்பையில் கைக்குவந்த எதையெதையோ திணித்து சணல் கயிறினால் சுருக்குப்போட்டாள். மெல்ல தலையைத் திருப்பித் தாயைப்பார்க்கிறாள்; ஐம்பது வயது என்றால் யாரும் நம்பமாட்டார்கள். எழுபது வயதை எட்டிப்பார்க்கும் தோற்றம்; கூனிக் குறுகி.. நரையும் திரையுமாய்...? மகாலட்சுமி யாக இருந்த அம்மாவா இது? அரிசிமா இடியப்பமும் மட்டி றால் சொதியும் பிசைந்து அங்கும் இங்கும் ஓடியாடி தனக்கு உணவு ஊட்டிய அழகுத் தெய்வமா இது..? சரசு விம்மினாள். எத்தனை வருஷ வாழ்க்கை! சிவனே என்று ஒரு உரப்பைக்குள் முடங்கிப் போன அவலத்தை எண்ணி வேதனைப் பட்டாள்.

அம்மா தொண்டையைச் செருமி மகளின் கவனத்தைக் கலைத்தாள். "சர..சு.. நாம இனி.. எங்கடி போறது?"

"இந்த ஊர்ச்சனம் எங்கு போகுதுகளோ அவங்களோட சேர்ந்து போறதுதான்."

"இந்த மாடு– கண்டு, நாய், பூன எல்லாத்தையும் எப்படிடி உட்டுப்போறது?" அம்மா பரிதாபமாகச் சொன்னாள்.

"உசிரமட்டும் கொண்டு போனால் சரி" சரசு சொன்னாள்.

"பைத்தியக்காரி! உசிருக்கென்ன உத்தர வாதம்? போற வழியில எதுவும் நடக்கா தெண்டு என்ன நிச்சயம்? உன்ர அப்பன் ஒழுங்கையால வரக்குள்ள ஷெல்லடிச்சிச் சுறுண்டு செத்துக்கிடந்ததை மறந்துட்டியா? நமக்கெங்கடி பாதுகாப்பு? எங்க இருந்தாலும் நடக்கிறதுதான் நடக்கும்." மூச்சிரைக்கச் சொல்லி அம்மா ஓ வென்று அழுதாள்.

"சரசு நீ வேணுமெண்டா பக்கத்து வீட்டுப் பாக்கியம் மாமியோடு சேர்ந்து எங்கண்டானபோய் உன்ர உசிரக் காப்பாத் திக்க. எனக்கு வயசாச்சி, நீ வயசுக்கு வந்தவ– வாழ வேண்டியவ, போம்மா.. நா.. என்ர நெலத்த உட்டு ஒரு அடிகூட அசையமாட்டன். 'எங்கேயோ போற உசிர் நா பொறந்த மண்ணில போகட்டும்' என்று உறுதியாகச் சொன்னாள்.

பார்வதி எழுந்து கூடத்துச் சுவரில் மாட்டியிருந்த ஒரு பழையபோட்டோ படத்தை எடுத்து சரசுவிடம் கொடுத்து "ஒன்ர அப்பனத் துணைக்கு எடுத்துப் போ" என்று நாத் தழுதழுக்கச் சொன்னாள். அம்மாவைக் கட்டி அழவேணும் போலிருந் தது சரசுவுக்கு.

சரசு என்ன நினைத்தாளோ; உரப்பை யில் கட்டியிருந்த சணலை அவிழ்த்து அதற் குள் வைத்த பொருட்களை நிதானமாக வெளியே எடுத்து வைத்தாள்.

'பெற்றதாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ வானிலும் நனி சிறந்தனவே' என்று எப்போதோ படித்த வரிகள் இப்போது அவள் நினைவில் எட்டிப்பார்த்தன.



படிப்பகம்

www.padippakam.com

## இலக்கிய நயம்

தருவது ரசிகன்

# கற்றது மறவாது



"தமிழ் வாழ்க. தமிழ் வாழ்க"

புலவர் மணிமாறன் சபைக்கு தலை வணங்கி முகம் மலர்ந்தான்.

மலர்ச்சிக்குக் காரணம் அவன் விரலில் அணிவிக்கப்பட்ட கணையாழி.

அணிவித்தவன் சோழ மன்னன். ஆரவாரித்து அங்கீகரித்தது அரச சபை.

சபையின் பாராட்டுக்குத் தலைவணங்கினான். கணையாழியை விரல் சுமந்த கௌரவத்தில் முகம் மலர்ந்தான்.

"மணிமாறா! நீ வயதில் இளையவன்! வையகம் புகழும் வகையில் அறிவில் பெரிய வன்! நீதி நூல்களை நீ கற்றளவுக்கு வேறு எவரும் கற்றிலர்! சோழ நாடு உன்னால் பெருமைப்படுகிறது!"

"நன்றி மன்னா! கற்றதையெல்லாம் மற்றவர் அறிந்து பயன்பெறவைப்பதே என் பணி!"

"மகிழ்ச்சி! மிக்க மகிழ்ச்சி!"

"மன்னா! ஒரு விண்ணப்பம்!"

"நற்றமிழ் நாட்டில் கற்றவன் கையேந்தக் கூடாது! ஆகவே, விண்ணப்பம் போடாதே! கட்டளையிடு! என்ன செய்ய வேண்டும் நான்!"

"கற்றதை போதிக்க கல்விச் சாலை ஒன்று உருவாக்கித் தரவேண்டும்!"

"ப்பூ...அவ்வளவுதானே! ஆகட்டும்!"

மறு வாரமே கல்விச் சாலை தயாரானது.

வாக்குறுதி கொடுத்துவிட்டு மறந்து விடும் பழக்கம் அந்த நாளில் இருக்க வில்லை.

கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றா விட்டால் தூக்கம் வராது சோழ மன்னனுக்கு!

கல்விச் சாலையில் முத்தமிழும் விளையாடியது.

நாட்டியம் பயில முல்லைகள் வந்து முகாமிட்டனர்.

அவர்களில் ஒருத்தி மல்லிகாதேவி. "பெயரிலேயே வாசமடிக்கிறாய்" என்றான் மணிமாறன்.

புன்னகையை மட்டுமே வீசிவிட்டுப் போனாள் மல்லிகா. அதுவே போதையாக இருந்தது.

நாட்டியப் பாடம் முடிந்ததும் ஒருநாள் தனியாக அழைத்தான்.

"எனக்குள் தோன்றும் எண்ணம் சொல்லவா?"

"சொல்லுங்கள்!"

"பரத நாட்டியம் உன் பார்வையிலேயே இருக்கிறது!"

புன்னகைப் பூவை வீசினாள்.

"நீ நடப்பதே ஒரு நடனம்தானே!"

அதற்கும் புன்னகைதான் பதிலாக வந்தது. மெல்ல எழுந்தான். அருகில் சென்று இடையில் தன் இடக்கரத்தால் தொட்டான்.

"இல்லையோ என்று நினைத்து விட்டேன்!" என்றான்.

"வேண்டாம்!" என்றாள்.

"ஏன்?"

"நீங்கள் குரு! நான் மாணவி!"

"அது கற்றுத்தரும் இடத்தில்தான்!"

"இங்கு மட்டும் என்னவாம்?"

"விரும்பினால் நீயும் கற்றுத்தரலாம். பொருள் சொல்லித்தரலாம்!"

"என்ன பொருள்?"

"திரைக்குள் உள்ள இரகசியம் சம்பந்தப்பட்டது! சொன்னால் புரியாது!"

"ஏன்?"

"புத்தகத்தை மூடிவைத்துக் கொண்டு எந்தப் பாடத்தில் என்ன சந்தேகம் என்று கேட்டால் எப்படிச் சொல்வது?" அவள் காதுமடல்களை மூக்கால் உரசினான்.

"பாடத்தை ஆரம்பிக்கலாமா?" என்று கேட்டான்.

"புத்தகம் பேசாது! படிப்பவர்தான் பிரித்துப் பார்க்க வேண்டும்!"

மணிமாறன் எதிர்பார்க்காத பதில் அது! அவளை இறுக்கிக் கொண்டான்.

"புத்தகத்திற்கு எதற்கு பொன்னாடை?" மேலாடையை விலக்கினான்.

"மல்லிகா! பாடத்தின் தொடக்கமே சந்தேகத்தில்தான் ஆரம்பம்!"

"என்ன சந்தேகம்?"

"கண்டேன்-கண்டேன் மாங்கனி கண்டேன். மாங்கனிமீது இலந்தக் கனியும் இருந்திடக் கண்டேன்! இரண்டும் ஒன்றாய் இருப்பது எப்படி?"

"நிச்சயம் பொருள் சொல்ல வேண்டுமோ?"

"விளக்கம் சொன்னால்தான் விசேஷம்!"

"கனிகளின் சுவையை கண்டவர் அறியார். உண்டவரே அறிவார்! சுவைகள் பலவிதம்! ஒவ்வொன்றும் ஒருவிதம்! சொல்லிப் புரியாது!"

"புரிந்தது வழிமுறை! இனித்தான் என் முறை!" பலாச்சுளையில் மொய்க்கும் ஈயானான் இளம் புலவன்.

"பொறும் புலவரே!" தடுத்தாள் மல்லிகா தேவி.

"உள்ளங்கையில் தேன் இருக்க, உதட்டுக்கு மூடுவிழாவா?"

"தேன் எங்கே போகப் போகிறது. தெவிட்டும் வரை நீர் அருந்தாலாம்! எனக்குச் சில தேவைகள் உண்டு! அதற்கு உமது உதவி தேவை!"

"புதிர் போடாதே! பொறுமை இல்லை!"

"அழகின் இரகசியம் நீர் அறிய வேண்டுமானால்..."

"வேண்டுமானால்?"

"அரச இரகசியம் நான் அறிய வேண்டும்!"

மணிமாறன் திகைத்தான்.

"நீ....நீ.....யார்?"

"பல்லவ நாட்டு ஒற்றர் படையில் ஒருத்தி!" சொல்லிக் கொண்டே மணிமாறனின் மார்பில் தன் விரல்களால் நீவிவிட்டாள்.

"எனக்கு....எனக்கு என்ன இரகசியம் தெரியப்போகிறது?"

"மறைக்காதே மணிமாறா! கற்றறிந்தவன்! ஞானப்பழம்! என்றெல்லாம் உனக்கு மட்டற்ற மரியாதை! அதனால் முக்கிய முடிவுகள் எடுக்கப்படும் கூட்டங்களில் உனக்கும் ஒரு இடமுண்டு! தெரியும் எமக்கு!"

ஏக வசனத்தில் பேசினாள்! நெருங்கி அவன் மார்பில் இதழ்களைப் பொருத்தி இதழ் விழா நடத்தினாள்.

"என்ன தெரிய வேண்டும் உனக்கு?"

"சோழர் படையின் இன்றைய பலம்! புகுத்தப்பட்டுள்ள புதிய சூட்சுமங்கள்! படைகள் நிலைகொண்டுள்ள பாசறைகளின் விபரங்கள்!"

"இத்தனைக்கும் நான் பதில் சொன்னால்?"

"ஒரு மல்லிகாவுக்கு பதிலாக ஓராயிரம் மல்லிகாக்கள்! நீர் தூங்குவதற்கு கட்டிலுக்குப் பதிலாக கட்டழகு மேனிகள்!"

"அப்படியா!"

"சத்தியமாக!"

மணிமாறன் திடீரென்று உரத்து நகைத்தான்.

"ஆஹா! என்ன ஒரு வாய்ப்பு! தழுவ ஒருத்தி! தாலாட்ட இன்னொருத்தி! தலைவைத்து சயனிக்க பூ மேனி! அரச இரகசியத்தை மட்டுமல்ல, அரசனையே முடியுமானாலும் தூக்கித் தந்துவிடுவேன்! பொறு!"

பாய்ந்து சென்று கதவு திறந்தான். இருகரம் தட்டி ஓசை எழுப்பினான்.

"யாரங்கே! வாருங்கள்!"

வந்தனர் நால்வர் உருவிய வாள்களுடன்!

"அதோ அவள்தான்! நாம் நினைத்தது சரி! எதிரியின் உளவாளிதான்! கைது செய்யுங்கள்!" என்றான் கம்பீரமாக நின்ற மணிமாறன்.

மல்லிகா திகைத்துப் போனாள். முகம் சவமாக வெளுத்திருந்தது.

குனிந்த தலையோடு, துவண்ட மரமாக காவலர் நடுவில் கைதியாகச் சென்றவளை மணிமாறன் வார்த்தைகள் நிறுத்தின.

"பல்லவ நாட்டு ஒற்றர் படையின் திட்டம் அருமைதான். ஆனால், மணிமாறன் நாலும் கற்றவன் என்பதை மறந்து போனீர்கள்! கற்றது கற்றுக் கொண்டதை காற்றில் பறக்கவிடவல்ல! கற்றநெறி நடந்து வாழ்வென்ற கடலில் கரைசேரத்தான்! கற்று, கற்றபடி நடப்பவனை கெட்ட வழியில் திருப்புவது இயலாது!"

மல்லிகாவுக்கு புரிந்தது. திருவள்ளுவர் வாக்குப்படி நடப்பவன் அவன் என்று தன் தோல்வியிலும் அவன் மீது மரியாதை வந்தது.

**"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக."**

அதிகாரம்-40-குறள்-391

## சிந்தியா பதில்கள்



**★ மதகுருமார்கள் அரசியலில் பிரவேசிப்பது பற்றி உமது அபிப்பிராயம் என்ன?**

எல். ஜவாஹிர்-மினுவாங்கொட.

ஆட்டு வித்துக்கொண்டிருப்பதில் சலிப்பு வந்துவிட்டது. நேரடியாகவே ஆடவருகிறார்கள் என்று நினைக்கிறேன்.

✓

**★ தமிழக அரசியலில் ரஜினியின் பாத்திரம் என்ன?**

வி. தவச்செல்வன்-மட்டக்களப்பு.

கண்ணபரமாத்மா.

✓

**★ இலங்கைக்கு வழங்கும் கடனுதவிகளை பிறநாடுகள் நிறுத்திவிட்டால்....?**

எம்.எஸ்.எம். முஹம்மது அலி-வெல்லம்பிட்டி.

திருநாட்டின் திருவோட்டுக்கு வேலையிருக்காது.

✓

**★ இந்திய கிரிக்கெட் அணிக்கு என்ன நடந்தது? தோல்விக்கு காரணம் என்ன?**

செல்வி. ஜனூன்-திஹாரிய.

பதினொரு பேரும் பதினொரு பேராக இருப்பதுதான்! (புரிகிறதா?)

✓

**★ கிரிக்கெட் வீரர்களில் எத்தனை பேர் தேர்தலில் குதித்திருக்கிறார்கள்?**

பி. துஷ்யந்தன், கண்டி.

குதித்து காலை ஒடித்துக்கொள்ளும் துணிச்சல் மனோஜ் பிரபாகருக்குத்தான்! அவருக்கு ஆதரவாக கபில் தேவ், ஜடேஜா ஆகியோர் பிரசாரத்தில் தூள் கிளப்புகிறார்கள்.

✓

**★ கண்ணுள்ள காதல், கண்ணில்லாத காதல், இரண்டுக்கும் உள்ள வேறுபாடு என்ன?**

சி. சுரேந்தர்-பதுளை.

கண்ணுள்ள காதலில்- பார்த்தறிதல் வசதிப்படும். கண்ணில்லாத காதலில்- பட்டறிதல்தான் புரிதல் தரும்.

✓

**★ தமிழக அரசியலில் ரஜினிக்கு உள்ள மரியாதை எப்படி?**

ரஜினிப்பிரியன்-மாத்தளை.

கலைஞர் கருணாநிதி பழம் தின்று கொட்டை போட்டவர். அவரே சலாம் போடுகிறாரே! கலைஞர் தப்புச் செய்யவில்லை என்று மறுக்காமல், "மனிதன் தப்புச் செய்வது இயல்பு, தப்பை திருத்திக் கொள்பவனே மனிதன்" என்று ரஜினி தத்துவம் பேசுகிறார். வேறு யாராவது அதைச் சொல்லியிருந்தால் துள்ளியெழுந்து தூய தமிழால் சாடியிருப்பார் கலைஞர். சொன்னது ரஜினி என்பதால் கலைஞர் சும்மா இருக்கிறார். ரஜினிக்கு எதிராகப் பேசும் தலைவர்களும் கவனமாகத்தான் வார்த்தைகளை எண்ணி, அளந்து வீசுகிறார்கள். இதற்கெல்லாம் என்ன அர்த்தம்? மரியாதை மட்டுமல்ல, தேர்தலில் தி.மு.க. வெற்றிபெற்றால் ரஜினிக்கு முதல்வருக்கு சமமான அரியாசனமும் கிடைக்கும். அந்தக் கண்ணனின் கையில் புல்லாங்குழல் ரஜினியின் கையில் இரசிகர் மன்றங்கள். முன்னதில் மயங்கினர் கோபியர். பின்னதில் மயங்கினர் அரசியல் தலைவர்கள்.

✓

**★ ஜெயலலிதா தேர்தலில் வெற்றி பெற்றால் என்னாகும்?**

பா. சோதிநாதன்-வவுனியா.

தற்பாதுகாப்புக்காக என்றாலும் ரஜினி காந்த் தனிக்கட்சி ஆரம்பிக்க வேண்டியிருக்கும்.

✓

**★ பட்டுச்சேலை பரிசு பெறும் ஒருவர் தூர இடத்தில் இருந்தால் முரசின் காரியாலயத்தில் வந்து நேரடியாக பெறுவது எப்படி?**

செல்வி. திலகேஸ்வரி ரெங்கையா, பசறை.

நேரடியாக வரமுடியாவிட்டாலும் பரிசைப் பெறுவதற்கு வேறு வழிகள் இருக்கின்றன. நிர்வாகியுடன் தொடர்பு கொண்டு அறியலாம்.

✓

**★ காதலிக்கும் பெண்களுக்கும்-காதலிப்பது போல் நடிக்கும் பெண்களுக்கும் இடையிலான வேறுபாடு என்ன?**

சா. பத்மகுமார்- கருவாஞ்சிக்குடி.

முன்னவர்கள் கிலோக்கணக்காக ஐஸ் வைக்கமாட்டார்கள். எப்போதுமே கோபம் வராததுபோல வழிய மாட்டார்கள். காகம் வெள்ளையென்று நீர் சொன்னால், உம்மை அறிவுக்கொழுந்து என்று தட்டிக்கொடுக்க மாட்டார்கள். இப்படி ஒரு பட்டியலே தயாரிக்கலாம். உமது அனுபவத்திற்கு ஏற்ப பட்டியலை நீட்டிக் கொள்ளலாம்.

## தேர்தல் களத்தில் ஒரு — கண்ணபரமாத்மா

✓

**★ பிரபுவும், குஷ்புவும் மீண்டும் இணைந்து நடித்தால் எப்படியிருக்கும்?**

எஸ்.எம்.கடாபி-நிக்கவெவ.

'அட...என்னமாய் நடிக்கிறார்கள்' என்று வியப்பு வரும்.

✓

**★ டியர் சிந்தியா- நீங்கள் சிந்திக்காமலா பதில் சொல்கிறீர்கள்?**

இப்னு ஹமீட், மாத்தளை.

இந்த மாதிரியான கேள்விகளுக்கு என்றால் 'ஆம்'.

✓

**★ காதலை அதிகம் நேசிப்பவர்கள் ஆண்களா, பெண்களா?**

யூ.எல்.சறாக்-கொழும்பு.

காதலைக் காதலாய் காதலோடு அறிந்தவர்கள் யாவராலும் காதல் காதலிக்கப் படுகிறது.

✓

**★ நான் காதலிக்கும் பெண் எனக்கு கிடைக்க மாட்டாளோ என்று சந்தேகமாக இருக்கிறது; என்ன செய்யலாம்?**

செ. மாந்தன் , கந்தளாய்.

கிடைக்க வேண்டியது கிடைக்காமல் இருக்காது. கிடைக்காமல் இருக்க வேண்டியது கிடைக்காது. (நன்றி-ரஜினி)

✓

**★ ஆயுதத் தொழிற்சாலைகளை மூடமுடியுமா?**

ஐ. சக்கரியா, புல்மோட்டை-01.

அதற்கு முன்னர் ஆதிக்க ஆசைகளை மூட்டை கட்டிவைக்க வேண்டுமே!

✓

**★ உலகக் கிண்ணம் 96 இல் அதிக விக்கெட்டுக்களை வீழ்த்திய வீரர் யார்?**

சஹீனா பேகம் பாறூக்-இறக்கக் கண்டி.

அனில் கும்ளே.

✓

**★ இந்திய நடிகைகள் சிகரெட் புகைப்பது உண்மைதானா? நம்ப முடியவில்லையே?**

சி. பிரேமராணி- அவிசாவளை.

சிகரெட் என்ன சிகரெட், சுருட்டையும் பிரியமாகச் சுவைக்கிறார்கள். நம்ப மறுப்பீர்களோ என்று உங்களுக்காக தேடி எடுத்து ஒரு படம்! சுருட்டோடு தோன்றுபவர் பூஜாபட்.

✓



**★ சங்கவி அடிக்கடி கனவில் வருகிறார். என்ன செய்யலாம்?**

கே. ரவிமாறன், கொழும்பு-11

ஆடை அணிவித்துப் பாருங்களேன். ஒரு வித்தியாசமாக இருக்கும்.

✓

**★ நடிகையாகத் தேவையான தகுதி என்ன?**

எம். பிரதாபம்-நீர்கொழும்பு.

தேவையான கலைகளை, தேவையான இடத்தில் உபயோகப்படுத்தத் தெரிந்திருந்தால் போதும்.

✓

**★ தமிழக தேர்தல் முடிவுகள் எப்படியிருக்கும் என்று நினைக்கிறீர்கள்?**

எஸ். டேவிட்-கொழும்பு-06.

தமிழ் நாட்டில் தி.மு.க, அ.தி.மு.க. இரண்டுக்கும் 35 வீத வாக்குகள் தனித் தனியே உள்ளன. இந்திரா காங்கிரசிடம் 20 வீத வாக்குகள் உள்ளன. காங்கிரசுடன் கூட்டுச் சேரும் தி.மு.க, அல்லது அ.தி.மு.க 55 சதவீத வாக்குகளைப் பெறமுடியும். என்பது கடந்தகால தேர்தல் கணக்கு.

இம்முறை காங்கிரஸ் மூன்றாக உடைந்திருக்கிறது. தி.மு.க. வாக்குகளில் ஒரு பகுதியை ம.தி.மு.க விழுங்கிவிடும். எனவே ரஜினி அலை சரியாக வீசாவிட்டால் செல்விக்கு மறுபடியும் சிம்மாசனம் கிடைத்துவிடும்.

✓

**★ நெஞ்சுரம் கொண்ட நடிகை யார்?**

கே. யோகேஸ்வரன், குருநாகல்.

திரையில் காண்பதை மட்டும் வைத்து அதனைத் தீர்மானிக்க முடியாது. நெஞ்சுரத்தை போலியாகக் காட்டுவதற்கும் வழிகள் உண்டல்லவா? இந்த விடயங்களில் கண்ணை நம்பாதே. தீர ஆராய்ந்து அறிந்துகொள் என்ற அணுகுமுறைதான் உதவும்.

✓

**★ ரஜினி மொட்டை போட்டதின் இரகசியம் என்ன?**

என். புவனேஸ்வரி, புத்தளம்.

இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் அமெரிக்க ஆசிரமத்தில் மொட்டை அடித்ததாகச் சொல்லியிருக்கிறார். சினிமா எக்ஸ்பிரஸ் விழாவில் பேசும்போது, மசாஜ் சலூனில் தூங்கிவிட்டேன். மொட்டையாக்கி விட்டார்கள் என்று சொல்லியிருக்கிறார். எனக்கென்னவோ ரஜினி அப்படித் தூங்கியிருப்பார் என்பதை நம்புவதற்கு சிரமமாகவுள்ளது. எப்படியோ ரஜினியின் புண்ணியத்தில் தமிழ் நாட்டில் முடிவெட்டுவோருக்கு நல்ல வருமானம் கிடைத்திருக்கிறது.

✓






படிப்பகம்

www.padippakam.com

# வருவார் - வருகிறார் - வந்தார்

**வம்பரங்கம் தருவது - அம்பன்**

அரசியலுக்கு இதோ வருகிறார். அதோ வருகிறார் என்று பத்திரிகைகள் சொல்லிக் கொண்டிருந்தன.

ஒரே சஸ்பென்ஸ்

ரஜினி வாய்திறக்காமல் இருந்தார். எதிர்பார்ப்புக்கள் விதையாகி, மரமாகி கிளைவிட்டு வளர்ந்தன.

பின்னர் ரஜினி ஒரு அறிக்கை விட்டார். இம்முறை தேர்தலில் அரசியலுக்கு வர மாட்டேன் என்னை விட்டுவிடுங்கள் என்றார்.

மரம் ஓயவிரும்பினாலும் காற்று அதனை விடாது. தமிழ்நாட்டில் ஜெயலலிதாவை வீழ்த்த ரஜினியை நம்பியிருந்த அரசியல் தலைவர்கள் அவரை விடுவதாக இல்லை.

ஜெயலலிதா ஆட்சிமீது வெறுப்படைந்திருந்த பத்திரிகை உலகத்திற்கும் ஒரு நம்பிக்கை நட்சத்திரம் தேவைப்பட்டது.

கருணாநிதிமீதும் பத்திரிகைகளுக்கு நம்பிக்கை இல்லை.

ஜெயலலிதாவா, கருணாநிதியா? என்று கேள்வி வரும் நிலையில் அவரைவிட இவர் பரவாயில்லை என்ற நிலை இருக்கிறதே தவிர, கருணாநிதி ஆட்சிக் காலம் தூய்மையானது என்று சொல்வதற்கு அரசியல் விமர்சகர்களும் தயாராக இல்லை. பத்திரிகை உலக நிலையும் அதுதான்.

அதனால்தான் மூன்றாவது சக்தி ஒன்று வந்தால் நன்றாக இருக்குமே என்று நல்லாட்சி விரும்புவோர் எதிர்பார்த்தார்கள்.

அந்த மூன்றாவது சக்திக்கு தலைமை கொடுக்கும் தகுதி ரஜினிக்குத்தான் உண்டு என்ற முடிவோடு இருந்தார்கள்.

அதனால் ரஜினி ஒதுங்க நினைத்த போதும் அவரை விடாமல் துரத்தினார்கள்.

ரஜினிக்கும் தனிக்கட்சி ஆரம்பிக்கும் எண்ணம் இருந்தது.

கட்சிகளில் இல்லாத நேர்மையான புத்திஜீவிகள் பலரோடு ரஜினி தொடர்பு கொண்டார்.

நான் தனிக் கட்சி தொடங்கினால் வருவீர்களா? என்றும் கேட்டிருக்கிறார்.

நடிகர் கமலஹாசனிடம்கூட அபிப்பிராயம் கேட்டிருக்கிறார்.

தனிக்கட்சி தொடங்குவதிலும் ரஜினிக்கு ஒரு சங்கடம் இருந்தது.

ஆர்.எம்.வீரப்பன் போன்றவர்கள் ரஜினிக்காகவே தாம் காத்திருப்பதாக சொல்லிக் கொண்டிருந்தனர்.

ஆர்.எம்.வீரப்பனை ஜெயலலிதா கட்சியை விட்டு விலக்கியதுக்கும் ரஜினியின் பேச்சுத்தான் காரணமாக இருந்தது.

எனவே, ஆர்.எம்.வீரப்பனை ஒதுக்கி விட்டு தனிக்கட்சி தொடங்கினால் நம்பியோரைக் கைவிட்டதாக முடிந்துவிடும்.

அதே நேரம் ஆர்.எம்.வீரப்பன் போன்றவர்களை கட்சியில் சேர்த்தால் ஊழலுக்கு எதிராக பேசுவதில் அர்த்தமில்லாமல் போகலாம். புதிய சக்தி என்ற இமேஜ் கூட இல்லாமல் போகும்.

அது தவிர, ரஜினியின் 'இமேஜ்' கூட அவர்களால் கெட்டுப்போக வாய்ப்பிருக்கிறது.

எல்லாவற்றையும் ஒப்பிட்டுப் பார்த்துத் தான் ரஜினி தனிக்கட்சி தொடங்குவதை ஒத்திவைத்தார்.

**மூன்றாவது சக்தி**


இந்திரா காங்கிரஸ் கட்சியும் எம்.ஜி.ஆர் விசுவாசிகளும் இணைந்து மூன்றாவது சக்தியை உருவாக்கினால் தனது ஆதரவை வழங்க ரஜினி தயாராக இருந்தார்.

அந்த அணியில் தி.மு.க.வை சேர்க்க வேண்டும் என்று ரஜினி முதலில் விரும்பவில்லை என்பது வெளியே தெரியாத விஷயம்.

இந்திரா காங்கிரஸ், தி.மு.க.வுடனும், அ.தி.மு.க.வுடனும் கூட்டு வைக்காது என்று மூப்பனார் உட்பட தமிழக காங்கிரஸ் கமிட்டி கூறிக்கொண்டிருந்ததும் அதனால்தான்.

ரஜினியின் பலத்தோடு மூன்றாவது அணியாக போட்டியிடவே அவர்கள் விரும்பினார்கள். அதனால்தான் பிரதமர் நரசிம்ம ராவை சந்திக்க ரஜினியை அழைத்துச் சென்றார்கள்.

'நரசிம்மராவ் நல்ல மனிதர்.' என்று ரஜினியே பாராட்டியிருந்தார். சந்திப்பு முடிந்தபின் நரசிம்மராவ்மீது பிரியமாகவும் இருந்தார்.



ஆனால் ஜெயலலிதாவோடுதான் கூட்டணி என்பதை முன்கூட்டியே முடிவு செய்துவிட்ட நரசிம்மராவ் தமிழ்நாட்டில் மூன்றாவது சக்தியை உருவாக்க விடாமல் இழுத்தடித்தார்.

அதனால் வெறுத்துப் போன ரஜிகாந்த் "அரசியலே வேண்டாம். என்னை விட்டு விடுங்கள். என் படத்தையோ பெயரையோ பயன்படுத்தாதீர்கள்" என்று கூறிவிட்டு அமெரிக்கா பறந்துவிட்டார்.

ரஜினி அரசியலில் குதிப்பாரா என்ற சஸ்பென்ஸ் சப்பென்றாகி விட்டது.

**மறுபடி புதிர்**

அ.தி.மு.க. கூட்டணி பற்றி நரசிம்மராவ் அறிவித்தவுடன் தமிழக காங்கிரஸ் இரண்டாக உடைந்தது.

மூப்பனார் தலைமையில் 'தமிழ் மாநில காங்கிரஸ்' உருவானது. மூன்றாவது சக்தியை உருவாக்க கால அவகாசம் இல்லாத நிலையில் தி.மு.க.வுடன் கூட்டணி அமைத்தார்கள்.

நரசிம்மராவில் இருந்த வெறுப்புக் காரணமாக தி.மு.க. தமிழக மாநில காங்கிரஸ் கூட்டணி உருவாக உதவினார் ரஜினி.

ஜெயலலிதாவை கண்டித்து அறிக்கை. தி.மு.க. கூட்டணியை ஆதரித்து அறிக்கை என்று அமெரிக்காவில் இருந்தபடியே பரபரப்பு ஏற்படுத்தினார் ரஜினி.

மறுபடி சஸ்பென்ஸ்

ரஜினி தேர்தலுக்கு முன்னர் வருவாரா? மாட்டாரா? அதுதான் சஸ்பென்ஸ்.

தேர்தல் முடியும் வரை அமெரிக்காவில் தான் இருப்பாரா? பரவலான கேள்வி.

கலைஞர் கருணாநிதியின் திரையுலக பொன்விழாவுக்கு ரஜினி வருவார் என்று செய்தி பரவியது.

சென்னைக் கடற்கரையில் பொன்விழாக் கூட்டம். ரஜினியைக் காண திரண்டுவந்தது கூட்டம்.




தமிழக தினமணி வெளியிட்ட காட்டூன்

ரஜினி வரவில்லை

ரசிகர்கள் கொதித்தனர்.

மேடையை நோக்கி செருப்புக்கள் பறந்தன. நாற்காலிகள் உடைக்கப்பட்டன.

ஒரே குழப்பம்

ஒரு சில தமிழக பத்திரிகைகள் தவிர வேறு பத்திரிகைகள் அந்தக் குழப்பம் தொடர்பாக செய்தி வெளியிடாமல் தவிர்த்ததும் குறிப்பிடத்தக்க விஷயம்.

ரஜினி வரவில்லை என்பதால், ரஜினி எப்போ வருவார்? என்று பல்வேறு ஊகங்கள்.

இறுதியாக 20.4.96 அன்று ரஜினி சென்னை திரும்பினார்.

ரஜினி எப்போ வருவார் என்பதற்கு பதில் கிடைத்துவிட்டது.

**பிரசாரம்?**

இனி அடுத்த கேள்வி.

"ரஜினி பிரசாரம் செய்வாரா?"

அவரிடமே நிருபர்கள் கேட்டனர்.

வழக்கம் போல புதிர் போட்டார் ரஜினி.

"ஒருநாள் அவகாசம் தாருங்கள் சொல்கிறேன்" என்றார்.

மறுபடி சஸ்பென்ஸ்.

ஒருநாள் இடைவெளியில் பல ஊகங்களை கிளப்பியபின்னர், 21.04.96 இல் ரஜினி அறிவித்தார்.

"பிரசாரம் செய்யப் போகிறேன்."!

"அப்படியா எங்கெல்லாம் போகிறீர்கள்?" இது நிருபர்களது கேள்வி.

ரஜினி சொன்னார்,

"எங்கும் போகமாட்டேன்!"

மறுபடி சஸ்பென்ஸ். நல்ல வேளையாக அதற்கும் ஒருகால அவகாசம் எடுத்துக் கொள்ளாமல் ரஜினி கூறினார்: "தொலைக் காட்சியில் மட்டுமே பிரசாரம் செய்வேன்!"

உடனே மற்றொரு சஸ்பென்ஸ். தமிழ் நாட்டில் பல தனியார் தொலைக்காட்சிகள் உள்ளன. ரஜினி எந்தத் தொலைக்காட்சியில் தோன்றுவார்?

ரஜினி பதில் சொல்லவில்லை.

மறுநாள் கருணாநிதியின் குடும்ப நிறுவனமான 'சன்' ரி.வி.யில் பிரசாரம் செய்தார் ரஜினி.

இவ்வாறு ரஜினி தொடராக எதிர் பார்ப்புக்களை உருவாக்கியும், புதிர் போட்டும் புதிய ஸ்டைல் ஒன்றை உருவாக்கிவிட்டார்.

தற்போதுள்ள நிலையில் ரஜினியே சொல்லியிருப்பதுபோல, "எனது வாயில் இருந்து உதிரும் ஒவ்வொரு சொல்லுக்கும் எதிர்பார்ப்பிருக்கிறது." என்பது பொய்யல்ல!

இறுதியாக ஒரு விஷயம், ரஜினி கட்சி மேடைகளில் ஏறாமல் தவிர்த்திருப்பதில் விஷயம் இல்லாமல் இல்லை.

ரஜினி நினைத்திருந்தால் அமெரிக்காவில் இருந்து முன் கூட்டியே திரும்பி கருணாநிதியின் திரையுலகப் பொன்விழாவில் கலந்து கொண்டிருக்கலாம்.

செய்யவில்லை!

ஏன்?

கருணாநிதியை முழுமையாக நம்ப அவர் தயாராக இல்லை.

அதனால்தான் கட்சிக்கூட்ட மேடைகளையும் அவர் தவிர்த்திருக்கிறார்.

ஆக, தி.மு.க.கூட்டணி வெற்றி பெற்றால் கருணாநிதிக்கு ஒரு ஆபத்து இருக்கும்.

தட்டிகேட்க ஆளில்லை என்று கருணாநிதியும் ஜெயலலிதா பாணியில் ஆட்சி நடத்த முடியாது.

ஏன் தெரியுமா? கருணாநிதியின் தலைக்கு மேலே கூரிய வாள் தொங்கிக் கொண்டிருக்கும்.

அதன் பெயர் ரஜினி.

ரஜினியை சீண்டிவிட்டு அவரை தனிக் கட்சி தொடங்கவைத்தால் என்னாகும் என்பது கருணாநிதிக்குத் தெரியாதது அல்ல.

எம்.ஜி.ஆர் மூலம் ஒரு முறை பயங்கரமாக சூடு கண்டவரல்லவா கருணாநிதி. மறப்பாரா?

தி.மு.க.கூட்டணி ஆட்சிக்கு வந்து ஊழல்கள் செய்தால் ரஜினி என்ன செய்வார்?

தனிக்கட்சி தொடங்குவரா?

தான் அழைத்து வந்து ஆட்சியில் அமர்த்தியவர்களை, தானே முன்னின்று வீட்டுக்கு அனுப்புவாரா?

அதுதான் எதிர்காலப்புதிர்!

## பறக்கும் விமானத்தில் ரஜினியின் பேட்டி

## நரசிம்மராவ்போல நடித்துக்காட்டினார்

அமெரிக்காவில் இருந்து சென்னை திரும்பும் வழியில் விமானத்தில் வைத்து நடிகர் ரஜினி சென்னை ஆங்கில நாளிதழுக்கு அளித்த பேட்டியில் சுவாரசியமான பகுதி:-

**கேள்வி:- உங்கள் அடுத்த படம்.**

ரஜினி:- முதலில் இந்த ஐந்து ஆண்டுகால பழையபடம் முடியட்டும். அதன் பிறகு எனது அடுத்த படத்தைப் பற்றி சிந்திக்கலாம்.

**கேள்வி:-ஜெயலலிதா அரசு பற்றி அமெரிக்காவில் பொதுமக்கள் கருத்து எப்படி இருக்கிறது?**

ரஜினி:- லாஸ்வேகாசில் ஸ்பானிஷ் டாக்சி டிரைவர் மற்றும் சிலர் என்னிடம் என்ன சொன்னார்கள் என்றால், இந்தியா ஒரு ஏழ்மையான நாடு என்று மக்கள் சொல்கிறார்கள். அப்படியிருக்கும் போது, வளர்ப்பு மகன் திருமணத்திற்கு பெரும் பணம் செலவு செய்ய ஜெயலலிதாவால் எப்படி முடிந்தது? இதைக் கேட்டதும் நான் எப்படி அதிர்ச்சி அடைந்திருப்பேன் என்பதை நீங்களே நினைத்துப் பாருங்கள்.

**கேள்வி:- நரசிம்மராவை நீங்கள் மூன்று முறை சந்தித்தீர்கள். ஆனால் காங்கிரஸ் தலைமையிலான மூன்றாவது அணியை உருவாக்க முடியவில்லையே?**

ரஜினி:- அவர் இப்படித்தான் உட்காந்து கொண்டார். (நரசிம்மராவ் கன்னத்தில் கைவைத்து எப்படி உட்காருவாரோ அப்படி உட்காந்து காட்டினார்) 'உம், ஆக, நீங்கள் ஆதரவு தருகிறீர்கள் என்கிறீர்கள்' என்று மட்டுமே அவரது உதட்டிலிருந்து வார்த்தைகள் வந்தன. அவரிடமிருந்து எதற்கும் எந்தவித உத்தரவாதமோ அல்லது உறுதியான பிரதிபலிப்போ வெளிப்படவில்லை.

**கேள்வி:- சினிமாவில் நடிப்பதால் மிகவும் களைப்பாகி போனீர்களா?**

ரஜினி:- கடந்த சில ஆண்டுகளாக சினிமாவில் நடிப்பதால் மிகவும் களைப் படைந்து போகிறேன்.

செய்ததையே திரும்பச் செய்வது? ஒரேவிதமான வன்முறை, ஒரே விதமான கதையோட்டம் எனக்கு ஒரு விதமான வெறுப்பை உண்டாக்கி வருகிறது.

பணம் அவசியமானதுதான். ஆனால் அந்த பணத்தாலேகூட சில நேரங்களில் நமக்கு வெறுப்பு உண்டாகி விடுகிறது. அதனால்தான் வருடத்திற்கு ஒருபடம் நடிக்கிறேன்.

ரஜினி நாள் ஒன்றுக்கு 5 முதல் 6 பாக்கெட் சிகரெட் குடிப்பார். அமெரிக்காவில் நியூயார்க்கில் தயானந்த சரஸ்வதி ஆசிரமத்தில் 10 நாட்கள் ரஜினி தங்கியிருந்தார். ஆசிரம சாமியார் மிகவும் கண்டிப்பானவர் என்பதால், குளியலறையில் அமர்ந்து சிகரெட் பிடித்தாராம் ரஜினி. அவரே சொல்லியிருக்கிறார்.

## ஜெயாவுக்கு எம்.ஜி.ஆர் சாட்டையடி

சிங்கப்பூரில் இருந்து வெளிவரும் பத்திரிகை 'தமிழ் முரசு'. உலகம் சுற்று வாலிபன் படப்பிடிப்புக்காக எம்.ஜி.ஆர் தாய்லாந்தின் தலைநகரான பாங்கொக் சென்றிருந்தார். அங்கு வைத்து 'தமிழ் முரசு' நிருபர் எம்.ஜி.ஆரை பேட்டி கண்டார். 1970 அக்டோபர் 18 இல் 'தமிழ் முரசு' வெளியிட்ட பேட்டி இது. பெரும் பரபரப்பை அக்காலத்தில் ஏற்படுத்தியது.

**கேள்வி:- ஜெயலலிதா ஜப்பானில் உங்களைச் சந்தித்ததாக ஒரு பேட்டியிலும், சந்திக்கவில்லை என்று வேறொரு பேட்டியிலும் கூறியுள்ளாரே?**

பதில்:- பச்சோந்திகள் நேரத்துக்கு நேரம் நிறம் மாறினால் என்ன சொல்வோம். அது அதனுடைய இயற்கை. அதுபோல் ஆளுக்கும், இடத்திற்கும் தகுந்தாற்போல் பதில் சொல்பவர்களைப் பற்றி நாம் என்ன சொல்வோம். அவர்கள் வளர்க்கப் பட்ட வழி அப்படி.

**கே: உலகம் சுற்றும் வாலிபன் படத்தில் ஜெயலலிதா நடிப்பதாக ஏற்பாடு இருந்ததா?**

ப: ஆமாம்.....இருந்தது!

**கே: அப்படியானால் ஏன் இப்பொழுது அவரை நடிக்க வைக்கவில்லை?**

ப: அடிமைப்பெண்ணில் சில நடனங்கள் ஜெயலலிதா யோசனைப்படியும், அவர் சொல்லியபடியும் தான் நான் எடுத்தேன் என்று 'குமுதம்' வார இதழில் பேட்டியளித்திருந்தார். அதுமட்டுமின்றி அடிமைப் பெண் படத்தில் வரும் கதாபாத்திரங்களான பவளவல்லி, ஜீவா இருவரும் ஒரே மாதிரி இருப்பதால் இரு கதாபாத்திரங்களுக்கிடையே உள்ள வேறுபாட்டைக் காண்பிப்பதற்கான பவளவல்லியின் சேட்டைத் தன்மையையும் ஜெயலலிதா அவருடைய தனிப்பட்ட கற்பனை என்றே வேறு சில பத்திரிகைகளுக்குப் பேட்டி அளித்திருக்கிறார்.

அதன் பிறகுதான் அப்படிப்பட்ட சிறந்த ஆற்றல் பெற்றவரை, என்னுடைய படத்தில் நடிக்க வைத்து, நான் மட்டும் அவருடைய சிறந்த கற்பனையைப் பயன்படுத்திக் கொள்ளாமல் மற்றவர்களும் பயன்படுத்திக் கொள்ளட்டுமே என்ற பரந்த உள்ளத்தோடு என் படத்தில் நடிக்க அழைக்கவில்லை.



**கே: தாங்கள் இப்படி சொல்கிறீர்கள். சென்ற மாதம் உலகம் சுற்றும் வாலிபன் படமெடுக்க ஆரம்பித்திருந்தால் நான் அதில் நடித்திருப்பேன். இப்பொழுது நான் நடித்துக் கொடுக்க வேண்டிய படங்கள் நிறைய இருக்கின்றன. ஒரு பட முதலாளிக்காக 10 பட முதலாளிகளுக்கு இதனால் சிரமம் என்று இங்கு பத்திரிகை பேட்டியில் கூறினாரே ஜெயலலிதா...?**

ப: இந்தக் கேள்விக்கே இடமில்லையே!

**கே: ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்?**

ப: அவர்கள் என் படத்தில் நடிப்பதால் சுமார் பத்துப் படங்களில் நடிக்கும் வாய்ப்பை இழப்பதாக உங்கள் பத்திரிகைக்குத் தானே பதில் தந்திருக்கிறார். அவர்களை இப்படிப்பட்ட இக்கட்டான நிலைக்கு ஆளாக்குவது எனக்கும் நாகரிகமல்ல. மேலும் அவருடைய பட உரிமையாளர்களுக்கு துரோகம் செய்வது அவருக்கும் நாணயமல்ல!

**கே: எதிர்காலத்தில் தாங்கள் எடுக்கவிருக்கும் படங்களில் அவர் வந்து கேட்டால் வாய்ப்பளிப்பீர்களா?**

ப: முன்னர் பதிலளித்தது போல் பத்து பட முதலாளிகளுக்கு அதனால் சிரமம் ஏற்படாது என அவர் நம்பினால், நான் எடுக்கும் படத்தின் கதைக்குப் பொருத்தமாக இருந்தால் அவர் நடிக்கலாம்.

**கே: நடிப்புத் துறைக்கு ஒரு கல்லூரி வேண்டும் என்று முன்பு தாங்கள் கூறியிருந்தீர்கள். ஆனால் சிவாஜிகணேசன் அவர்கள் பிறந்த நாள் விழாவில் சொற்பொழிவு ஆற்றிய ஜெயலலிதா, நடிப்புக்கலை பயிற்சிக்கு கல்லூரி தேவை இல்லை என்றும், சிவாஜிகணேசன் அவர்கள் நடித்த படங்களைப் பார்த்தாலே போதும் என்றும் கூறியதாகப் பத்திரிகைகளில் பார்த்தேன். தாங்கள் கூறுவதற்கும், ஜெயலலிதா கூறுவதற்கும் நேர்மாற்றமாக இருக்கிறதே இதற்கு தங்கள் பதில் என்ன?**

ப: தமிழ் நாட்டில் நடிகைகள் என்று குறிப்பிடுகையில் சவுகார் ஜானகி, சாவித்திரி, கே.ஆர்.விஜயா, விஜயகுமாரி போன்றவர்களைத்தான் குறிப்பிடுகின்றனர். இதிலிருந்து ஒன்று மட்டும் தெரிகிறது. ஜெயலலிதா தமிழ் நாட்டு மக்களிடமிருந்து இன்னும் நடிகை என்ற பெயரைப் பெற்று விடவில்லை என்று தான் யூகிக்க முடிகிறது. இதிலிருந்து ஜெய லலிதா, சிவாஜிகணேசன் நடித்த படங்களை இன்னும் பார்க்கவில்லையோ என்று தான் நினைக்க வேண்டியிருக்கிறது.

**கே: ஏன் சிவாஜிகணேசன் அவர்கள் நடித்த படங்களை ஜெயலலிதா பார்க்க வில்லையோ என ஐயுறுவதாகச் சொல்கிறீர்கள்?**

ப: அப்படி அவர்கள் பார்த்திருப்பார்களானால் நடிப்புக்கலை தானாகவே வந்திருக்குமே. அது மட்டும் அல்ல. அவர் படங்களைப் பார்ப்பது மட்டுமின்றி அவருடன் நடிக்கும் வாய்ப்பைப் பெற்றிருந்தும் இன்னும் அந்தச் சிறப்பைப் பெறாதது எனக்கு வியப்பாக இருக்கிறது.

**கே: சிவாஜியுடன் நடித்ததை விட, உங்களுடன் தானே அதிகம் நடித்திருக்கிறார் போலிருக்கிறது!?**

ப: ஆமாம்!

**கே: அப்படியானால், உங்களுடன் நடித்துமா அவருக்கு இன்னும் அந்தச் சிறப்புப் பெயர் கிடைக்கவில்லை?**

ப: கற்புள்ள ஒரு பெண்ணின் பாத்திரத்தை ஏற்று, ஒரு பரத்தையின் தன்மையை வெளிக்காட்டி நடித்தாலும் அல்லது ஒரு பரத்தையின் வேடத்தை ஏற்று கற்புக்கரசியாக நடித்தாலும் அந்தப் பாத்திரமும் சோபிக்காது. படமும் வெற்றி பெறாது. நானும் ஜெயலலிதாவும் நடித்த பல படங்கள் வெற்றி பெற்றிருக்கின்றன. அப்படியானால் அவர் ஏற்ற பாத்திரத்துக்குப் பொருத்தமாக நடித்திருக்கிறார் என்பது தான் அதன் பொருள்.

நானும், அவரும் நடித்த முதல் படம் ஆயிரத்தில் ஒருவன். ஆயிரத்தில் ஒருவனில் அவரது நடிப்பிற்கும், அடிமைப்பெண்ணில் இரட்டை வேடங்களில் நடித்த நடிப்பிற்கும் நிறைய வேறுபாடு இருக்கிறது.

முதல் படத்தில் குழந்தைத் தன்மையும், அடிமைப் பெண்ணில் விவரம் தெரிந்த இரு பெண்களின் தன்மையும் வெளிக்காட்டப் பட்டிருக்கிறது. நடிப்பில் மட்டுமல்ல உருவத்திலும். ஆகவே, அவரது உடல், கலைத்திறமை இவைகளின் வளர்ச்சிக்கேற்ப பாத்திரங்களின் தன்மைகளையும் மாறுபடுத்தி அளிக்கப் பட்டிருக்கிறது.

என்னுடன் நடித்த முதல்படமான ஆயிரத்தில் ஒருவனில், அடிமைப்பெண்ணில் கொடுத்த இரட்டை வேடத்தைக்கொடுத்திருந்தால் சின்னஞ்சிறிய குருவியின் தலையில் பனங்காயை வைத்த கதையாக முடிந்திருக்கும்."

ஜெயலலிதாவோடு கசப்புணர்வு நீங்கிய பின்னர் இப்பேட்டியில் உள்ள சில விஷயங்களை மறுத்திருந்தார் எம்.ஜி.ஆர்.

**காதிலை பூ கந்தசாமி இவ்வார ஓய்விற்குப்பின் அடுத்தமுறை தங்களைச் சந்தித்து அசத்துவார். இராமாயணம் அடுத்தவாரம் இடம்பெறும்.**


படிப்பகம்

அருள் ஜீவலர்ஸ்
ARUL JEWELLERS
பெண்களின் அழகோ இரகசியம்!
அதை எங்களது வண்ண நகைகள்
மின்னிப் பேசுகின்றன.
3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
436331




# வீட்டுக்கு வீடு

150 வது முரசுக்கு வாசக நெஞ்சங்கள் தாமாகவே தயாரித்து அனுப்பிய வாழ்த்து மடல்களில் மூன்று மட்டும் இங்கு இடம்பிடித்திருக்கிறது.

முரசுகளுக்கு மத்தியில் கொஞ்சம் ரோஜாக்கள். வீட்டுக்கு வீடு வாசல்படிபோல முரசும் நெகிழவைக்கும் அன்பு! முதல் படத்தில் இருப்பவர்-
பாதிமா பஸ்மிலா, தெல்தொட்ட.
இரண்டாவது படத்தை அனுப்பியவர்-
மரியம் காலித்-கட்டுகஸ்தோட்ட ரோட், கண்டி.
மூன்றாவது படத்தில் பூத்திருக்கும் சின்னரோஜா-க.அருமழகன்- புன்னைச் சோலை, மட்டக்களப்பு.

ஆச்சரியமாக, முன்கூட்டியே திட்டமிட்டு சொல்லிவைத்ததுபோல, இதேபோல நூற்றுக்கணக்கான மடல்கள் கரம் கிடைத்தன.

இனியவர்கள் அனைவருக்கும் என்றும் முரசின் இதயத்தில் இடமுண்டு!

முரசு-உங்கள் வீட்டுப் பிள்ளை!


அம்மன் ஜீவல்
AMMAN JEWEL
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு
மின்னிடும் பொன்னகை பேரழகு
29 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
332033






# சீறும் சின்னது

கடுகு சிறிது- காரம் பெரிது. மிகப் பழைய உதாரணம். ஜெட் சிறிது. வேகம் பெரிது புதிய உதாரணம்.

படத்தில் பறந்து கொண்டிருப்பதுதான் உலகில் மிகச் சிறிய ஜெட். இரு இறக்கைகளுக்கும் இடைப்பட்ட அகலம் ஆக, 5.2 மீட்டர். (17 அடி)

இதன் அதி உயர் வேகம் மணிக்கு 450 கி. மீட்டர்.

இதன் எடை 432 இறாத்தல் மட்டும்தான். அமெரிக்காவில் உள்ள பென் பிசொல் நிறுவனம்தான் இதனை தயாரித்து உலகப் புகழைத் தட்டிக் கொண்டது. உலக சாதனைப் புத்தகமான கின்னஸில் இது இடம்பெற்றுள்ளது.

இதன் சீறிச் செல்லும் வேகத்திற்கு ஏற்ப பெயர் சூட்டியுள்ளார்கள். சில்வர் புல்லெற். அதாவது வெள்ளிக் குண்டு. பொருத்தமான பெயர்தானே!

இதற்கு நேர் எதிரான உலகில் மிகப் பெரிய ஜெட் பொம்பர் விமானத்தின் பெயர் B-52H. எட்டு ஜெட் எஞ்சின்களைக் கொண்டது. இரு இறக்கைகளுக்கும் இடைப்பட்ட தூரம் 56.4 மீட்டர். மணிக்கு 1046 கிலோ மீட்டர் வேகத்தில் செல்லும். வெப்பத்தை வெளிப்படுத்தும் 12 தேர்மோ அணுகுண்டு களை தாங்கிய ஏவுகணைகளை காவிச் செல்லும். அது தவிர 340 கிலோ கிராம் எடையுடைய 4 குண்டுகள், 8 ரொக்கற்றுக்கள் என்பவற்றையும் காவிச் செல்லும். மொத்தமாக 488000 இறாத்தல் பாரத்தைத் தாங்கிச் செல்லும். பயங்கர சண்டைக்கார ஜெட்.







# சாவதற்கு முதலிடம்

பாலஸ்தீன விடுதலைப் போராட்டம் யாசீர் அரபாத்தின் சமாதானக் கொடியையும் ஒதுக்கித் தள்ளிவிட்டு தொடரும் என்பது தான் தீவிரவாதிகளின் பிடிவாதம்.

வெறும் பிடிவாதமல்ல. வாய்ச் சொல்லும் அல்ல. மனிதக் குண்டுகளாக மாறி இஸ்ரேலை ஆட்டிப் படைக்கிறது ஹமாஸ் இயக்கம்.

வாழ்ந்தால் இஸ்ரேல் இல்லாத பாலஸ்தீனத்தில் வாழ்வது. அழிந்தாலும் பாலஸ்தீனத்திற்காக அழிவது. அது தற்கொலைப் போராளிகளது சபதம்.

தற்கொலைத் தாக்குதல், குண்டு வெடிப்புக்கள் என்பவை முக்கியமான ஆயுதமாக மாறிவருகிறது. சாவதற்கு முதலிடம் கொடுப்பவர்களை சமாளிப்பது எப்படி? அங்கும், இங்கும் ஒரேவிதமான கேள்விதான்!

அரபாத் பாடுதான் சங்கடம். தனது முடிவுக்கு முழு பாலஸ்தீனர்களும் கட்டுப்படுவார்கள் என்று அவரால் சொல்ல முடியவில்லை. அவரது உயிருக்கும் ஹமாஸ் குறிவைக்கலாம். இங்கு போல் அங்கும் சகோதர மோதலும் இருக்கிறது.



# நேற்று - இன்று - நாளை

எம்.ஜி.ஆரோடு இணைந்து நடித்த நடிகைகளில் எம்.ஜி.ஆர். ரசிகர்களால் 'அண்ணி' என்றழைக்கப்பட்டவர் ஜெயலலிதா. சிம்லாவில் வைத்து எம்.ஜி. ஆருக்கும், ஜெயலலிதாவுக்கும் பதிவுத் திருமணம் நடந்ததாக வெளியான செய்தியும் அதற்கு ஒரு காரணம்.

எம்.ஜி.ஆரின் இமேஜ் அதனால் கெடும் என்று அவரது எதிரிகள் நினைத்தனர். ஆனால் எம்.ஜி.ஆர். ரசிகர்களோ அந்த நினைப்புக்கு மாறாக ஜெயலலிதாவை அண்ணியாகவே ஏற்றுக் கொண்டனர். அது மட்டுமல்ல இருவரது ஜோடிப் பொருத்தமும் ரசிகர்களுக்கு பிடித்திருந்தது.

அதனால்தான் எம்.ஜி.ஆரின் வாரிசாக ஜெயலலிதா அரசியலிலும் உச்சத்திற்கு வரமுடிந்தது. ஆனால் பதவிக்கு வந்த ஜெயலலிதா எம்.ஜி.ஆரை விட தனது செல்வாக்கு ஒன்றும் குறைச்சலில்லை என்பது போல் நடந்துகொண்டார். அது தவறானது என்பதையும் பின்னர் உணர்ந்து கொண்டார். தேர்தல் நெருங்கும் நேரத்தில் எம்.ஜி.ஆர் பெயரை உச்சரிக்கத் தொடங்கினார். தற்போது எம்.ஜி.ஆர். என்ற மூன்றெழுத்துத்தான் ஜெயலலிதா நம்பியிருக்கும் ஒரே ஆயுதம்.

தேர்தலில் தோற்றால்கூட படுதோல்வி அடையாமல் ஜெயலலிதாவை காப்பாற்றப் போவதும் எம்.ஜி.ஆர். மீது கிராமமக்கள் கொண்டுள்ள வெறித்தனமான பக்திதான்.

தமிழகமெங்கும் தி.மு.க.கூட்டணி அலை பயங்கரமாக வீசுகிறது. அண்ணி என்பதற்காக அவரது தப்புகளையெல்லாம் எத்தனைவிதமான எம்.ஜி.ஆர். ரசிகர்கள் கண்டுகொள்ளாமல் இருக்கப் போகிறார்கள்? மே 8ம் திகதி முடிவுகள் தெரியத் தொடங்கிவிடும்.




[illegible] கொழும்பு கிருலப்பனை [illegible] பீரிஸ், 5ஆம் இலக்கத்தில் தினமுரசு பதிப்பகத்தாரால் 29, [illegible], [illegible] உள்ள [illegible] அச்சகத்தில் மே மாதம் 05 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.